


# 20வது ஆண்டு மலர்

## ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்



**1992 – 2012**






## SRI PALANI THRIFT & CREDIT CO-OP SOCIETY




DUTCH ROAD CHAVAKACHCHERI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 · 234

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1992 - 2012

## ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

டச் வீதி, சாவகச்சேரி.

# 20ஆவது ஆண்டு விழா மலர்

# 20TH ANNIVERSARY SOUVENIR

# 09.12.2012

SRI PALANI THRIFT & CREDIT CO-OPERATIVE SOCIETY,
DUTCH ROAD,
CHAVAKACHCHERI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மலரின் பெயர் | - 20ஆம் ஆண்டு விழா மலர். (1992 – 2012) |
| வெளியீடு | - ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம். |
| முகவரி | - டச் வீதி, சாவகச்சேரி. |
| பதிப்பு | - 09. மார்கழி. 2012. |
| மலராசிரியர் | - திரு.ச.மார்க்கண்டு, (ஆசிரியர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.) |
| இணை ஆசிரியர் | - திருமதி.உருத்திராதேவி சண்முகநாதன், (ஓய்வுநிலை ஆசிரியை)<br>திரு.வை.நாகநாதன், (அதிபர், குடத்தனை அ.த.கா.பா) |
| ஆலோசனையும் வழிகாட்டலும் | - திரு.ம.விவேகானந்தன், (தலைவர் ஸ்ரீ பழநி. சி.க. கூ.சங்கம்.) |
| வடிவமைப்பு | - திரு.சி.பிரசன்னா, (யாழ் பல்கலைக்கழக மாணவன் 2011.) |
| அச்சுப்பதிப்பு | - எஸ்.எஸ்.ஆர். பதிப்பகம், நல்லூர், யாழ்ப்பாணம். |
| பிரதிகள் | - 300. |
| பக்கங்கள் | - i - xliv + 90. |

| | |
|---|---|
| Title | - 20th Anniversary Souvenir. (1992 – 2012) |
| Published by | - Sri Palani Thrift & Credit Co-operative Society. |
| Address | - Dutch Road, Chavakachcheri. |
| Edition | - 09 .December. 2012. |
| Editor | - Mrt.S.Markandu . (Teacher of Chavakachcheri Drieberg College.) |
| Sub Editors | - Mrs.Uruththirathevy Shanmuganathan. (Retired Teacher.)<br>- Mr.V.Naganathan.(Principal of Kudaththanai G.T.M.S.) |
| Guidance & Advice | - Mr.M.Vivekananthan. (President of Sri Palani Thrift & Credit Co-operative Society) |
| Designing | - Mr.S.Prasanna. ( Student of Jaffna University 2011.) |
| Printers | - SSR. Printers, Nallur, Jaffna. |
| Copies | - 300. |
| Pages | - i - xliv + 90. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுக் கீதம்

## பல்லவி

கூட்டுறவு மந்திரத்தை சொல்லுவோமே - இங்கு
கூடிடும் பகை பிணியை செல்லுவோமெ (கூட்டு)

## அனுபல்லவி

நாட்டில் வாழ்வோங்கி நிலை பெறவே - நல்ல
ஞானப் பெரியோர்கள் நாட்டி வைத்த (கூட்டு)

## சரணம

அன்புடனே வாய்மைதனில் நேர்மை கொண்டு
ஆர்வமதால் அனைவருமே ஒன்றாய்க் கண்டு
இன்புடனே பெருவாழ்வில் உழைத்த லென்றும்
உயர்வான கூட்டுறவுக் குயிரா மன்றோ (கூட்டு)

துன்புடனே மக்களிங்கு சோர்ந்த போது
தெய்வம் வந்துற்றதென வந்தணைந்து
தென்புதருங் கல்வி சுதந்திரமும் மேலாம்
தேசபக்தி விவசாயம் செழிக்கச் செய்யும் (கூட்டு)

கூட்டுறவு நெறிகளே வேதமாகும்
கொண்டவற்றைக் கடைப்பிடிப்போர் மேலோராவர்
வாட்டமுறும் தொழிலாளிக் கூட்டாளிக்கும்
வாழ்வளிக்கும் உழவருக்கும் வாழ்வு நல்கும் (கூட்டு)

தேட்டத்தை சீராகப் பேணச் செய்யும்
சேப்புவட்டிக் கொடுமைக்குக் காலனாகும்
நாட்டிற்குக் கூட்டத்தை நல்கவல்க
நலமிக்க வேறொன்று இல்லை என்று (கூட்டு)

சாமியொடு சமயநெறிப் பூசல் போக்கி
சேரும் அரசியல் வாழ்க்கைச் சார்பு நீக்கி
பேதங்கள் தலைதூக்காப் பான்மை யாக்கி
பாரினிலே மாந்தர்க்கு வாழ்வு சேர்க்க (கூட்டு)

பேதமின்றிக் கைவிரல், பொற் திறங்களாக்கி
பேசிவரும் சமத்துவத்தை செயலிற் காட்டி
நீதிமிகு உயர்தெய்வ நாட்டில் இன்பம்
நீர்காணக் கூட்டுறவு நிலைக்கச் செய்வீர் (கூட்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபை (வது)

# கூட்டுறவு கொடிக் கீதம்

**எடுப்பு:**

ஓங்கி எழும் கொடியே ஐக்கியம்
தாங்கிப் போற்றிடும் தக்கவர் பண்பினில்
(ஓங்கி)

**தொடுப்பு:**

வாழ்வளிக்கும் நல்ல வளம்பொருளே - நாடு
தாழ்வையும் தகர்த்திடும் தகவோடு சீராக
(ஓங்கி)

முடிப்பு:

இம்மையில் உள்ள மக்கள் ஈடிலாங்கிருக்க
செம்மையில் தனித்தும் சேர்ந்ததுமே சமமுற
உம்பருள் இந்திரன் உடையகை வில்லின்
செம்பொருள் நிறமெல்லாம் சிறந்தொழி வீசிட
(ஓங்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சிந்தனைகள்

1. கூட்டுறவே நாட்டுயர்வு.
2. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
4. ஒற்றுமை நீக்கின் அனைவர்க்கும் தாழ்வு.
5. ஒன்றுகூடி உழைத்தல்.
6. ஒன்றுகூடி வாழ்தல்.
7. விடாமுயற்சி சுறுசுறுப்பு.
8. சுய உதவி பரஸ்பர உதவி.
9. சிக்கனம் சேமிப்பு.
10. ஒற்றுமை ஐக்கியம் கூட்டுறவு.
11. ஒவ்வொருவரும் அனைவருக்கும் அனைவரும் ஒவ்வொருவருக்கும்.
12. நல்லெண்ணத்துடன் உலக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து.
13. ஒன்றுபட்டால் கோடி நன்மை.
14. ஒருவருக்கொருவர் உதவிகொள்ளுதல் கூட்டுறவின் கொடை.
15. கூட்டுறவு அமைப்பு ஒரு ஒன்றுபட்ட உலக கூட்டுறவுச் சமுதாயமாகும்.

## கூட்டுறவுக் கொள்கைகள்

1. தன் விருப்பார்ந்த தடையற்ற அங்கத்துவம்.
2. ஜனநாயக நிர்வாகமும் கட்டுப்பாடும்.
3. அங்கத்தவர்களின் பொருளாதார பங்களிப்பு.
4. சுதந்திரமாகவும் சுயமாகவும் செயற்படல்.
5. கல்வி பயிற்சி தகவல் திரட்டல்.
6. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு.
7. சமூக மேம்பாடு.

**கூட்டுறவின் அடிப்படைப் பண்புகள் மூன்று வகைப்படும். அவை பின்வருமாறு-**

1. சுய உதவி.
2. பரஸ்பர உதவி.
3. சிக்கனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்



திரு.ம.விவேகானந்தன்

செயலாளர்



திருமதி. சு. துர்க்கரன்

பொருளாளர்



திருமதி. ஸ்ரீ. பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. சு. துர்க்கரன்
திரு. ம. விவேகானந்தன்
திருமதி. ஸ்ரீ. பரமநாதன்

இடமிருந்து வலம் நிற்பவர்கள்:-
திருமதி. ப. வைத்திலிங்கம்
திருமதி. கூ. நந்தாயினி
திருமதி. ஸ்ரீ. அனிஸ்ரன்
திருமதி. ம. உதயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்காய்வுக்குழு-2012



திருமதி.த.இராகுலன்
திருமதி.வ.முத்துலிங்கம்
திருமதி.ந.சிவபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் குழுவினர்கள்



இடமிருந்து வலம் நிற்பவர்கள்– திருமதி.த.இராகுலன் திருமதி.ஸ்ரீ.பரமநாதன் திருமதி.சூ.நந்தாயினி திருமதி.சு.துர்ககரன் திருமதி.ப.வைத்திலிங்கம்

இடமிருந்து வலம் இருப்பவர்கள்– திரு.வை.நாகநாதன் திரு.ச.மார்க்கண்டு திரு.ம.விவேகானந்தன் திரு.வை.இராசரத்தினம் திருமதி.உ.சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச்சபை உறுப்பினர்கள்-2012



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய ஐயாவின் அருளாசிச் செய்தி



ஸ்ரீ பழநி ஆண்டவரின் அருளாசியுடன் டச் வீதி, சாவகச்சேரியில் இயங்கிவரும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் 20ஆவது ஆண்டில் கால்பதித்து நிற்பதை எண்ணி அனைவரும் மனமகிழ்வு அடைவதோடு பெருமிதம் கொள்கின்றோம். இவ்வேளையில் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் இம்மலர் வாயிலாக நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இருபது ஆண்டுகளாக இக்கிராமத்தில் பல்வேறு சிரமங்களையும் பாரிய சவால்களையும் எதிர்கொண்டபோதும் சிக்கனக் கடனுதவு பணியிலும், நன்கொடை வழங்குவதிலும் தளர்வடையாது அர்ப் பணிப்போடு உழைத்து, சங்கத்தை வளர்த்தெடுத்த கடந்தகால நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

மேலும் இச்சங்கத்தை உன்னதநிலைக்கு உயர்த்திச்செல்லும் நோக்கோடு இன்று மிகுந்த அர்ப்பணிப்போடு உழைத்துவரும் உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

எதிர்காலத்தில் இச்சங்கம் மேலும் பெருவிருட்சமாக வளர வேண்டும்; இதன் பணிகளும் விஸ்தரிக்கப்படவேண்டும்; கடனெல்லை, உறுப்பினர்களின் எண்ணிக்கை இவை அனைத்துமே முன்னேற்றம் அடையவேண்டும். இதன் பொருட்டு உழைக்கும் அனைவருக்கும் ஸ்ரீ பழநி ஆண்டவரின் அருளாசிகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

பிரம்மஸ்ரீ. கு.குணதேவசர்மா
ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியத் திருச்சபைக் குருவின் வாழ்த்துச் செய்தி.



இறை நம்பிக்கையுடன் தூய்மையான சமூகப் பணிதனை ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் கடந்த 20 ஆண்டுகளாக செய்திருக்கும் மகத்தான பணிதனைப் பார்த்து எல்லாம் வல்ல இறைவனைப் போற்றி இச்சிறப்பான பணிதனை செய்துகொண்டிருக்கும் அனைத்து தூய உள்ளங்களையும் முதற்கண் வாழ்த்திப் பணிவதில் சாவகச்சேரி தொன்னிந்தியத் திருச்சபை குருவின் அருட்.திரு.A.K.செல்வநாயகம் ஆகிய நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இயேசுபிரான் கூறியதுபோல உன்னைப்போல் பிறரையும் நேசிப் பாயாக என்னும் தூய சிந்தனையை மனுக்குலத்தில் யார் நிறை வேற்றினாலும் அவர்கள் உயர்த்தவர்கள், மதித்து வாழ்த்தப்பட வேண்டியவர்கள்.

ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவி பெறுவோர் அனைவரும் சமூகத்தில் பல்வேறு தேவையுடன் தத்தளிப்பவர்கள்; அதிலிருந்து மீண்டும் சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ விரும்புவோர். அத்துடன் இச்சங்கம் சமூகத்தில் உண்மையாகத் தேவைப்படுவோரை இனம் கண்டு தங்களால் ஆன சிறப்புப் பணியினை இலவசமாக செய்து வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இச்சிறப்பான தூய பணியினை 20 ஆண்டுகளாக செய்வதற்கு தங்களை அர்ப்பணித்திருக்கும் அனைத்து உள்ளங்களையும் சிரம் தாழ்த்திப் பாராட்டுகிறேன். 20 ஆண்டுகளின் நிறைவைக் காணும் இச்சங்கம் பல நூற்றாண்டுகள் இன்னும் அதிக பணிகளைச் செய்வதற்கு இறையாசி கூறி, என் உள்ளம் கனிந்த வார்த்தைகளால் பாராட்டி முடிக்கின்றேன்.

அருட்.திரு.A.K.செல்வநாயகம்
தென்னிந்திய திருச்சபை
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஜும்மா பள்ளிவாசல் மௌலவியின் ஆசிச்செய்தி.



சாந்தியும் சமாதானமும் இம்மைப்பயணத்தில் எம்மிடையே மிளிரட்டும்!!!

யாழ் நகரில் சிறு நகராம் சாவகச்சேரி விளங்க, வாரியிறைக்க வந்ததாம் வறுமையை ஒழிக்கத் தந்ததாம் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் யாமவன் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எம்மவர்கள் எல்லோரும் ஒருவரே. எம் நாட்டில் பிறந்த அனைவரும் சிறந்தோங்க இயங்கி வரும் இந் நிறுவனத்தின் சேவைகளைக் கூறிட இவ்விடம் போதாது. தலைமைத்துவப்பணிகள், ஆன்மிக லௌகீகப்பணிகள், சிறந்த திட்டமிட்ட பணிகள், நாட்டிற்கும் வீட்டிற்கும் சிறந்த நற்பிரஜைகளை உருவாக்க உதவிவரும் பணிகள், வறுமையிலிருந்து மகிழ்ச்சி பெறுவதற்கான உதவிகள் இன்னும் பல தேவை இம் மக்களுக்கு. எனவே மேலும் மேலும் தமது பணிகளை ஓங்கச்செய்வதற்கு அந்த இறைவனின் அருள் கிடைக்கவேண்டி, மேலும் இந்நிறுவனமானது இவ்விடத்தில் தனது பணியை நிலை நிறுத்தாமல் அனைத்து இடங்களிலும் தமது கைகளை உயர்த்தி இன்னும் வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, நூற்றாண்டுவிழா என என்றும் சிறப்புடன் புகழ்பெற்று மணம்வீச வல்லவனின் அருள் வேண்டுமென ஆசி கூறுகிறேன்.

அ.மு.நதூர்.மு, (மௌலவி)
சாவகச்சேரி முகைதீன் ஜும்மா பள்ளிவாசல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



தென்மராட்சிப் பிரதேசத்தின் டச்வீதிக் கிராம மக்களின் வளர்ச்சியினையும், சமூக முன்னேற்றத் தினையும் நோக்காகக் கொண்டு 1992ம் ஆண்டு தோற்றம் பெற்ற ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது 20 வருடகால சேவையினை நிறைவு செய்திருப்பதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தகைய கிராம மட்டத்திலான சங்கங்கள், தமது செயற் திறனினால் உச்சப் பயன்பாட்டைப் பெற்று அதன் மூலம் தமது அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிகாட்டியாய் நின்று, அவர் களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது பாராட்டுக்குரியதாகும். இந்த வகையில் ஆரம்பத்தில் 25 உறுப்பினர்களுடன் இயங்கிவந்த ஸ்ரீ பழனி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது தற்போது 43 அங்கத்தவர்களுடன் இயங்குவது, ரூ.2000/- வீதம் வழங்கப்பட்டுவந்த கடன் தற்போது ரூ 100000/- ஆக அதிகரித்துள்ளமை, சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டங்கள், நிர்வாகசபைக் கூட்டங்களுக்கு ஒழுங் காக வருகை தருபவர்களுக்கு பரிசில்கள் வழங்குதல், அங்கத்தவர் களுக்கு அத்தியாவசியப் பொருட் கொள்வனவிற்கான கடன் வழங்கு தல், சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் தரம் 5, க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தியெய்துபவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கி வருதல், பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும் ஊன முற்றவர்களுக்கும் உதவிப்பணம் வழங்கி வருதல் போன்ற செயற் பாடுகள் இச்சங்கத்தின் வளர்ச்சிப்போக்கினை எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு டச் வீதி மக்களின் வாழ்வாதாரத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் வழிகாட்டியாய்த் திகழும் ஸ்ரீ பழனி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச்சங்கம் மென்மேலும் வளர்ச்சியடைந்து பயனுள்ள பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், இச் சங்கத்தின் 20 வருட நிறைவை யொட்டி வெளியிடப்படும் மலருக்கு நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சு.அருமைநாயகம்
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர்
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேசச் செயலரின் வாழ்த்துச் செய்தி.



ஒவ்வொரு மனிதனுக்கும் பணம் என்பது மிக மிகத் தேவையான ஒரு வளமாகும். ஆனால் அந்த வளத்தை எவ்வாறு மீதப்படுத்துவது? எதிர்காலத் தேவைக்கும் அவசர நிலைமைகளிலும் எப்படி உபயோகப்படுத்துவது? என்பது சற்றுக் கடினமான வினாவாகும்.

அந்த வேளையில் தான் இவ்வாறான சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் பணி போற்றுவதற்குரிய விடயமாக அமைகின்றது. சிக்கனம், சேமிப்பு என்பவை அன்றாட வாழ்விய லோடு பின்னிப்பிணைந்து வளர்ச்சியுற வேண்டிய விடயங்களாகும். இச்சங்கங்கள் போதித்த வழிமுறையினையே தற்போது வங்கிகள் கடைப்பிடித்து வருகின்றன. ஆனால் வங்கி நடைமுறைகள் கையாளுகைக்கு இலகுவானவையல்ல. “சிறு துளி பெரு வெள்ளம்” என்ற முதுமொழிக்கமைய சிறு வயது முதலே நாம் சிறுகச் சிறுகச் சேமிக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

ஆகவே இவ்வாறான சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங் களின் பணி, அபிவிருத்தி அடைந்து வரும் மக்களுக்கும் பிரதேச த்திற்கும் மிகப் பயனுடையதொன்றாகும் என்பதில் ஐயமில்லை.

“வாழ்க சங்கங்களின் பணி
வளர்க பொருளாதார நிலைமை”.

**திருமதி. அ. சாந்தசீலன்**
**பிரதேச செயலர்**
**பிரதேச செயலகம்,**
**தென்மராட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது 20வது ஆண்டு நிறைவினை கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சங்கமானது 25 அங்கத்தவர் களுடன் 07-09-1993 ஆம் ஆண்டு J/2147 இலக்கத்தில் கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுச் சிறப்பாக இயங்கிவருவதுடன் தற்போது 43 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அங்கத்தவர்களுக்கு வழங்கின்ற தனியார் கடனின் அளவு ரூபா 100000 ஆக அதிகரித்துச் சிறப்பான முறையில் கடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இச்சங்கத்தின் 31-12-2011 ஆம் திகதியில் உள்ள ஐந் தொகையில் மீதி இலாபமாக ரூபா 28670.35 சதத்தை பெற்றுள்ளது. அங்கத்தவர்களின் சமூக பொருளாதார கலாச்சார விழுமியங்களைப் பாதுகாத்து, யாழ் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை தற்பொழுது நற் பெயருடன் விளங்குவதற்கு உதவுவனவாக இத்தகைய சங்கங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினைத் திறமை யாக வளர்ச்சியடையச் செய்த கடந்தகால, தற்காலத் தலைவர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், பொதுச்சபை அங்கத்தவர்கள் அனைவ ருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இச் சங்கத்தின் அங்கத்தவர்களினதும், கிராம மக்களினதும் நலன்கருதிக் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைய சிறப்பாக இயங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

"ஒன்று கூடி உழைப்போம்"
"ஒன்று கூடி மகிழ்வோம்"

வி.கே.அருந்தவநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ் மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி.



இயற்கை எழில் பூத்த தென்மராட்சிப் பதியின் சாவகச்சேரி நகரிலே

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"
"கூட்டுறவே நாட்டுயர்வு"
"எம் கடன் பணி செய்து கிடப்பதே"

எனும் சான்றோர் வாக்குகளுக்கு இலக்கணமாக ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது தனது சேவையில் சிறப்புடன் செயலாற்றி இரு தசாப்தங்களை நிறைவு செய்வதனையிட்டு வெளி யிடவுள்ள ஆண்டு மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். ஆரம்பகாலத்தில் 25 உறுப்பினர்களுடன் செயற் படத் தொடங்கிய இக் கூட்டுறவுச் சங்கமானது அவசிய தேவைச் சிறுகடன் வழங்கல் 2000 ரூபாவில் ஆரம்பித்து இன்று 100000 வரை கடன் வழங்கும் நிலையை அடைந்துள்ளமை பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடேயாகும். இக்கடன் மட்டுமன்றி, துவிச்சக்கர வண்டிக் கடன் மற்றும் மாதர்களிற்கு வாழ்வாதாரமாகத் தையல் மெசின் கடன் எனப் பல்வகைக் கடன்களை விஸ்தரித்துள்ளமை சங்கத்தின் செயற் பாட்டுத்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.

அறிவுக்கண்ணைத் திறந்து விடும் கல்வியின் சிறப்புக் கருதி முன்பள்ளிச் சிறார்களுக்கு அன்பளிப்பு வழங்கியும், பொதுப் பரீட்சைகளில் மேல் நிலையடையும் அங்கத்தவர்களின் பிள்ளை களுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கிக் கௌரவிக்கின்றமையும் மற்றும் குறித்த பகுதியில் வசிக்கும் பெற்றோர்களை இழந்த பிள்ளை களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் உதவித்தொகைகள் வழங்கு கின்றமை போன்ற சேவைகளைச் செவ்வனே ஆற்றி வருகின்றமை அளப்பெரும் பணிகளாகும்.

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது மேலும் பல இன்னோரன்ன சேவைகளையாற்றி மேன்மேலும் தனது பணியில் சிறந்து விளங்கிடவும், ஆண்டு மலர் புதுப்பொலிவுடன் சிறப்புறவே மலர்ந்திடவும் எல்லாம் வல்ல பழநி ஆண்டவரை வேண்டி நல் வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

வாழ்க பல்லாண்டு! வாழிய! வாழியவே!!!

கு. பிறேமகாந்தன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் வாழ்த்துச்செய்தி.



"மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும் மகுட வாசகத்திற்கிணங்க சாவகச்சேரி டச் வீதி வாழ் மக்களுக்கு காலத்தின் தேவைக்கேற்ப கனிவான தரமான நிறைவான சேவையை ஆற்றும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அகவை இருபதினைப் பூர்த்தி செய்வதனையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

1992ஆம் ஆண்டு தொடக்கம் இன்று (2012) வரை இருபது ஆண்டுகள் அறாத்தொடர்ச்சியாக சாவகச்சேரி வாழ் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளிலிருந்து வாழ்வாதாரத் தொழில் முயற்சிகள் வரை தேவையான மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி வருவதில் தனக்கு நிகர் தானே என்பதனை சங்கத்தின் சேவைகள் பறைசாற்றி நிற்கின்றன. இதற்கு முன்னோடியாகவும் செயற்றிறன் மிக்க தலைவராகவும் சேவையாற்றி வரும் திரு.மகாலிங்கம் விவேகானந்தன் உட்பட்ட குழுவினருக்கு, பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

அடிப்படை சிறு கடன்வசதி என ஆரம்பித்து வாழ்வாதார உதவிகளான தையல் இயந்திரத்திற்கான கடன், துவிச்சக்கரவண்டிக் கடன் மற்றும் மாறிவரும் சமூகத்துடன் எல்லோரும் ஒத்ததான வாழ்க்கைக்குத் தேவையான வீட்டு உபகரணங்களுக்கான கடன், சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வித்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குதல், சமூகத்தில் தாய் தந்தையை இழந்த மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளுக்கான ஊக்குவிப்புத் தொகைகள் மற்றும் வங்கிக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என, பன்முகப்பட்ட சேவையினை ஆற்றிவரும் இச்சங்கம் கடனுதவிகளோடு மட்டும் நின்றுவிடாது இனி வரும் காலங்களில் மக்களுக்கான சுகாதாரப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் மிகுந்த பயனைத் தரும். இருபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் இச்சங்கம் இன்னும் பலநூறு ஆண்டுகள் தொடர்ந்தும் பல்பரிமாணச் சேவைகளைச் சிறப்பான முறையில் ஆற்றவேண்டி வாழ்த்துகின்றேன்.

வைத்தியகலாநிதி க.தயாளன்.
சுகாதார வைத்திய அதிகாரி,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகரசபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி.



சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 20ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு, வரலாற்றுப் பதிவேடாக வெளியிடப்படும் ஆண்டு மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெரிதும் உவகை அடைகின்றேன்.

சாவகச்சேரி நகர் கிராம அலுவலராக இருந்த திரு. வை. இராசரத்தினம் அவர்களின் தலைமையில் 24.10.1992 இல் சாவகச்சேரி டச் வீதி அகிலாண்டம் சனசமூக நிலையத்தில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, இரு தசாப்தங்களை தொட்டு, இப்பிரதேச மக்களிற்கு அளப்பரிய சேவையாற்றி வருகின்றது.

சமூகத்தில் மனிதனது வாழ்விற்கு பொருளாதாரப் பலம் முக்கியமானதாகும். அதனைக் கருத்திற்கொண்டு பொருளாதாரப் பலம் குறைந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் கடனுதவிகளை வழங்குவதுடன், வங்கிகள் மூலம் சுயதொழில் கடன்களைப் பெற்றுக் கொடுத்தும் இச்சங்கம் சேவையாற்றி வருகின்றது. மக்களிற்கான சிக்கன அடிப்படையிலான கடன்களை வழங்குவதை நோக்காகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட இச்சங்கமானது பெயருக்கு அப்பால் சென்று பல்வேறுபட்ட உதவித்திட்டங்களைப் பிரதேச மக்கள் மத்தியில் ஆற்றிவருவதுடன் அங்கத்தவரின் குடும்பத்தினருக்குப் பல ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் செய்து வருகின்றமை யாவரும் அறிந்ததே.

இக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு அல்லும் பகலும் அயராது சேவையாற்றும் சங்க உறுப்பினர்களது ஒத்துழைப்புடன் மேன்மேலும் இக்கூட்டுறவுச் சங்கம் வளர்ந்து பிரதேசத்திற்கு உயர் சேவை வழங்கிச் சாதனை படைக்கவேண்டும் என்றும் இம்மலர் வெளியீடு சிறப்பாக அமையவும் இறையருள் வேண்டி எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சு.புத்திசிகாமணி.
(செயலாளர்)
நகராட்சிமன்றம். சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாவகச்சேரி அஞ்சல் அதிபரின் வாழ்த்துச் செய்தி.

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இரண்டு தசாப்தங்களாக மக்களுக்கு அளப்பரிய சேவையினை வழங்கித் தனது 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி மலர் வெளியீட்டினை நடாத்துவதையிட்டு பேருவகையடைகிறேன்.

அத்துடன் மக்களின் பொருளாதார வளத்தினை மேம்படுத்திச் சுயதொழிலுக்கான கடன் வழங்குவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

பிள்ளைகளின் கல்விக்கும், ஊனமுற்றோருக்கும் நிதி உதவி வழங்கி வருவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இச் சங்கத்தின் பணியானது மேன்மேலும் வளர்வதற்குப் பழநி ஆண்டவரின் ஆசியைவேண்டி வாழ்த்துகிறேன்.

**இ.தயாபரன்.**
**அஞ்சல் அதிபர்.**
**சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி மத்தியஸ்த சபைத் தவிசாளரின் வாழ்த்துச் செய்தி



சாவகச்சேரி டச் வீதியில் இயங்கிவரும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது இருபதாவது ஆண்டு நிறைவு செய்யும் நிகழ்வானது எல்லார் மனதுக்கும் இதம் தரும் செய்தியாகும்.

சென்ற 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுத்துறை சார்ந்த இச் சங்கம், பல இடர்களிற்கு மத்தியிலும் தொடர்ந்து சேவையாற்றி, இன்று சாவகச்சேரி பிரதேசத்தில் புகழ்பெற்ற ஒரு அமைப்பாகத் திகழ்கின்றது.

குறைந்த வருமானத்தைப் பெறுவோருக்குக் கடன் வழங்கவும் மற்றும் அத்தியாவசிய வீட்டு உபகரணங்களையும் கடனுதவியில் வாங்குவதற்கும் பல்முனை வலைப்பின்னல்களை கவர்ச்சியான வகையில் வழங்கும் இப்போதைய காலகட்டத்தில் இச்சங்கம் கடனுதவும் செயற்பாட்டில் வளர்ச்சியுடன் களத்தில் சாட்சியாக விளங்குவது பாராட்டுக்குரியது.

ரூபா ஒரு லட்சம் கடனாக அங்கத்தவர்களுக்கு வழங்கிய பெருமையுடன் இயங்கும் சிறந்த முகாமைத்துவக் குழு சமூகத்தின் நன்றிக்குரியதாகும். அத்துடன் மீளச்செலுத்தாத கடனாளிகள் யாரையும் மத்தியஸ்த சபைக்கு முன்வைக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை என்பதை நான் அறிவேன். எதிர்காலத்தில் இச் சங்கம் ஆல்போல் தழைத்து சாவகச்சேரியின் அயற்கிராமப் பிரிவுகளுக்கும் தனது அங்கத்துவத்தைப் பரப்பி, கூடிய அளவிலான சேவைகளை நாடி வரும் மக்களுக்கு வழங்கவேண்டுமெனவும், விழா சிறப்புறவும் எனது மனமுவந்து வாழ்த்துரைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

ப.நடராசா.ஜே.பி.

தவிசாளர் மத்தியஸ்த சபை சாவகச்சேரி.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்றப் பதிவாளரும்

சத்திய மும்மொழி மொழிபெயர்ப்பாளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 20வது ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இச்சங்கமானது 25 அங்கத்தவர்களுடன் சென்ற 24-10-1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சென்ற 07-09-1993ல் இலக்கத்தில் கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு, சிறப்பாக இயங்கி வருவதுடன் தற்போது 43 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. தென்மராட்சி பிரதேசத்தில் குறித்த நேரத்திற்கு நிர்வாகசபை, மாதாந்த பொதுகூட்டம், வருதுடாந்தப் பொதுக்கூட்டங்களை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அங்கத்தவர்களுக்கு வழங்கின்ற தனியார் கடனின் அளவு 2000/= இலிருந்து தற்போது 100000/= வாக அதிகரித்து சிறப்பான முறையில் கடன் நடவடிக்கைகளினை மேற்கொண்டு வருகிறது. சங்கம் வளர்வதுடன் அங்கத்தவர் நலன் களிலும் விசேட அக்கறை காட்டி வருகின்றது. அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அவர்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக குறிக்கப்பட்ட தேவைக்கே கடன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சென்ற 2011ம் ஆண்டு கணக்காய்வு அறிக்கையின்படி அங்கத்தவர்களின் சேமமாக ரூபா 986433.86 சதமும், வங்கி வைப்பாக ரூபா 434749.88 சதமும் அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்கி, வருமதியாக ரூபா 682000.00 காணப்படுகின்றது. இச் சங்கத்தின் செயற்பாடு தொடர்ந்தும் வளர்ச்சி அடைந்து செல்வதனை அவதானிக்கமுடிகின்றது.

சமூக பொருளாதார செயற்பாடுகளில் தமது பங்களிப்பை செய்து வரும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் பாராட்டப்படக்கூடியவை.

இக் கூட்டுறவுச் சங்கத்தினை திறமையாக வளர்ச்சியடையச் செய்த கடந்தகாலத் தற்காலத் தலைவர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், பொதுச்சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இச் சங்கத்தின் அங்கத்தவர்களினதும், இக் கிராம மக்களினதும் நலன் கருதிச் சிறப்பாக இயங்க, எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திருமதி. மாலினி இராஜசிறி**
**கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம்**
**கைதடி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகர சபை எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்துச் செய்தி.



ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் என்ற வகையிலும் சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலும், இந்நிர்வாகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றேன்.

உங்கள் விடாமுயற்சியையும் நேர்மையையும் நான் என்றென்றும் பாராட்டுவதுடன், ஜே/300 சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்த காலத்திலும், நிர்வாகக் கட்டமைப்பு சீர் குலையாமல் சமூகத்திற்குத் வேவையான சுய அபிவிருத்தித் திட்டச் சேவைகளை முன்னெடுத்து, இன்று முழுச் சமூகத்திற்கும் முன்னு தாரணமாக மிளிரும் சாவகச்சேரி நகர் புகழ் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இஞ்ஞாலத்தில் என்றென்றும் மேலோங்கி வாழ்க வளர்க என்று இதய சுத்திகரிப்புடன் மனதார வாழ்த்துகின்றேன்.

**எம். எஸ். அலெக்ஸாண்டர் சார்ள்ஸ்.**
**(ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளரும்**
**சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவரும்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபரின் நல் வாழ்த்துக்கள்



இருபதாம் ஆண்டில் இனிதே காலடி எடுத்து வைத்திருக்கும் ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். டச் வீதி வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இச்சங்கம் ஆற்றிவரும் பணிகள் மகத்தானவை.

கடன் வழங்குதல், பரீட்சைகளில் சித்திபெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தல், மாற்றுவலுவுடையவர்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள் போன்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுதல் என அதன் பணிகள் கணக்கிலடங்கா.

அந்த வகையில் புதிய அகவையில் இன்னும் பல பணிகளைச் செய்து, பிரதேச மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் சங்கம் வெற்றி நடை போடவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

க.அருந்தவபாலன்
அதிபர்
யா/சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமகிரியா கலாபூஷணம் சிவஸ்ரீ தி.கிருஸ்ணமூர்த்திக் குருக்கள். B.A அவர்களின் வாழ்த்துரை



குன்றுகள் தோறும் குடியமர்ந்து குலம் காக்கும் குமரன் சாவகச்சேரி நகர் டச் வீதியில் ஸ்ரீ பழநி ஆண்டவராக அமர்ந்திருந்து அருள் புரிய அவன் நாமம் சூட்டி 1992ல் ஆரம்பமாகிய ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் 20வது ஆண்டு நிறைவில் அதனது சேவையின் பெருமிதம் தாங்கி வெளிவரும் மலர், மணம், கமழ இறையடி பணிந்து மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன். மேற்படி இச்சங்கம் இடப்பெயர்ச்சிக்கும் நாட்டின் இடர்பாடுகளுக்கும் முகங் கொடுத்து எதிர் நீச்சல் போட்டு தளராது வளர்ச்சி கண்டு எழிச்சி பெற்று நிற்கின்றது. ஒரு சங்கத்தின் வளர்ச்சி என்பது சாதாரண விடயமாகக் கருதி விடமுடியாது. இச்சங்கத்தின் உரிய வளர்ச்சிக்கு முதற்படியாக அமைந்தது மக்கள் தேவை அறிந்த சேவையாகும். அது எப்படியெனில், ஒரு முட்டையிலிருந்து வரும் குஞ்சுக்கு தீன் கொடுத்து பாதுகாப்பு வழங்கிய தாய்ப்பறவை பின்பு குஞ்சு சுயமாக சுதந்திரமாக பறந்து இரைதேட வழிவகுப்பது போல், தன் அங்கத் தவர்களையும் இச்சங்கம் சுயகௌரவத்துடன் வாழ வழிவகுத்துச் சாதனை புரிந்தமையாகும். அச்சாதனைகள் யாவற்றையும் இங்கு பட்டியலிட்டுக் காட்டிவிடமுடியாது இருப்பினும் சில முக்கியமான விடயங்களை குறிப்பிடுவது சாலச் சிறந்தது.

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் என்று ஒன்று உள்ளது என அறிந்து, அதன் செயற்பாடுகளால் அங்கத்தவர்கள் பெறும் நன்மைகளடங்கிய விபரங்களை அறிந்து, அவற்றைச் சாவகச்சேரி டச் வீதி மக்கள் சிலருடன் கலந்துரையாடி 1992 இல் இச்சங்கத்தின் அங்குராப்பணத்திற்கு வித்திட்டவராகிய திரு.ம.விவேகானந்தனது முயற்சி ஓர் அரும் பெரும் சேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முதல் இன்று வரை சங்கத்தோடு இணைந்து நிர்வாக சபையில் செயலாளராக செயற்பட்டு அதன் தொடராகவே இன்று அவர் தலைமையில் 20ஆவது ஆண்டு நிறைவு விழா நடைபெறுவது என்பது திரு.விவேகானந்தனின் உழைப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அத்துடன் இவரோடு இணைந்த நிர்வாக உறுப்பினரும், பொதுச்சபை அங்கத்தவர்களும் காட்டும் ஒற்றுமையுடன் கூடிய ஒத்துழைப்பும் ஆதரவும் சங்க மலர்ச்சியில் வெள்ளிடை மலையாகத் தெரிகிறது.

இதன் விளைவாகத்தான் அன்று 1994 இல் 2000/= வீதம் ஆறு அங்கத்தவர்களிற்குக் கடன் வழங்கிய இச்சங்கம், இன்றோ 150000/= வீதம் பத்து அங்கத்தவர்களிற்கு, சாவகச்சேரி மக்கள் வங்கியினுடாக சுயதொழில் கடனாகப் பெற்றுக்கொடுத்தது. அது மட்டுமல்லாமல் பல்வேறு ஊக்குவிப்புப் பரிசில்களையும் வழங்குகின்றது. இந்த வகையில் அங்கத்தர்களின் பிள்ளைகளாகிய ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்கும், கல்வி பொதுத் தராதரப் (சாதாரணம்) பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களிற்கும் மேலும் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக் கழகம் புகும் மாணவர்களிற்கும் பரிசில் வழங்கி ஊக்குவிப்பது சங்கத்தின் சிறப்பம்சமாகும்.

இவற்றை விட பொதுச்சேவையாக, புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்துக்கு சிறப்பான ஓர் ஊஞ்சலும், ஜே/300 கிராம அலுவலர் பிரிவு பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும், ஊன முற்றோருக்கும் வருடாவருடம் நிதியுதவியும் வழங்கி ஆறுதல் படுத்துவது மிக உயர்ந்த சேவையாகும். மொத்தத்தில் இவை மக்கள் மனது அறிந்த சேவையாகும். இதனையே வள்ளுவன்

**காலத்தால் செய்த உதவி சிறிதெனினும்**
**ஞாலத்தில் மாணப்பெரிது**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுகின்றார். 1994ம் ஆண்டு J/300 சாவகச்சேரி நகர கிராம அலுவலராக இருந்த திரு. வை.இராசரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இச்சங்கத்தின் ஆரம்பத் தலைவராக திரு. இ. இராஜகுலசிங்கம் அவர்களும், செயலாளராக திரு. ம. விவேகானந்தன் அவர்களும், பொருளாளராக திரு. சி. இரவீந்திரநாதன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு 25 அங்கத்தவர்களுடன் உதித்த சங்கம், இன்று பெருமளவு அங்கத்தவரை உள்வாங்கி அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்த வண்ணம் ராஜநடை போடுகின்றது. **"கட்டிக்கொடுத்தசோறும் (கட்டுச்சோறு) சொல்லிக்கொடுத்த வார்த்தையும் ஒரு நாளில் தீர்ந்துவிடும்"** அது போலவே அடுத்தவன் கையை நம்பி வாழாமல் மீனுக்குப் பதிலாகத் தூண்டிலைக் கொடுப்பவன் போல, சுயதொழில் மூலம் சுதந்திரமாக வாழ வழிவகுத்திடும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா என நூற்றாண்டு விழாவையும் கண்டு ஓங்கிட, ஸ்ரீ பழநி ஆண்டவன் பாதம் பணிந்து உளமார வாழ்த்துகின்றேன்.

எல்லோரும் இன்பம் அடைக!!!

சுபமஸ்து.

**சிவஸ்ரீ.தி.கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்**

**ஆசிரியர் யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்**

**பிரதமகுரு விடத்தற்பளை சம்பாவெளிப் பிள்ளையார் ஆலயம் நுணாவில் வீரபத்திரர் ஆலயம் மட்டுவில் தெற்கு கண்ணன் ஆலயம் சுன்னாகம் சிவபூதராயர் ஆலயம் கல்வயல் ஐயனார் ஆலயக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமையாள்புரம் கண்ணகை அம்பாள் பரிபாலனசபைத் தலைவர் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை.



தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி நகரில் அருள்ஒளி வீசி அடியார்களனைவருக்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் தன்னகத்தே ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மலர்க் குழுவினரால் வெளியிடவிருக்கும் ஆண்டு மலருக்கு வாழ்த்துரை வழங்கவேண்டுமெனச் சங்கத்தின் தலைவர் திரு. மகாலிங்கம் விவேகானந்தன் அவர்கள் கூறிய பொழுது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இம் மலருக்கு நீங்கள் வாழ்த்துரை ஒன்று தந்துதவ வேண்டுமெனக் கேட்டபொழுது நான் மேலும் அகமகிழ்வு கொண்டேன். இன்று எமது நாட்டில் எத்தனையோ சங்கங்கள் வரலாறு தெரியாத வகையிலிருந்து கொண்டிருக்கின்றன. எத்த னையோ சங்கங்கள் பரவலாக்கப்படாமல் பத்துப் பதினைந்து உறுப்பினர்களுடன் இருக்கின்றன. வருங்காலத்தில் எமது இளஞ் சந்ததியினர் ஏன் பாமரமக்கள் கூட அறிந்து கொள்ளும் வகையில் சங்கங்களின் வரலாறு செயற்பாடுகள் எழுதப்பட்டு பேணப்படல் வேண்டும்.

இச்சங்கமானது பல ஆண்டுகளாக தனது உறுப்பினருக்குக் கடனுதவி, படிப்படியாக ஏறு நிரையில் இரண்டாயிரம் ரூபாவிலிருந்து ஒருலட்சம் ரூபா வரை சிறுதுளி பெருவெள்ளம் போல் வழங்கிக் கொண்டு வருகிறது. இன்று பெருநிதியை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது. கூட்டங்களுக்கு ஒழுங்காகக் குறித்த நேரத்திற்குச் சமூகம் கொடுப்பவர்களுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கிவருகிறது. புவேந்தன் பாலர் பகல் பரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரிப்பு நிலையத்திற்குப் பெரியளவிலான ஊஞ்சல் அன்பளிப் பாக வழங்கப்பட்டிருக்கிறது.

சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 5ம் ஆண்டு புலமைப்பரிசு பெறுபவர்கள் கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் சித்தி பெறுபவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கு பெருநிதி வழங்கி வருகின்றது. ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வரலாறு செயற்பாடுகள் கொண்ட மலர் வெளிவருவது போற்றப் பட வேண்டியதொன்றாகும் இம் மலரில் அடங்கிய அனைத்து விடயங்களும் சங்கங்களையும் மக்களையும் மேம்படுத்தும் என்ப தில் சந்தேகமில்லை. இவ் அரிய பெரும் முயற்சியில் பங்கு கொண்டுள்ள தலைவர், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் பழநி ஆண்டவருடைய நல்லாசிகள் என்றும் கிடைக்கும் என்று கூறுவதோடு, இம்மலருக்கு எனது நல்வாழ்த்துரையை நிறைவு செய்து அமைகின்றேன்.

க.சி.ஆறுமுகம்.ஜே.பி.

**சிவனருட்செல்வர் க.சி.ஆறுமுகம்.சமாதான நீதிபதி.**
**தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத் தலைவர்.**
**சாவகச்சேரி மத்தியஸ்த சபை உறுப்பினர்.**
**அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய பரிபாலனசபை பொருளாளர்.**
**நுணாவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளர்.**
**நுணாவில் சி.க.வ.கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினர்.**
**சா.ப.நோ.கூ.சங்கக் கிளை 4ன் கிளைக்குழுத் தலைவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி.



ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் இருபதாம் ஆண்டு நிறைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். பொதுவாக, சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள், அங்கத்தவர்களிடையே சேமத்தை ஊக்குவித்து சுழற்சி முறையில் கடன் வழங்கி வாழ் வாதாரத்திற்கான உதவிகளை மேற்கொண்டு வரும் வேளையில், இச்சங்கமானது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு ஊக்குவிப்புக்களை வழங்கிக் கல்விசார் நிகழ்ச்சி களுக்கு உதவுவதுடன் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியது. சங்க அங்கத்தவர்களின் இல்லங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடிய வகையில், பல்வேறு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி, செயற்டுத்தி தேவைகளைப் படிப்படியாக நிறைவு செய்வதற்கு உதவி வருவது இச்சங்கத்தின் சார்ந்த செயற்பாடாகும்.

இச் சங்கமானது தொடர்ந்து இனிவரும் காலங்களிலும் தேவைகளை இனம் கண்டு செயற்பாடுகளை விஸ்தரித்து, அங்கத் தவர்களினதும் மற்றும் பிரதேச மக்களினதும் வாழ்வு உயர்வு பெறும் வகையில் தனது பணியிற் சிறக்க, வளர்ந்து வளமும் பலமும் பெற, எமது சங்கத்தின் சார்பாக உளம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

**செல்வி.க.கயந்தா.**
**செயலாளர்**
**சாவ- நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.**
**சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வைத்திய அதிகாரியின் வாழ்த்துச்செய்தி.



1992 ஆம் ஆண்டு சிறிதாக ஆரம்பிக்கப்பட்டு இன்று 20வருட நிறைவினைக் கொண்டாடும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு விருட்சம்போல் தனது செயற்பாடுகளை காலத்திற்குக் காலம் விஸ்தரித்து, அங்கத்தவர்களின் தேவைகளை இனங்கண்டு சேவையாற்றும் இச்சங்கமானது மேலும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாக்டர்.G.ரகுநாதன்.
அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி.
சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபரின் வாழ்த்துச்செய்தி.



ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 20ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடப்படும் ஆண்டு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

சென்ற 24.10.1992ல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இச்சங்கமானது 25 உறுப்பினர்களுடன் இயங்கத்தொடங்கி இன்று அங்கத்தவர்கள் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. ஆரம்பத்தில் 2000 ரூபா வழங்கிய இச்சங்கம் படிப்படியாகத் தொகையை அதிகரித்து, தற்போது ஒருலட்சம் ரூபா வரையில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை விட அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் கடன் வழங்கி வருகின்றமை பாராட்டத்தக்க விடயமாகும். மேலும் அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணம், க..பொ.த உயர்தரப் பாட்சைகளில் சித்தியெய்தும் போதும் பல்கலைக்கழகம் புகும்போதும் ஊக்குவிப்புத் தொகை வழங்கி அவர்களைக் கௌரவித்து வருகின்றமை சிறப்பான விடயமாகும். சங்கதத்தின் கூட்டங்களுக்கு ஒழுங்காகச் சமூகமளிக்கும் அங்கத்தவர்களுக்கு பரிசில்களை வழங்கி ஊக்குவிப்பது சங்க வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைகின்றது.

நடுவூரின் கண்ணே நிற்கும் நல்ல மரம் போன்று விளங்கும் இச்சங்கமானது தொடர்ந்தும் சிறந்த சேவைகளை எம் மக்களுக்கு வழங்கவும், மேலும் வளர்ச்சி காணவும் எனது உளப் பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.சிவத்திரை சிவநாதன்.
அதிபர்.
யா. சாவகச்சேரி மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி.



ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினர் 20 ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஆண்டு மலர் ஒன்றினை வெளி யிடும் சமயம், இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். மூத்த கூட்டுறவாளர் எமது முன்னாள் தலைவர் பெருமதிப்புக்குரிய இராமலிங்கம் இராஜகுல சிங்கம் அவர்களை ஆரம்பகாலத் தலைவராக ஏற்று ஆரம்பித்து அங்கத்தவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதை தமது சேவை யாகக் கொண்டு மிகவும் சிறப்பாக இயங்கிவரும் இச்சங்கமானது சமூக சேவைகளையும் முன்னின்று செய்வது சிறப்பம்சம் ஆகும்.

குறிப்பாக மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு செயற்பாடானது அனைத்து மாணவர்களினதும் கல்வியை மேம்படுத்தும் ஒரு செயலாகும். அதுபோன்று வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கடன்களை வழங்கி வரும் இச் சங்கம், ஆல் போல் தழைத்து பெருவிருட்சமாய் அங்கத்தவர்களின் பல தரப்பட்ட சேவைகளை வழங்கி விழுதுகளைப்பதித்து சிறப்புடன் வளர வாழ்த்துகின்றேன்.

**இங்ஙனம்,**
**கூட்டுறவுச்சேவையிலுள்ள,**
**செ.மகேஸ்வரன்.**
**தலைவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் நிலையில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.



வங்கிகள் நிதி நிறுவனங்கள் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் என்பன பணத்தைக் கொண்டு பணிபுரியும் அமைப்புக்களாக அமைந்து விடுகின்ற நிலையில் அவற்றின் நோக்க ங்களும் கொள்கைகளும் வேறுபடுகின்ற விதத்திலே செயற்பாடுகளுங் கூட வெவ்வேறானவையாக அமைந்து விடுவது இயல்பே. பணத்தைக் கொண்டு பணிபுரியும் அமைப்புக்களைப் பொறுத்த வரையிலே, இலாப நோக்கமும், சேவை நோக்கமும் இரு முரண்பட்ட சக்திகளாக அமைகின்ற போதிலும், இவ்விரு நோக்கங்களுக்குமிடையில் ஒரு சரி செய்யும் நிலைமையை அல்லது சமநிலைகாணும் நிலைமையை வெற்றிகரமாக மேற்கொள்கின்ற விதத்திலே தான் இவற்றின் நோக்கந் தழுவிய வெற்றியும் அமைந்து விடுகின்றது.

இந்த நிலைமையிலே சிக்கன கடனுதவும் கூட்டுறவுச் சங்கங் களை நோக்கும் போது, சேவை நோக்கம் அல்லது சமூக நலன் மிகமுக்கிய இடத்தினைப் பிடித்து விடுவதனை நாம் நன்கு அவதா னிக்கமுடியும். இங்கு நாம் சாவகச்சேரியிலுள்ள ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தை அவதானிக்கின்ற போது, அது வலிகாமம் பிரதேசத்தில் இயங்கிவருகின்ற சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளை அடியொற்றி சென்ற 1992.10.24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகும். இச்சங்கத்தினது மூலகர்த்தாவாக திருவாளர். மகாகாலிங்கம் விவேகானந்தன் அவர்கள் விளங்குவதை யாம் நன்கறிவோம். இவ்வமைப்பானது மிக்க மதிநுட்பத்தோடு தனது பணியினை முன்னெடுத்துச் செல்வதை அவதானிக்கமுடிகிறது. உண்மையிலே இச்சங்கத்தின் செயற்குழு நிலையிலே அமைகின்ற ஊக்குவிப்புக்கள், அதனைச் செயற்திறன் வாய்ந்த ஒன்றாகச் செயற்படவைப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களின் பொருளாதளர நலன்களை ஊக்குவிக்கும் வகையில் பொருத்தமான கடன்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது சிறப்பம்சமாகும். மேலும் செய்பணி சிறக்க பொருளாதார நலன்களை அனுபவிக்க ஏற்ற வகையிலே தையல் இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், பிளாஸ்ரிக் இருக்கைகள், மின் உபகரணங்கள், சமயலுக்கு உதவும் பல்வேறு உபகரணங்கள், பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான ஊக்குவிப்புக்கள் முதலியன வழங்குகின்ற நிலையை அவதானிக்கும் போது, இவ் அமைப்பானது சேவையின் நிலையில் விளங்கும் ஓர் அமைப்பு என்று சொல்வது மிக மிகப் பொருத்தமானதொன்றாகின்றது. சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்ட மலரொன்றிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதிலே சங்கத்தின் சார்பாக யான் அளவிலா அகமகிழ்வடைகின்றேன்.

**கி.பூபாலசிங்கம் (தலைவர்)**

**பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்**

**டச் வீதி, சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி.



ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் சென்ற 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டு இன்று தனது இருபதாவது வருட நிறைவைக் கொண்டாடுவதை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

இச் சங்கமானது கடந்த இருபது வருட கால இடைவிடாத தொடர் செயற்பாடு ஊடாக இன்று ஒரு பலமான நிலையில் பாராட்டப்படக்கூடிய வகையில் சேவையாற்றுவதை கண் ஊடாகப் பார்க்கக்கூடியதாகவுள்ளது.

தனது அங்கத்தவர்களுக்கு வழங்குகின்ற கடன் வசதிகளையும் அங்கத்தவர்களின் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வழங்குகின்ற கல்வி வளர்ச்சிக்கான நிதி உதவிகளையும் ஏனைய அத்தியாவசிய வெளிச் செயற்திட்டங்களையும் உற்று நோக்குகின்ற பொழுது இச் சங்கத்தின் வளர்ச்சி எத்தகையது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இச் சங்கத்தின் பிதாமகன் திரு. ம. விவேகானந்தன் அவர்களையும், ஒவ்வொரு காலகட்டத்திலும் சேவையாற்றிய நிர்வாகத்தையும், அங்கத்தவர்களையும் நாம் பாராட்டுகின்றோம். இவர்கள் ஒவ்வொருவரினதும் அயராத உழைப்புத்தான் இச்சங்கம் இன்று இந்த வளர்ச்சியை எய்துவதற்குக் காரணம் என்பதை மறக்கமுடியாது.

எதிர்காலத்தில் இச் சங்கமானது மென்மேலும் வளர்ச்சி அடைந்து ஆல் போல் வளர்ந்து விழுது போல் பரவி சாவகச்சேரி நகரில் பெரும் சேவையாற்ற எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்கள் அனைவரின் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

திரு.வ.ஸ்ரீபிரகாஸ்.
(தலைவர். )
கைத்தொழில் வணிகர் மன்றம்.
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுமைகளைப் புகுத்தி வளர வாழ்த்துகின்றேன்.

சாவகச்சேரி நகர் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட டச் வீதியில் உள்ள ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயம், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஊழியர்களுக்கும், நோயாளர் களுக்கும் அருளும், கேட்டதைக் கொடுத்து நேர்த்திக் கடனை ஒப்பேற்ற சந்தர்ப்பம் கொடுக்கும் தன்மையது. இம் முருகன் ஒரு புறம் மற்றும் பிள்ளை பிறப்பதற்குச் சிக்கல் என்றால் மேள முழக்கம் கொடுத்து சுகப பிரசவம் கொடுக்கும் காளி கோவில் ஒரு புறம்.

நான் சேவைசெய்த காலத்தில் என்னூர் வை.இராசரத்தினமும் சாவகச்சேரியில் சேவை செய்தார். அதனால் மானா என்று செல்லமாக அழைக்கப்படும் ம.விவேகானந்தன் என்னும் சமூக சேவையாளர் அறிமுகமானார். அவர் சைவப்பற்றும், நொந்தவர் களுக்கு உதவும் ஆர்வமும் என்னை அவர்பால் நெருங்க உதவியன.

உதவும் நோக்கோடு திணைக்களங்கள், நிறுவனங்கள், பெரும் பாடசாலைகளைப் போன்று அவர் ஒரு சிக்கன கடனுதவு கூட்டு றவுச் சங்கத்தை, பழனி ஆண்டவர் கோயிற்பற்றில் உருவாக்கி இன்று ஒரு தொண்டு நிறுவனம் போல் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவி போன்றவற்றைச் செய்வதோடு வரவிற்கு(Attendance) வெகுமதி கொடுக்கும் சங்கமாகி 100% வரவு கூட்டங்களுக்கு இருப்பதைக்கண்டு “லயன்ஸ்கழகம்” “வணிகமன்றம்” “செஞ்சிலுவைச்சங்கம்” மற்றும் ஏனைய நிறுவனங்கள் இவர்களைப் பின்பற்றினால் கூட்டம் நடாத்த கோரம் (Quorum) இல்லை என்ற பிரச்சனையே எழாது.

இவரது தலைமையில் மேலும் மேலும் இச்சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் புதுமைகளைப்புகுத்தி வளர வாழ்த்துகின்றேன்.

**லயன் டாக்டர் .சு.சி.அருளானந்தம்.ஜே.பி**
**பிரதி மாவட்ட செயலாளர்.**
**சர்வதேச லயன்ஸ் மாவட்டம் 306 B1.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி.



தென்மராட்சிப் பிரதேச செயலர் பகுதியில் சாவகச்சேரி நகர கிராம அலுவலர் பிரிவில் சென்ற 1992.10.24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தற்போது இருபதாவது ஆண்டினை நிறைவு செய்யும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் உவகை அடைகின்றேன்.

ஆரம்பத்தில் 25 உறுப்பினர்களுடன் தொடங்கிய இச்சங்கம் படிப் படியாக வளர்ச்சியடைந்து கூடுதலான அங்கத்தவர்களுடன் மக்களுக் கான பணியை ஆற்றிவருகின்றது. இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியைத் தொடர்ந்து பல துயரங்களைச் சந்தித்த போதும் அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து சங்கத்தினை தொடர்ந்து இயங்க வைப்பதில் அங்கத்தவர்கள் அனைவரும் பொறுப்புணர்வுடன் சேவை புரிந்து இருபதாவது ஆண்டு நிறைவு செய்வதையிட்டு நான் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

"சிறு துளி பெருவெள்ளம்" என்ற சான்றோரின் வாக்குக்கு ஏற்ப ஒவ்வொரு அங்கத்தவரும் தமது வருமானத்தில் ஒரு சிறிய தொகை யைச் சேமித்து அவற்றை ஒன்று திரட்டி அதன் மூலம் அங்கத்தவர் களின் சேமத்தை ஊக்குவித்தும் வாழ்வாதாரத் தேவைகளையும் சமூகப் பங்களிப்பையும் இயன்றளவு வழங்கி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் சமூகத்தில் தடம் பதித்து வருகின்றமை சாவகச்சேரி நகருக்குப் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது என்றே கூறவேண்டும்.

ஆரம்பகாலத்தில் அங்கத்தவர்களுக்கு வாழ்வாதாரக் கடனாக ரூபா 2000 வழங்கி இன்று அக் கடன் தொகையை ரூபா 100000 ஆக வழங்கிவருவது ஒரு பெரிய சாதனையாகும். கிராம மட்டத்தில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினை செயற்படுத்த முடியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிலையை மாற்றி நகரத்திலும் இச் சங்கங்களை ஆரம்பித்து செயற்படுத்த முடியும் என்ற உண்மையை செயற்படுத்திய சங்கம் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமாகும்.

ஆண்டுதோறும் நடைபெறும் பொதுக்கூட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வதன் மூலமும் கிடைக்கப்பெறும் அறிக்கைகள் செயற்பாடுகள் மூலமும் சங்கத்தின் செயற்றிறனை என்னால் அறிந்துகொள்ள முடிகிறது. அத்துடன் நகரத்தின் மத்தியில் வங்கிகளின் செயற்பாடு போட்டி போட்டு நடைபெறும் இக்காலத்தில் அங்கத்தவர்களிடையே இலகுவான சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி கூட்டுறவின் கொள்கை களை வளர்த்தெடுத்து வரும் இச்சங்கம் எதிர்காலத்தில் கூடியளவு அங்கத்தவர்களை உள்வாங்கி தமது நிர்வாகப் பரப்பு எல்லையை விஸ்தரித்து சமூகத்திற்கான பணியை பரவலாக்க வேண்டும்.

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பத்திற்கு அடித்தளமிட்டு ஆலோசனைகள் வழங்கி ஊக்கமளித்த பெருமை அமரர். இ. இராஜகுலசிங்கம் அவர்களையே சாரும். இந்நேரத்தில் அவர்களை நான் நினைவு கூருகின்றேன். அத்துடன் இச்சங்கத்தின் சகல செயற்பாடுகளுக்கும் ஆலோசனையைப் பெற்று ஒழுங்கமைத்து வழி நடத்திவரும் திறன் தற்போதைய தலைவராகக் கடமைபுரியும் திரு.ம.விவேகானந்தன் அவர்களையே சாரும்.

இவ்வாறு இருபது ஆண்டு காலப் பணியை நிறைவு செய்யும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் எதிர்காலத்திலும் தொடர்ந்து பல்லாண்டு காலம் தனது பணியை திறம்பட ஆற்ற வேண்டுமென வாழ்த்தி, இச்சங்கத்திற்காகக் கடந்த காலத்தில் உழைத்த அனைவ ரையும் பாராட்டி, எல்லாவற்றிற்கும் மேலாக பழநி முருகன் துணை கிடைக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

**வை.இராசரத்தினம்.**
**ஓய்வு நிலைக் கிராம அலுவலர்.**
**தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளரின் வாழத்துச் செய்தி.

காலம் சரியாக அமையவில்லை என்று சொல்லாமல் தான் எண்ணிய எண்ணத்தை திரு. ம. விவேகானந்தன் அவர்கள் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உறுதியான இலட்சியம், மனத்துணிவு என்ற ஆளுமை விருத்தியின் செயற்பாடாக ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது 20ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியது.

தனது பிரதேச மக்களின் சிக்கனத்தையும் சேமிப்பையும் இரு கண்களாக நினைத்து அதனைச் செயற்படுத்தி பல அங்கத்தவர்களுக்கு நிறைவான பணியை ஆற்றிவருகின்றது.

நிறைகுடம் தளம்பாது என்பார்கள் அதேபோல் மக்களுக்கு சேமிப்பின் மகத்துவத்தை விளக்கி நிறைவாகச் செயற்படுத்தி வருபவர்கள் இச்சங்க நிர்வாகிகள் என்றால் மிகையாகாது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற சான்றோர் கருத்துப்போல் கண்ணியமான சேவையாற்றி, சிக்கனத்தின் சாதகபாதகங்களை எடுத்தியம்பி, மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு அரும் பணியாற்றி வருகின்றார்கள்.

கல்விப் புலத்திலும் சித்தியடைந்தமாணவர்களிற்கும் பல்கலைக் கழகம் சென்றோருக்கும் அத்தோடு மாற்றுவலுவுடையோருக்கும் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகின்றது.

2000 ரூபாவிலிருந்து கடன் வழங்கத் தொடங்கி இன்று லட்ச ரூபா கடன் வழங்க முடிகின்றது என்றால் இச்சங்கம் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது.

இப் பிரதேசத்தில் மக்கள் நலம் சார்ந்த பணிகளைச் செய்து வரும் இச்சங்க முன்னோடிகள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள்.

மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு என்றும் அளப்பரிய சேவையாற்றி ஆலமர விருட்சமாக வளர மக்கள் வங்கி சார்பாக எனது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

க. சண்முகலிங்கம்.
(முகாமையாளர்)
சாவகச்சேரி மக்கள் வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி.



"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணி என்ப நாட்டிற்கு இவ்வைந்து" என்னும் வள்ளுவன் கூறிய நாட்டு மக்களுக்கு அணிகலன்களாக விளங்கக்கூடிய பிணியின்மை செல்வம் விளை பொருள் மிகுதி மன நிறைவால் உண்டாகும் மகிழ்ச்சி என்பவற்றைப் பெற்று வாழ்வதற்கு இசைவாக அவர்களுக்கு அவ்வப்போது தேவையான கடன் உதவிகள் வழங்கி ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட 1992ம் ஆண்டிலிருந்து இன்று வரை மேன்மையுற்று வருகிறது.

எமது பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பல சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் இன்று செயலிழந்துள்ள நிலையில் இச்சங்கம் மேலும் வளர்ச்சியடைந்து இன்று இருபதாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்சியடைவதுடன் இச் சங்கம் மேலும் வளர்ச்சியடைந்து வள்ளுவன் கூறிய ஐந்து அணிகலன்களையும் எல்லா மக்களும் பெற்று இன்புற்றிருக்க, கடன்களை வழங்கியுதவி மேன்மேலும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்களைக் கூறி எல்லாம் வல்ல ஸ்ரீ பழனி ஆண்டவரைப் பிரார்த்திக்கிறேன்.

**எஸ்.கே.வேலாயுதபிள்ளை.**
**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்திற்கான தேசிய சேமிப்பு வங்கி வழங்கிய வாழ்த்துச் செய்தி.



சாவகச்சேரி பிரதேசத்தில் டச் வீதியில் அகிலாண்டம் சன சமூக நிலையத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இன்று தனது 20 ஆம் அகவையில் தலை நிமிர்ந்து நிற்கிறது. ஒரு அமைப்பு 20 வருடங்களைக் கடந்து நீடித்திருப்பது என்பது சாதாரணமானதொரு விடயமல்ல. 20ஆவது அகவை என்பது இச்சங்கம் இப்பகுதி மக்களது தேவைகளை அறிந்தும் உணர்ந்தும் நல்கி வருகின்ற 20 வருட உன்னதமான சேவையினையே கருதும்.

இச்சங்கமானது மாணவர்களை அவர்களது கல்வியில் ஊக்கு வித்து அவர்களை திறமை மிகுந்தவர்களாய்ச் செதுக்குவதில் முக்கிய பங்காற்றி வருகின்றமை அனைவருக்கும் கண்கூடு. 5ஆம் ஆண்டு புலமைப்பரிசிலில் சித்தியடைந்தோர் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்தோர் மற்றும் பெற் றோரை இழந்தோர் ஊனமுற்றோர் எனப் பலவகைப்பட்ட வகையிலும் மாணவர்களுக்கு இச்சங்கத்தினர் தங்களது ஊக்குவிப்புத் தொகை களை வழங்கிவருகின்றனர்.

இது மாணவர்களை ஊக்குவிப்பது மட்டுமன்றி அவர்களது குடும்ப நிதி நிலையிலும் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி பல்வகையிலும் சிக்கன கடன்களையும் சுயதொழில் கடன்களையும் இன்னும் பல கடன் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி சமூக அபிவித்தியிலும் அரிய பங்காற்றி வருகின்றது. பண வடிவிலான கடன்களை மட்டு மல்லாது கடன் வடிவில் தையல் உபகரணம், துவிச்சக்கரவண்டி, அலுமாரி, மின்சாரக்கேற்றில், பிளாஸ்ரிக்கதிரை, கிறைண்டர் போன்ற பல்வேறு உபகரணங்களை வழங்கி வருகின்றமையும் இங்கு சிறப் பாகக் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 வருடங்களை வெற்றிநடையிட்டுக் கடந்துள்ள ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத் திறனும், ஆளுமையும், சேவைகளும், சமூக நன்மதிப்பும் நன்னடைத்தையும் போற்றுதற்குரியன. இச்சங்கம் மேன்மேலும் சிறப்புறவும், சமூகத்தின் எதிர்பார்ப்புகளை இன்னும் மிகப் பரந்தளவில் நிறைவேற்றவும் அகவைகள் பற்பலவும் இன்னும் இன்னும் கண்டு மிளிரவும், தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி கிளையின் முகாமையாளரும், உத்தியோகத்களும் ஆகிய நாம் எமது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும், ஆசிகளையும் மனமுவந்து தெரிவித்துக்கொள்கிறோம்.

முகாமையாளரும்,
உத்தியோகத்தர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திலா மகளிர் ஐ.நா.சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி.



ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 20 வது ஆண்டு நிறைவு விழாவில் வெளியிடும் ஆண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் எமது நித்திலா மகளிர் ஐ.நா.சங்கம் பெருமகிழ்வடைகின்றது. கூட்டுறவுத் துறை பெரும் சவால்களையும் தடைகளையும் தாண்டி மிளிர்கின்றமைக்கு ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் விந்தைமிகு செயற்பாடுகளும் காரணமாக அமைகின்றது.

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஒளிவீசும் செயற்பாடாக அங்கத்தவர்களுக்கு ரூபா 100000/= கடனாக வழங்குகின்றமை சுயதொழில் கடன் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க பல் வேறுபட்ட கடன் திட்டங்கள் வழங்கப்படுகின்றமை போற்றுதற்குரியதாகும்.

தரம் 5 புலமைப்பரிசில் சித்தி, க.பொ.த.(சா/த) சித்தி, பல்கலைக் கழகம் புகும் மாணவர்களுக்கு பணப்பரிசில் வழங்கி கௌரவிப்பது கல்விச் செல்வத்திற்கு ஒளி ஊட்டுகின்றமையாகும். மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் வருடா வருடம் ரூபா 1500 வழங்கிக் கௌரவிப்பது சமூகத்தின் பரிணாம வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகின்றது என்பது பாராட்டுதற்குரியது.

மாதாந்த பொதுக்கூட்டத்திற்கு ஒழுங்காக வருகை தரும் அங்கத்தவர்களுக்கும், நிர்வாகக கூட்டத்திற்கு ஒழுங்காக வரும் நிர்வாக உறுப்பினர்களுக்கும் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படுவது சிறப்பம்சம் ஆகும்.

பல்வேறுபட்ட செயற்பாடுகளும் சிறப்புறத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து வழிநடத்தி செயற்படுகின்ற நிர்வாகக் கட்டமைப்பின் ஆற்றல் மிகு சேவையினை பாராட்டுகின்றோம்.

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், பல்லாண்டுகாலம் பல்வேறு துறைகளிலும் பரிணாம வளர்ச்சி பெற்று ஒளிவீசி மிளிர, நிலாமுகம் தந்த நித்திலா மகளிர் உள்ளங்கள் சார்பில் வாழ்த்துகின்றேன்.

**திருமதி. கமலேஸ்வரி ஞானச்சந்திரன்**
**(தலைவர்)**
**நித்திலா மகளிர். ஐ.நாணய. சங்கம்**
**சரசாலை வடக்கு சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறவழி போராட்டக் குழுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அதன் இருபதாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் மகிழ்வான வேளையில் இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகின்றோம்.

1992ஆம் ஆண்டு முதல் இக் கூட்டுறவுச் சங்கம் அதன் அங்கத்தவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கும், வாழ்வாதார அபிவிருத்திக்கும் நிதிசார்ந்த வகையிலும் தலைமைத்துவ அபிவிருத்திசார் வழியிலும் வழிகாட்டி வருவது குறித்த மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைத்துவப் பொறுப்பினை அலங்கரித்துவரும் திரு.மகாலிங்கம் விவேகானந்தன் அவர்களுக்கு அவருடன் இணைந்து சேவையாற்றிவரும் நிர்வாகிகளுக்கும் எம் இதைய பூர்வமான வாழ்த்துக்களையும் ஆசிகளையும் இவ்வேளையில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கின்றோம்.

**எம். கே. ஜீவகதாஸ் (செயலாளர்)**
**அறவழி போராட்டக் குழு**
**கைதடி நுணாவில்**
**சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் மேலும் வளர வாழ்த்துகின்றேன்.



தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவில் ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் கடந்த இரு தசாப்த காலமாக மிகவும் செவ்வையாகவும் நேர்த்தியாக வும் சகல தரப்பினராலும் பாராட்டத்தக்க வகை யிலும் இயங்குகின்றது என்றால் அது சங்கத்தின் அருகாமையில் இருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ பழனி ஆண்டவரின் அருட்கடாட்சம் என்றுதான் எண்ணுகின்றேன்.

இன்று நாட்டில் இப்பேற்பட்ட எத்தனையோ சங்கங்கள் தமது தவறான வழிநடத்தல்களினால் செயற்பாடுகளை நிறுத்திக் கொண்ட இவ்வேளையில், எமது பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம் எம் மத்தியில் வேரூன்றி ஒரு விருட்சமாக நின்று இப்பிரதேச மக்களுக்கு காத்திரமான பயன்தரு சேவையை ஆற்றிவருவது போற்றுவதற்கும், பாராட்டுதலுக்குமுரிய விடயமாகும்.

சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு மட்டும் சேவையாற்றுவதோடு நின்றுவிடாது எமது பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைகள் பெற் றோரை இழந்த சிறார்கள் ஊனமுற்ற மக்கள் ஆகியோருக்கு உதவி வழங்குவதன்மூலம் தனது சேவையில் தரத்தை சிறப்பை பல படிகள் கடந்து உயர்ந்த உத்தமமானதோர் ஸ்தானத்தைப் பெற்று நிற் கின்றது. எமது பிரதேசமானது பெரும் எண்ணிக்கையான பொரு ளாதார வசதி அற்றவர்களை உள்ளடக்கியிருப்பதனால் இச் சங்கத்தின் பணியானது மேலும் புனிதமடைந்து சிறப்புப் பெறுகின்றது.

இச்சங்கமானது குடாநாட்டில் மட்டுமல்லாது இந்த நாட்டிலுள்ள அனைத்து கடனுதவிச் சங்கங்களுக்கும் முன்னுதாரணமாகத் திகழ் கின்றது. இச்சங்கத்தின் ஆரம்பத்திற்கும், வளர்ச்சிக்கும் உறுதுணை யாக இருந்த பெரியோர்களை பாராட்டும் வேளையிலே, இச்சங்கத்தின் ஆரம்பத்திற்கு வித்திட்டு இன்றும் அதன் வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கும் எனது இனிய நண்பன் திரு. ம. விவேகானந்தன் அவர்களின் கடின உழைப்புக்கும், வெற்றிகளுக்கும் பழனி ஆண்டவர் துணை நிற்கவேண்டும் என்றும் இறைஞ்சுகிறேன். சங்கமானது மேலும் மேலும் வளர்ந்து புது யுக்திகளுடன் செயற்பட்டு எமது மக்களுக்குக் காத்திரமான இன்னும் பல உதவிகளை வழங்கப் பழனியாண்டவர் அருள் கிட்ட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

யோ.ஜெயக்குமார்.
உதவிப்பதிவாளர்.
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க மலர் வெளியீட்டு வாழ்த்துச் செய்தி.



ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 20 வருடத்தை நிறைவு செய்து வெளியீடு செய்யும் மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்வடைகின்றேன். தென்மராட்சியில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சஙகத்திற்கென முதன் முதலில் மலர் ஒன்றை வெளியீடு செய்த சங்கமென்ற பெருமை இச்சங்கத்தையே சாரும்.

"கூட்டுறவு" என்ற சொற்பதம் கூடி உழைத்தல் என்ற பொருள் படும். கூட்டுறவே நாட்டின் உயர்வுக்கு வழிவகுக்கும் என்ற அடிப் படையில் கூட்டுறவுத்துறை உலகில் முதன் முதலில் இங்கிலாந்தில் றெச்சேட் நகரில் 22 நெசவுத் தொழிலாளர்கள் இணைந்து 1844ம் ஆண்டு தோற்றம் பெற்ற அமைப்பாகும். இது இலங்கையில் 1906இல் கண்டியில் தும்பளைப் பள்ளத்தாக்கிற்கு அருகில் முதன் முதலில் தோற்றம் பெற்றது. 1912ல் கூட்டுறவுச் சட்டம் உருவாக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் பண்டகசாலைச் சங்கம் பின்னர் ஐக்கிய நாணய சங்கம் என்ற பெயரில் தோற்றம்பெற்றது. தற்போது சிக்கன கடனுதவு சங்கம் என்ற பெயர் மாற்றமடைந்துள்ளது. வடமாகாணத்தின் தென்மராட்சிப் பகுதியில் அகிலாண்டம் சனசமூக நிலையத்தில் 24-10-1992ல் 25 அங்கத்தவர்களுடன் தோற்றம் பெற்றது. இச்சங்கத்தின் தோற்றத் திற்கும் வளர்ச்சிக்கும் காரணகர்த்தாவாக அமைந்தவர் திரு. ம.விவேகானந்தன் ஆவார்.

கூட்டுறவுத்துறை அங்கத்தவர்களின் பொருளாதார சமூக நலன் களை கட்டியெழுப்புவதை நோக்காக கொண்டது. இந்த வகையில் இச்சங்கம் அங்கத்தவர்களிடமிருந்து சிறு சிறு சேமிப்புப் பணத்தைப் பெற்று மக்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதுடன் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறது. தற்பொழுது 100000 ரூபாவைக் கடனாக வழங்கி வருகிறது. இது ஏனைய நிதி நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது கடன் பெறுவது இலகுவாகவும் குறைந்த நிபந்தனையுடனும் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கம் தையல் இயந்திரம் துவிச்சக்கரவண்டி அலுமாரி எரிவாயுக் கொள்கலன் காஸ் அடுப்பு பிளாஸ்டிக்கதிரை கிரைண்டர் போன்றன கொள்வனவு செய்யும் நோக்கத்திற்கும் கடன் வழங்கி வருகிறது.

அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்சசிக்காக புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர் க.பொ.த(சா.த) சித்தி பெற்றவர் க.பொ.த (உ.த) சித்தி பெற்று பல்கலைக்கழகம் புகுபவர்களுக்கு முறையே 1000, 1500 வீதம் ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. மேலும் J/300 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தாய் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் வருடாவருடம் 1500 ரூபா வழங்கப்கடுகிறது. கூட்டங்களுக்கு ஒழுங்காகவும் நேரத்திற்கு சமூக மளிக்கும் அங்கத்தவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டு வருகிறது. தென்மராட்சிப் பகுதியில் கடன் வழங்கும் தொகை சமூக நல சேவைகள் கடனின் நோக்கம் வருடாந்த கணக்காய்வு (ஒவ்வொரு வருட முடிவில்) மாதாந்த கூட்டம் (ஒவ்வொரு மாதமும்) நடாத்தல் அங்கத்தவர்களின் ஒற்றுமைத் தன்மையும் கூட்டுப் பொறுப்பும் பெண் களின் பங்களிப்பு கடன் அறவீடு சேமிப்புத்தன்மை போன்றவற்றின் அடிப்படையில் நான் முன்னால் கூட்டுறவுக் கணக்காய்வாளரும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கடமையாற்றிய வகை யில் கூட்டுறவுத் துறையின் அனுபவ வாயிலாக தென்மராட்சியில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் ஒரு முதன்மைச் சிக்கன கூட்டுறவுச் சங்கமாக விளங்குவதை சுட்டிக்காட்ட முடியும்.

இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதுடன் நான் கூட்டுற வாளன் என்ற முறையில் கூட்டுறவுத்துறை வளர்ச்சியடைய இளைய தலைமுறையினர் முன்வர வேண்டுவதுடன் புதியவர்களை கூட்டுறவுத் துறையில் இணைத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறான மலர்களை ஏனைய சங்கமும் வெளியீடு செய்து கூட்டுறவுத்துறையை வளர்த் தெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி இச்சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம் மேலும் சிறப்புற இயங்க எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மா. தயாகுமாரன்
**B.COM H.N.DIP.ACC AND M.A**
முன்னாள் கூட்டுறவு பரிசோதகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளரின் வாழ்த்துச் செய்தி.



தென்மராட்சியின் தலைநகராக விளங்கும் சாவகச்சேரி நகரின் டச்வீதியில் தோற்றம் பெற்ற ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவையொட்டிய சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரம்பகாலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களுக்கு மட்டும் சிறு தொகையான கடனை மட்டும் வழங்கி வந்த சங்கம் தனது நிதி வலுவை அதிகரித்ததுடன், தனது அங்கத்தவர்களின் அத்தியாவசிய தேவைகளுக்கும் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் தேவையான கடன் வசதிகளையும் ஏனைய ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருகின்றது.

அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, சுகாதார அபிவிருத்திக்கும் சிறுவர் நல மேம்பாட்டிற்கும் இச்சங்கம் ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கி வருகிறது. இந்நிறுவன செயற்பாடு சகல வளங்களையும் பெற்று நலமிக்க சேவையாற்றி உயர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**வே.கிருஸ்ணன்.**
**பொது முகாமையாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க 20ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வாழ்த்துச் செய்தி.



சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இருபதாவது ஆண்டு நிறைவு பெறுவதை இட்டு மிகுந்த பாராட்டுக்களுடன் வாழ்த்தும் உரித்தாகுக!

கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடு தனித்தும் ஒரு மித்தும் வாழ்க்கை வசதி குறைந்த மக்களுக்கு உதவுதல் ஆகும். லண்டனில் றொக்டேஸ் முன்னோடிகள் கூட்டுறவுக்கு வழிவகுத்தனர். இச்சங்கத்திற்கு திரு.ம.விவேகானந்தன் அவர்கள் தோன்றாத் துணை யாக நின்று நல்ல பல சேவைகளைச் செய்து வருவது பாராட்டத் தக்கது. படிப்படியாக வளர்ந்து வந்த இச்சங்கம் ஆரம்பத்தில் இரண்டாயிரம் ரூபா வீதம் கடன் கொடுக்க ஆரம்பித்து தற்பொழுது ஒரு லட்சம் ரூபா கடன் கொடுக்கக் காரணம் அங்கத்தவர்களின் அயராத முயற்சியும் சிக்கனமான சேமிப்பும் ஆகும். இன்னும் பல சமூக நலத் தொண்டுகளையும் செய்து வருகின்றார்கள்.

கூட்ட ஒழுங்கு அங்கத்தவர்களின் ஒற்றுமை போன்றவற்றால் வாழ்க்கை வசதி குறைந்த மக்களுக்கு தையல் இயந்திரம் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி போன்றவற்றைச் செய்வதுடன் வங்கிகளிலும் நன்மதிப்பைப் பெற்று குறைந்த வட்டிக்குப் பணத்தைப் பெற்று முதலீடு செய்து கிராமியப் பொருளா தாரத்தில் ஸ்ரீ பழனி .சி.க.கூ.சங்கம் முக்கியம் பெறுவதையிட்டு வாழ்த்துகிறேன்.

இச்சங்கம் ஒரு சிறந்த தலைமைத்துவத்தையும் தொடர்ந்து வளர்த்து வருகிறது. சாவகச்சேரி பிரதேசச் செயலர் பிரிவுப் பிராந்தியத்தில் சி. க. கூ.சங்கங்கள் 72 உள்ளன. இதில் ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் முக்கியம் பெறுவதும் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியதாகும்.

லயன் . செ. சுப்பிரமணியம்.
ஓய்வுநிலை அதிபர்.
யாழ் மாவட்ட கா. நடை. கூ. ச. சமாசத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளரின் உள்ளத்திலிருந்து........



வந்தோரை வாழவைக்கும் சகல வழங்களும் கொண்ட தென்மராட்சியின் தலைநகராக விளங்கும் சாவகச்சேரி டச் வீதிப் பகுதியில் எழுந்தருளி இருப்பவர் அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர். அவரின் ஆசியோடு இருபது வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது தான் ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம். அப்போதைய ஜே.300 சாவகச்சேரி நகர் கிராம அலுவலராக இருந்த திரு. வை. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் சென்ற 24.10.1992ம் ஆண்டில் இச்சங்கம் அங்குரார்ப் பணஞ் செய்து வைக்கப்பட்டது. இச்சங்கத்தின் ஆரம்பகாலத் தலை வராக திரு. இ. இராஜகுலசிங்கம் அவர்கள் பதவி வகித்தார். இவர் காலத்தில் 25 உறுப்பினர்களுடன் இச்சங்கம் இயங்கியது.

எமது சங்கத்தில் சாவகச்சேரி நகர் ஜே.300 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் 43 உறுப்பினர்கள் தற்போது அங்கத்தவர் களாக இருக்கின்றார்கள். ஆரம்பத்தில் இரண்டாயிரம் ரூபாவாக வழங்கப்பட்டுவந்த கடன் தற்போது ஒரு லட்சம் ரூபாவாக அதிகரித்து வழங்கப்படுகிறது. அதைவிட அங்கத்தவர்களின் தேவைக்கேற்றபடி அவர்களின் விருப்பத்திற்கிணங்க தையல் இயந்திரம் துவிச்சக்கர வண்டி அலுமாரி போன்ற இன்னோரன்ன பொருட்கள் வாங்குவதற்கும் கடன் கொடுக்கப்படுகின்றது.

அத்தோடு நின்றுவிடாது தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி யெய்தும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் க.பொ.த.சாதாரணம் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியெய்தி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் ஊக்குவிப்பாக ஆயிரத்தி ஐநூறு ரூபா வழங்கப்பட்டு வருகின்றமை குறிபிடத்தக்க தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைவிட ஒருபடி மேலாக ஜே.300 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும் ஊனமுற்றவர் ளுக்கும் ஊக்குவிப்புப்பணம் வழங்கப்பட்டு வருகிறது. அது மட்டு மல்ல எமது சங்க அங்கத்தவர்கள் ஒவ்வொரு வருடமும் சாவகச்சேரி செருக்கல் பதி பிள்ளையார் கோவிலிலும் ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்திலும் சிரமதானப் பணி ஆன்மீகப் பணியிலும் ஈடுபடுவதுண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது சங்கத்தில் நேர முகாமைத்துவம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எமது சங்கத்தின் நிர்வாக பொதுக்கூட்டங்களுக்கு பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாக சகல அங்கத்தவர்களும் சமூகமளிப்பார்கள். சரியாக 4 மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கும். கூட்டத்திற்கு ஒழுங்காக வரும் அங்கத்தவர்களுக்கு நான்கு மாதத்திற்கொரு முறை 150. 200 ரூபா பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவது வழமையாகும்.

அங்கத்தவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்துவரும் ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இன்னும் பல்லாண்டு காலம் மக்களுக்குச் சேவைகள் பல செய்து உயர வேண்டுமென வாழ்த்தி இச்சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும் 2010ம் ஆண்டிலிருந்து பொருளாளராகவும் இருப்பதையிட்டு பெருமை அடைகின்றேன்.

திருமதி. ஸ்ரீகாந்தரூபி பரமநாதன்
(பொருளாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் உள்ளத்திலிருந்து....



இச் சங்கமானது தென்மராட்சிப் பிரதேசத்தில் முதன்மையான சங்கமாக விளங்குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதற்குச் சகல வழிகளிலும் உதவிய அங்கத்தவர்களினதும் பூரண ஒத்துழைப்பே ஆகும். மாதா மாதம் நடைபெறும் பொதுக்கூட்டங்களுக்கு நேரம் தவறாது வருகை தருவது சிறப்பம்சமாகும். அங்கத்தவர்கள் தங்களது தேவைகளைப் பூரணப்படுத்தும் நல்ல செயல் திட்டங்களுக்கு ஊக்கமளித்து வருவதற்கும் இருபதாவது ஆண்டு மலரினை வெளிவர ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மற்றும் எமது சங்கத்தின் 20ஆவது ஆண்டு விழாவிற்கு தங்களது வேலைப்பழுவையும் பாராது எமது அழைப்பை ஏற்று வருகை தந்து கூட்டுறவுக் கொடியினை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்த பிரதம விருந்தினர் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந் தினராகவும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்த அனைவருக்கும், வரவேற்பு நடனமாடிய சிறார்கள் அனைவருக்கும், சதுரங்கப் போட்டி களை சிறப்பாக நடாத்தித்தந்த தென்மராட்சி கல்வி வலயத்திற்கும், முதல் பிரதி பெற்றுக் கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும், அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவ ருக்கும், வாழ்த்துப் பாமாலை வரைந்து தந்த அனைத்துக் கவிஞர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கவிதைகள் வழங்கிய மதகுருமார்களுக்கும், பெரியார்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள் ளேன். எமது சங்க எல்லைப் பரப்பிற்குள் உள்ள அங்கத்தவர்களை சிக்கனத்தின் மூலம் சேமிப்பினை ஊக்கப்படுத்தி அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் எமது மலரை மலராக அமைக்க அரும்பாடுபட்டு உழைத்த எமது சங்கத்தலைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ம..விவேகானந்தன் அவர்களுக்கும் மற்றும் நிர்வாக உறுப்பினர் களுக்கும், பொதுச்சபை உறுப்பினர்களுக்கும், விசேடமாக மலர்க்குழு உறுப்பினர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எமது நூல்வெளியீட்டிற்கு விளம்பரத்தைத் தந்துதவிய அனைத்து வர்த்தக நெஞ்சங்களுக்கும், சிறப்புப் பட்டிமன்றம் தந்த தென்மராட்சி இலக்கியக் குழுவிலுள்ள அனைத்து அங்கத்தவர் களுக்கும், ஆண்டு விழா சிறப்புற அமைய ஐங்கரன் மணி மண்டப உரிமையாளருக்கும், விழாவுக்குத் திரளாகக் கலந்து சிறப்பித்த பொதுமக்கள் அனைவருக்கும் நன்றிகள் பல.

மற்றும் ஆக்கங்களை சிறப்புற வடிவமைத்து வெளிவர உதவிய நல்லூர் எஸ்.எஸ்.ஆர். அச்சகத்தினருக்கும், அதில் பணிபுரிபவர்க ளுக்கும், ஆண்டுவிழா வெற்றிபெறச் சகல துறைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை எனது சார்பிலும், எமது சங்கத்தின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.சு.துர்க்கரன்.**
**(சங்கச் செயலாளர்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்கள்



அமரர்.இ.இராஜகுலசிங்கம்



திரு.சி.ரவீந்திரநாதன்



திருமதி.உ.சண்முகநாதன்



திரு.பெ.சண்முகநாதன்



திருமதி.ப.வைத்திலிங்கம்



திருமதி.ந.சூரியகுமார்



திரு.ம.விவேகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய ளர் ள்



திரு.ம.விவேகானந்தன்



திருமதி.ப.வைத்திலிங்கம்



திருமதி.க.சுகன்



திருமதி.ஸ்ரீ.அனிஸ்ரனி



திருமதி.சு.துர்க்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளர்கள்

1992-1996



திரு.சி.ரவீந்திரநாதன்

1997-2000



திரு.க.இரத்தினசோதி

2001-2003



திருமதி.ம.கீர்த்திநாதன்

2004-2008



திருமதி.வி.விவேகானந்தன்

2009-2010



திரு.ம.விவேகானந்தன்

2011-2012



திருமதி.ஸ்ரீ.பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | எமது சங்கத்தின் வரலாறும் அதன் வளர்ச்சியும் | 01 |
| 2. | ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் போது கௌரவிக்கப்படுவோர்களின் விபரங்கள். | 06 |
| 3. | சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2012 | 07 |
| 4. | What I ask my Brother from U.K | 10 |
| 5. | உறுதி பூணுவோம் | 11 |
| 6. | Poem. | 12 |
| 7. | Sri Palani Thrift & Credit Society In Chavakachcheri Town G. S. Division J/300 | 13 |
| 8. | The Habit of Reading. | 15 |
| 9. | Greenhouse Effect and Global Warming | 16 |
| 10. | Whispering Hope | 19 |
| 11. | சொர்க்கமா? நரகமா? சிந்தித்து செயற்படு நேரத்துடன்! | 20 |
| 12. | டெங்கை ஒழிக்க ஒன்றாய் இணைவோம். | 21 |
| 13. | அமுதாவின் வாழ்வில் வசந்தம் (சிறுகதை) | 23 |
| 14. | A short story PROMPT ACTION | 26 |
| 15. | உழைப்போம் ... உயர்வோம் | 28 |
| 16. | யுத்த அனர்த்தத்தின் பின்னர்..... | 30 |
| 17. | மாடு வளர்ப்பின் முக்கியத்துவமும் பராமரிப்புத் தேவைகளும் | 33 |
| 18. | கிராம அபிவிருத்தி, சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் தோற்றம், மற்றும் அதன் செயற்பாடுகள் - ஓர் நோக்கு: | 37 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் 45

20. வேதமே இந்திய இசையின் நதி மூலம் 48

21. சிறுவர் உரிமைகள் 53

22. இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியும், அண்மைக்காலத்தில் சுற்றுலாப் பயணத்துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்களும். 56

23. நீல் ஆம்ஸ்ரோங் (நிலவில் கால் பதித்த முதல் மனிதர்) 61

24. பெரிய புராணத்தின் பெருமை 64

25. பல்லாண்டு பல்லாண்டு நீடு வாழ்க. 68

26. இன்னும் நெடுங்காலம். 69

27. கூட்டுறவில் கோடி நன்மை 71

28. ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமே வாழீ. 72

29. வாழைமரமாய் நின்று வளவாழ்வளிப்பாய் வாழ்க! 73

30. வரமளிக்கும் நடமாடும் தெய்வம். 74

31. சிக்கனத்தின் மைந்தர்கள். 75

32. இனி எம் வாழ்வின் வசந்தங்கள். 76

33. நுணாவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி. 78

34. பலநூறு ஆண்டுகள் வாழ்க என வாழ்த்திசைப்போம்! 79

35. நின் பணியாலே நன்மைகள் தொடரும். 81

36. நிலையுயர் பணியொடு... நீடூழி வாழ்கவே...! 83

37. அறிந்து கொள்ளுங்கள் 84

38. சதுரங்கப் போட்டிகளின் பெறுபேறுகள் 2012. 88

39. விலைவாசி உயர்வு. 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சங்கத்தின் வரலாறும் அதன் வளர்ச்சியும்......



ம. விவேகானந்தன்.
இல.39, டச்வீதி, சாவகச்சேரி.
(சங்கத் தலைவர்)
24.11.2012.

எமது ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது 20ஆவது ஆண்டு விழாவினை நிறைவுசெய்து 21 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இச்சங்கத்தின் ஸ்தாபகர் என்ற வகையிலும், இருபதாவது ஆண்டு நிறைவு விழாவின் தலைவர் என்ற வகையிலும், இச்சங்கத்தினுடைய தோற்றம், அதன் இன்றுவரையிலான வளர்ச்சி, சாதனைகள் போன்றவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் கூட்டுறவாளர்கள், நலன் விரும்பிகள், கிராம மக்கள் ஆகியோர் அறிந்து கொள்ளவும், அடுத்த எமது பரம்பரையினர் இச் சங்கத்தின் நோக்கத்தையும், அதனை அடையும் வழிகளையும், தெளிவாகத் தெரிந்து கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவும் எனவும் நம்புகின்றோம். எனவே இவ்இருபதாவது ஆண்டு நிறைவு விழா மலரில் சங்கத்தின் கடந்தகால நிகழ்வுகளை, நடவடிக்கைகளைத் தொகுத்து வெளிக்கொணர்வது வரலாற்றுப் பதிவுகளை ஆவணப்படுத்தும் நோக்கமாகவே கருதப்படுகின்றது.

சென்ற 1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், வலிகாமப் பிரதேசத்தில் இயங்குகின்ற சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளால் சங்க அங்கத்தவர்கள் அடையும் நன்மைகள் பற்றி அறிந்து கொண்ட நான், சாவகச்சேரி டச் வீதியில் வசிக்கும் சிலருடன் கலந்தாலோசித்ததன் பயனாக, அப்போதைய ஜே/300 சாவகச்சேரி நகர் கிராம அலுவலராகவிருந்த திரு. வைத்திலிங்கம் இராசரத்தினம் அவர்களின் தலைமையில், சாவகச்சேரி, டச் வீதி, சிவகுமாரன் படிப்பகத்தில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் சென்ற 24.10.1992 இல் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவராக திரு. இராமலிங்கம் இராஜ குலசிங்கம் அவர்களும், செயலாளராக திரு. மகாலிங்கம் விவேகானந்தன் அவர்களும், பொருளாளராக திரு. சிவலிங்கம் ரவீந்திரநாதன் அவர்களும், தெரிவு செய்யப்பட்டு 25 உறுப்பினர்களுடன் திருகோணமலை மாகாணசபை யில் கூட்டுறவுப் பிரிவின் கீழ் 07.09.1993 இல் பதிவு செய்யப்பட்டு ஜே/2147 என்ற இலக்கமும் பெறப்பட்டது.

இச்சங்கத்திற்கு அடித்தளமிட்டு உரமிட்டு ஆலோசனை பல வழங்கி ஊக்கமளித்து வழிகாட்டிய பெருமை, ஆரம்பகாலத் தலைவராகிய அமரர். இ. இராஜகுலசிங்கம் அவர்களையே சாரும். இந்தநேரத்தில் அவர்களை நினைவு கூர்வது சாலப் பொருத்தமானதொன்றாகும். எமது சங்கம் தனது சொந்தக் காலில் நிற்பதற்கு அமரரின் ஆலோசனையே முக்கிய காரணமாகும்..

சென்ற 1994ம் ஆண்டில் 2000/= வீதம் 06 அங்கத்தவர்களுக்கு கடன் வழங்க ஆரம்பித்து பின்னர் 5000/=, 10000/=, 15000/=, 20000/=, 25000/=, 30000/=, 40000/=, 50000/= ரூபாவென அதிகரிக்கப்பட்டு சென்ற 2011 ஆம் ஆண்டிலிருந்து 100,000 ரூபாவினைக் கடனாக வழங்கி தனது சங்க அங்கத்த வர்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றமையானது இச்சங்கத்தின் முதலாவது சாதனையாகும்.

இச்சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டங்களுக்கு பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாக ஒழுங்காக வருகைதரும் அங்கத்தவர்களுக்கு 04 மாதத் திற்கொருமுறை 150 ரூபாவில் இருந்து 250 ரூபா பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டு வந்தவேளை, சென்ற 2011ம் ஆண்டிலிருந்து சங்கத்தின் நிர்வா கசபைக் கூட்டங்களுக்கு ஒழுங்காகச் சமூகமளிக்கும் நிர்வாக உறுப்பினர்களு க்கும் வருட முடிவில் ரூபா 500 பெறுமதியான பரிசில்கள் வழங்கிவருவதால் அங்கத்தவர்கள் அனைவரும் பிற்பகல் 4.00 மணிக்கு முன்னரே கூட்ட மண்ட பத்திற்குச் சமூகமளிப்பதால், மாதாந்த நிர்வாக, பொதுக்கூட்டங்கள் யாவும் சிரமமின்றி நடாத்தப்படுவதானது சங்கத்தின் 2 ஆவது சாதனையாகும்.

அத்துடன் எமது சங்க அங்கத்தவர்கள் வருடாந்தம் சிரமதானப் பணி களிலும், ஆன்மிகப் பணிகளிலும் ஈடுபடுவது விசேட அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனை மட்டும் வழங்குவதோடு நின்றுவிடாது, தனது சங்க அங்கத்த வர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருளாக இருக்கும் தையல் இயந்திரக்கடன், துவிச்சக்கர வண்டிக்கடன் போன்றவற்றை வழங்குவதாகத் தீர்மானித்து, சென்ற 2010 ஆம் ஆண்டில் சங்கத்தின் 22 அங்கத்தவர் களுக்கு 22 தையல் இயந்திரம் வழங்கியது போல், சென்ற 2011 ஆம் ஆண்டிலும் 16 அங்கத்தவர்களுக்கு 16 துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்பட் டுள்ளது. தற்சமயம் அலுமாரிக் கடன் மூலம் 06 அங்கத்தவர்களுக்கு இன்று வரை 06 அலுமாரிகளும், எரிவாயுக் கொள்கலனும், எரிவாயு அடுப்பும், பிளா ஸ்ரிக் இருக்கைக் கதிரைக் கடன், கிறைண்டர் கடன், மின்சாரக் கேற்றில் கடன், டிஸ் அன்ரனா கடன் என்பன வழங்கப்பட்டு வருவது சங்கத்தின் மூன்றாவது சாதனை ஆகும்.

இதே நேரம் ஒரே தடவையில் மூன்று மாணவர்கள் ஆடும் பெரிய ஊஞ்சல், எமது சங்கத்தால் செய்யப்பட்டு சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை யில் இயங்கும் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு அன்ப ளிப்புச் செய்யப்பட்டதும், சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும், மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையிலும், கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையிலும், சித்தியெய்தி பல்கலைக் கழகம் புகும் மாணவ மாணவிகளுக்கு ஊக்குவிப்பு அன்பளிப்பாக 1000/=, 1500/= வழங்கிக் கௌரவிப்பதும் மற்றும் வருடாவருடம் எமது கிராம அலுவலர் பிரிவில் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும் 1500/= வழங்கிக் கௌரவிப்பதும் சங்கத்தின் நான்காவது சாதனையாகும்.

பழநி ஆண்டவரின் பெயரான "ஸ்ரீ பழநி" என்ற பெயரில் ஆரம்பிக் கப்பட்ட இச்சங்கம், அவரின் ஆசியாலும், நிர்வாகிகளின் சீரிய உழைப்பி னாலும், அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்பாலும், இன்று யாழ் மாவட்டத் திலுள்ள சங்கங்களில் முதன்மையான சங்கமாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. ஏனைய சங்கங்களுக்கும் முன்னுதாரணமாகவும் வழிகாட்டி ஆகவும் விளங்கிவருகின்றது. இப்பாரிய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காலத் திற்குக்காலம் நிர்வாகிகளாக இருந்து கடினமாக உழைத்த பல தலைவர்களையும், செயலாளர்களையும், பொருளாளர்களையும், செயற்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்களின் அவர்தம் அர்ப்பணிப்பான சேவைகளையும் நாம் அனை வரும் மறக்க லாகாது.

இவ் இருபதாம் ஆண்டு நிறைவு விழாவில் முதன் முறையாக சற்று வித்தியாசமான முறையில் ஒரு படி முன்னேறி, பிறந்த நாட்டிற்கும் அல்லது கிராமத்தின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும், மக்களுக்கும் தங்கள் வாழ் நாளில் குறிப்பிட்ட பகுதியை ஒதுக்கி சமூகத் தொண்டாற்றும் தன்னார்வ மக் கள் சேவையாளரைக் கௌரவித்தல் இடம்பெறுகிறது. இவர்களைப் போன்ற மக்கள் சேவையாளர்களைக் கௌரவித்தல் மூலம் புதிய சமூக சேவையாளர் களை ஊக்குவிப்பதும் வளர்ப்பதும் எமது இலட்சியமாகும். அந்த வகையில் இம்முறை நாம் ஐவரைக் கௌரவிக்கத் தீர்மானித்துள்ளோம். என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சங்க அனைத்து அங்கத்தவர்களும் சிறப்பாக ஒத்துழைத்து இப்படியான புதிய பல வேலைத் திட்டங்களை செயற்படுத்தினால் எமது சங்கம் இன்னும் மேலோங்கிய நிலைக்குச் செல்லும் என்பதில் சந்தேகம் . இல்லை.

எமது சங்கத்தில் 43 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர். சென்ற 2012ம் ஆண்டு தைமாத வருடாந்த பொதுக் கூட்டத்தில் இவ்வருட இறுதியில் 20 ஆம் ஆண்டு நிறைவினை விழாவாக கொண்டாடவேண்டும் எனவும் ஆண்டு மலர் வெளியிட வேண்டுமெனவும், அதில் அனைத்து அங்க த்தவர்களினது புகைப்படங்களுடனான ஆக்கங்கள், வாழ்த்துரைகள் இடம்பெற வேண்டுமெனவும் மற்றும் தென்மராட்சியிலுள்ள பாடசாலைகளுக்கிடையே சதுரங்கப் போட்டிகள் வைக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட வேண்டுமெனவும், தலைவர், அங்கத்தவர்களுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து 20 ஆம் ஆண்டு நிறைவினை விழாவாகக் கொண்டாட வேண்டுமெனும் தீர்மானம், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்திற்குச் செயல்வடிவம் கொடுப்பதில் பலரது ஒத்துழை ப்புக்களும் மிகையாகவே கிடைக்கப் பெற்றன. இயன்றவரை இம்மலர் அதன் நறுமணம் குறையாதவாறு எம்மால் வெளியிடப்பட்ட போதும் இம்மலரின் இதழ் களில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அவற்றினை பொறுமையுடன் மன் னித்து இம்மலரின் செழுமையைப் பேணிப்பாதுகாக்குமாறு அன்பு உள்ளங் களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக எமது சங்கத்தை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்த திருவாளர். வை. இராசரத்தினம் அவர்களும் எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆலோசனைகள் வழங்கி சங்கத்திற்கு வழியமைத்த எமது ஆரம்பகாலத் தலைவர் அமரர். இ. இராஜகுலசிங்கம் அவர்களும் சங்கத்தின் இரு கண்கள் ஆகும்.

எமது சங்கத்தின் வேலைத்திட்டங்களை விஸ்தரிப்புச் செய்வதற்கா கவும் எமது அங்கத்துவத்தை அதிகரிப்பதற்காகவும், சென்ற 2011ல் எமது சங்கத்தின் நடைமுறை யாப்புவிதியில் எமது சங்கத்தின் எல்லைகளை சங்க த்தானை, கோயிற்குடியிருப்பு, நுணாவில் கிழக்கு. கல்வயல், சாவகச்சேரி வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளோம். ஆதலால் இச்சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்புகின்றவர்கள் சங்கத்தின் செயலா ளருடன் தொடர்புகளை ஏற்படுத்தி அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ள லாம்.

இச்சங்கமானது மேலும் பல வகையான உள்ளத்திட்டங்களைத் தீட்டித் தான் சார்ந்த மக்களுக்குச் சிறப்பான சேவை செய்ய வேண்டும் என்பதுவும், அத்துடன் வருங்கால சந்ததியினரின் பொருளாதார சமூக, கலை கலாசார அபிவிருத்திக்கும், உயர்ச்சிக்கும் உதவுவதோடு அங்கத்தவர்களிடம் புரிந்துணர்வும், பரஸ்பர நல்லுறவும், ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும் என்ற ரீதியில் வாழக்கூடிய ஒரு நல்ல கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதுவுமே எனது அவாவாகும்.

20வது ஆண்டு நிறைவு விழாக் காணும் இச்சங்கமானது தொடர்ந்து பல விழாக்களைக் கண்டு சிறப்பாக மேலும் உறுப்பினர்களின் கலை கலா சார நிகழ்வுகளை மேம்படுத்த எனது சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இம்மலர் சிறப்புற ஸ்ரீ பழநி ஆண்டவரின் பாதாரவிந்தங்களை வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் போது கௌரவிக்கப்படுவோர்களின் விபரங்கள்.

நிர்வாகக் குழு
ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு
கூட்டுறவுச் சங்கம்
2012-12-09

தமது கிராமத்தின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்குமாகத் தங்கள் வாழ்நாளில் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி சமூகத் தொண்டாற்றும் தன்னார்வ மக்கள் சேவையாளர்களை கௌரவிப்பதும் இவர்களைப் போன்ற மக்கள் சேவையாளர்களைக் கௌரவிப்பதன் மூலம் புதிய சமூக சேவையாளர்களை ஊக்குவிப்பதும் வளர்ப்பதும் எமது சங்கத்தின் நோக்கமாகும்.

## இதன் பிரகாரம் கீழ்வரும் சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள் -

1. **டாக்டர்.க.அம்பிகைபாகன்** (ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி)
2. **திருமிகு.க.சண்முகலிங்கம்** (மக்கள் வங்கி முகாமையாளர் சாவகச்சேரி)
3. திருமிகு.ப.நடராசா (தவிசாளர் மத்தியஸ்த சபை சாவகச்சேரி)
4. **திருமிகு.த.நாகேஸ்வரன்** (தென்மராட்சி இலக்கிய அணித் தலைவர்)
5. டாக்டர்.சு.சி.**அருளானந்தம்** (சர்வதேச லயன்ஸ் பிரதி மாவட்ட செயலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2012

சி.பிரசன்னா.

யாழ் பல்கலைக்கழக மாணவன்-2011

அதிகரித்து வரும் சனத்தொகைக்கேற்ப மாறிவரும் வாழ்க்கைப் பணிக்கும் ஏற்ப தனியுடமை. பங்குடமை. கம்பனி. கூட்டுறவு போன்ற பல்வேறுபட்ட வணிக நிறுவனங்களும் தோன்றிமறையத் தவறவில்லை. அவ்வாறான வணிக அமைப்புக்களின் வரிசையில் 15 நூற்றாண்டுகளாக ஜனநாயக முறை நிர்வாகம். சுயஉதவி. சுயபொறுப்பு. சமத்துவம் போன்ற அம்சங்களை உள்ளடக்கி தன்னகத்தே கொண்ட தனியார்துறை அமைப்புக்களில் இலாபநோக்கம் கொண்ட அமைப்பு என்றால் கூட்டுறவை விட எவையும் விஞ்சிவிடவில்லை.

இவ்வாண்டு சர்வதேச கூட்டுறவு ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு உலகம் முழுமையிலுமுள்ள கூட்டுறவு சமூகத்தால் பெருமையுடன் வரவேற்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இத்தகைய சிந்தனை ஏன் தோற்றம் பெற்றது. இதன்மூலம் எதையடைய முற்படுகிறது என்பது பற்றி கூட்டுறவாளர்களாகிய நாமும் சிந்திப்பது அவசியமாகும். 2009 மார்கழி மாதம் 18ம் திகதி நடைபெற்ற 64வது ஐக்கிய நாடுகள் சபைப் பொதுக்கூட்டத்தின் போது 2012 ஆம் ஆண்டு இவ்வருடத்தைக் கூட்டுறவு வருடமாக பிரகடனப்படுத்திய முக்கிய காரணம் சமூகபொருளாதார அபிவிருத்தி வறுமையை இயன்றளவு குறைத்தல் மற்றும் தொழில்வாய்ப்புக்களுக்கான வழிவகைகளை அதிகரித்தல் தொடர்பில் கூட்டுறவு காட்டும் அக்கறை ஆகும். இதற்கு மதிப்பளிப்பதன் மூலம் கூட்டுறவை இன்னும் பலப்படுத்தி மேலும் மேலும் சக்தியுடைய அமைப்பாக மாற்றுவதாகும். எனவே சர்வதேச கூட்டுறவு வருடத்தைப் பிரகடனப்படுத்தியதன் மூலம் கூட்டுறவு, சமூக பொருளாதாரத்துறைக்கு மிக மிக அவசியமான ஒன்று என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டப்படுகின்றது. சர்வதேச கூட்டுறவு அமைப்புக்களின் ஆய்வில் இன்று உலகத்தில் ஒருகோடி மக்கள் அங்கம் வகிப்பதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று உலகம் முழுவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 மில்லியனுக்கு மேலானவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கி யுள்ளது.

18ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட தமக்கென்ற ஆணவம். போட்டா போட்டி. மற்றும் அதிக இலாபம் ஈட்டிக் கொள்ளுதல். போன்ற சுயநலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக மனிதன் முன் நிற்கின்றான். இதன் பிரகாரம் உலகிலுள்ள பெருந்தொகையான வளங்கள் மிகக்குறைந்து மனிதர்களால் அனுபவிக்கப்படுகின்றது. அத்துடன் உலகின் பல்வேறு வளங்களும் அழிக்கப்படுகின்றன. இத்தகைய நிலைமை யைத் தவிர்த்துக்கொள்வதற்கு ஒரு மேற்கோள் காட்டியே கூட்டுறவாகும் என்பது வியப்புக்குரிய விடயமன்று. இது தொடர்பாக பரிசீலனை செய்து பார்த்தபோது இவ்வாறான சமநிலைப்படுத்தும் காரணி கூட்டுறவைத் தவிர வேறு ஒன்று மில்லை என ஐரோப்பிய நாடுகள் கருதுவதனால் 2012 ஆம் ஆண்டை கூட்டுறவு ஆண்டாக வரவேற்று நிற்கிறோம்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் அண்மைய புள்ளி விபரங்களின் படி சுமார் எழுபத்தைந்து லட்சம் அங்கத்தவர்கள் அங்கத்துவம் கொண்டதா கவும் ஐம்பத்தையாயிரம் தொழிலாளர்களையும் கொண்டு கிராமிய பிராந்திய மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் தனக்கென தனித்துவமான ஒரு இக்கால மாற்றத்திற்கு எமது நாட்டில் ஏற்பட்ட அரசாங்கத்தின் கொள்கை மாற்றத்திற்கு அமைய ஏற்ற அரசாங்கத்தின் ஆதரவோடு செயற்பட்டு வந்ததோடு இலங் கையின் பொருளாதார அபிவிருத்திக்கு மௌனமான பங்களிப்பைச் செய்து வந்துள்ளது.

தற்காலத்தில் நிறைந்த விமர்சனங்களோடும் நிறைந்த தடைகளோடும் தாண்டி மெதுவாகவே பயனிக்கின்றது. அளவிற்கு அதிகமான அரசியல் தலை யீடுகள், சுயநலம் மிகுந்த தலைமைத்துவங்கள், நிர்வாகிகளின் ஊழல்கள், அரசியல் பொருளாதார கொள்ளைகள், கிளைமுகாமையாளர்களின் சுரண்டல் கள், இதனால் மக்கள் மனங்களில் ஏற்பட்ட நம்பிக்கையீனம் போன்றவை இத்துறையின் வளர்ச்சிக்கு வலுவான தடைகளாகக் காணப்படுகின்றது.

கூட்டுறவின் வளர்ச்சிக்கு சுதந்திரமான சூழலும், தன்னலமற்ற தலை மையும், நேர்மை மிகுந்த நெறிப்படுத்துவோரும், பணிக்குப் பொருத்தமான பணியாளர் தொகுதியும், புதிய தொழில்துறைகளை உருவாக்கிப் புரட்சிகர மான மாற்றங்களை உருவாக்கவல்ல புதிய சிந்தனையாளர்களும், சேவை செய்யும் மனப்பான்மையாளர்களும் இங்கு தேவைப்படுவதாகும். இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை இங்கு தோற்றுவிப்பதற்கு தீவிரமாக சிந்திக்க வேண்டிய வர்கள் கூட்டுறவாளர்களே? மேலும் நாட்டிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்கள் கஸ்டப்படும் விவசாயிகள் மற்றும் தொழில்துறைகள் மேம்பாடு செய்யவும், பண்ணைகளில் ஆடு மாடுகளை வளர்ப்பதற்கும், வீட்டுத்திருத்தங்கள் வீடு களின் புனரமைப்பிற்கும், கைத்தொழில்கள் விருத்தி செய்யும் முகமாக குறைந்த வட்டியில் கூடிய தொகையில் வழங்கி, வேண்டிய நேரங்களில் அறவீடு செய்தும் பல பணிகள், சீட்டுக் குலுக்கல் மூலமும் க.பொ.த. (உயர்தரம்) படித்து சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவா களுக்கு பரிசுத்திட்டமாகவும் வழங்கிவருவதைக் காணலாம். இன்று நாட்டின் பல பாகங்களிலும் ஐக்கிய நாணய சங்கம் தோன்றி கூட்டுறவாளர்களுக்கு பல நன்மைகள் செய்து வருவதனைக் காணக்கூடியதாக அமைந்துள்ளது.

1972ம் ஆண்டு கூட்டுறவு சட்டத்தின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம்.

- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்.
- சங்க உபவிதிகளின் பிரதிகள்.
- அமைவிடத்தை விளக்கும் வரைபடம்.
- பதிவு செய்வதற்கான தீர்மானப்பிரதிகள்.
- கணக்குக் கூற்று (வருமானக் கூற்று. நிதிக் கூற்று)
- பொருளாதார சத்தியக் கூற்று அறிக்கை.
- அங்கத்துவப் பணம் செலுத்தியமைக்கான உறுதிப்படுத்தலும் செலவு விபரமும்.
- பதிவு செய்வதற்கான கோரிக்கைக் கடிதம் போன்ற

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்து சிக்கன கூட்டுறவுச் சங்க ங்கள் பல பதிவு செய்யப்பட்டு கூட்டுறவாளர்களுக்கு பல நன்மைகள் செய் வதன் மூலம் கூட்டுறவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லலாம் என்பது சிறியோனின் அறிவுரையாகும்.

இக்கூட்டுறவு ஆண்டில் 20வது ஆண்டு நிறைவு விழாவினை கொண் டாடும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தை வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# What I ask my Brother from U.K



**S.Laksayini**
**Grade – II**
**Chavakachcheri Ladies College.**

My mother needs colour T.V
To watch serial dramas and films

My father needs an electric fan
Near his old canvas chair

My sister needs a mobile phone
To gossip with her friends.

My elder brother needs an AC Room
To sleep comfortably all along.

My younger brother needs a computer
To save his notes and play games.

Our servant needs a washing machine
And a grinder.

But I don't need anything from you
Except your brotherly affection



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதி பூணுவோம்



சு.நிலக்ஷாயினி
தரம் - 7
சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

ஏழ்மையிலும் நேர்மை
தோல்வியிலும் விடாமுயற்சி

செல்வத்திலும் எளிமை
கோபத்திலும் பொறுமை

துன்பத்திலும் தைரியம்
பதவியிலும் பண்பு

பட்டத்திலும் பணிவு
சொல்லிலே சுவை

நாவிலே இனிமை
அறிவாலே உயர்ந்திடுங்கள்

அது தான் நிம்மதி
அது தெய்வத்தின் சந்நிதி

கவனமற்ற வார்த்தை கலகமூட்டலாம்
இரக்கமற்ற வார்த்தை அடித்து நொருக்கலாம்
கனிவுள்ள வார்த்தை இனிமை பரப்பலாம்
அன்புள்ள வார்த்தை இதமூட்டலாம்
ஆகையால் வாருங்கள் இனிமையாய்ப் பேசலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Poem.



**Mr.Muththulingam Thanoraj.**

**Grade - 8**

**Hindu College,**

## A Morning Scene.

The cocks crow loudly
The crows caw horridly
The cuckoos sing sweetly
Temple bells ring soundly.

The moon disappears slowly
The sun appears gently
The darkness disappears quickly
The Mothers are busy hurriedly.

The fishermen rush to the sea
The farmers rush to the field
The children rush to school
The morning is busy fully.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI PALANI THRIFT & CREDIT SOCIETY IN CHAVAKACHCHERI TOWN G. S. DIVISION J/300



**Mrs. U. Shanmuganathan**

**Member of Sri Palani Thrift & Credit Co operative Society.**

Our Sri Palani Thrift & Credit Society was inaugurated on 24.10.1992 under its Registered No J/2147 on 09.03.1993.

During the early stage of this society, many were very reluctant to become members, not knowing the benefits and value of this society. But after canvassing, many joined and some of them are still senior members. It should be mentioned that Mr. Mahalingam Vivekanandan was the chief organizer and took an important role since the inception to ensure the steady growth of the society. He has taken the roles of President and Secretaty many times during the past 20 years.

This society encourages the members to save money in small amounts and gives financial assistance in the time of their needs. It paves way to eradicate poverty by assisting them to plan their future qnd execute to satisfy their immediate and long term wishes and expectations.

In the beginning, our society was functioning with 25 members and a loan of Rs. 2000/= only, was granted to the members. Gradually this loan increased, and at present it is increased to Rs. 150,000/=, as this society was functioning with its monthly committee meetings on the first Sunday of the month, and general meetings on the second Sunday of the month at 4 p.m. Termly incerise was given to the regular members. Granting loans up to value Rs.10,000/= for purchase of vehicles kitchen utensils, cooking gadgets,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and admirals sewing machine, is a special feature of this society to upgrade the Standard of living of the underprivileged families. The students of our members get their cash awards when they get through the scholarship exam GCE O/L exam and gain entrance to university after GCE A/L Exam.

Further a small material assistance is given annually to the handicapped and disabled members of our society. We take part in religious and social activities in the town. Even at the time of displacement during the period 2000 – 2002, this society was functioning actively, regularly and effectively without any break.

This society consists of 40 females and 5 males at present, showing that women of our village have complete faith in saving to stand on their own legs, in times of financial difficulties. Bank loans too are given through the manager Mr. K. Shanmugalingam of Peoples Bank. Chavakachcheri with the recommendation of our society to increase their income levels and to improve their quality of life, helping the younger generations of our members to have better prospects.

A special note should be mentioned regarding the bank loans in times of financial urgency. Our society stands guarantee without begging the state officers to sign the loan forms, and requests for loans is readily granted without any fuss.

Thus harmony and peace among the members and their families make our village to live in peace with contentment

"Union is strength,
United we stand, divided, we fall"

Therefore let us pray the Almightly to shower His Blessings upon our society, for its future prosperity and longevity.

**Dotch Road,**
**Chavakachcheri.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Habit of Reading.



**Rajitha Paramanathan**
**Grade – 8**
**J/Chavakachcheri Hindu Collige.**

"Reading maketh a full man" is an old saying. There is a lot of truth hidden in this great saying. Now the habit of reading is on the decline among the students. This is a very sad situation. Books are the key to the world of knowledge. Most students say that they do not have free time to read books because they attend tuition classes after school. Television also has become a hindrance for their reading habit. They think that reading is a difficult task. They want to gather knowledge by watching television and listening to the Radio programmes.

A good book is considered as a good companion. Books help to avoid loneliness. Reading helps students to spend their leisure time in a useful manner. They help to develop creative ideas and new plans. Books help to enrich our knowledge on various subjects. So every student must learn to read at least an hour daily.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Greenhouse Effect and Global Warming



**Miss.S.kaanamirtha**
**A/L 2012,**
**Chavakachcheri Ladies College.**

Most of the people out there are bound to get confused if asked how greenhouse effect is related to global warming, as we have always looked at it as a separate environmental issue. Even though greenhouse effect is not harmful for the planet, "enhanced greenhouse effect" definitely is. Sadly though, this and other such important facts about this phenomenon have been eluding the brightest minds of the world for quite some time now.

As we burn more and more fossil fuels, the carbon dioxide and other gases produced have a lasting and dangerous effect on our environment. When the makeup of our atmosphere changes, it effect how the sun's heat is absorbed reflected by our planet, trapping more energy and causing global temperatures to rise. This is known as the green house effect and is a growing worldwide concern as we seek to mitigate the negative effect of our increasingly industrialized lifestyles.

## Green house effect:- Facts and Myths

Basically, the thermal radiations coming from the sun are reflected back to the space after they come in contact with the surface of the earth. When these radiations are reflected back, some atmospheric gases restrict their reflection and trap them within the atmosphere of the earth. The entire process of these thermal radiations entering the earth's atmosphere and getting trapped in it known as the green house effect, and the atmospheric



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

gases which play a crucial role in trapping these radiations are known as the green house. Some of the most abundant green house gases include water vapor, carbon dioxide, methane etc. Other than these gases, the green house gases list also includes gases such as nitrous oxide, chlorofluoro carbons [CFCs], Sulfur hexafluoride etc. Overall, the greenhouse effect is a perfectly normal phenomenon which is necessary can leave the planet absolutely cold and unsuitable for human habition.

## Relationship between the Greenhouse effect and global warming

While greenhouse effect is necessary for the existence of life our planet, too much of the same can spell disaster for us. This "too much" is what we call the "enhanced greenhouse effect". When we say that the conditions on earth are conducive for presence of life the average temperature prevailing on the planet has a crucial role to play. Any rise or fall in this temperature can result in some serious implications on the planet. While the absence of green house effect can result in fall in the average temperature, too much of the same can result in its rise – both of which are threats for the presence of life on the planet.

Simply put, global warming is an abnormal increase in the average near surface temperature of the planet. This "abnormal rise can be attributed to several underlying factors, including pollution and defore station, all of which amount to enhanced green house effect. When the sun's thermal radiations are trapped by green house gases within the earth's atmosphere, they add to the near surface temperature of the planet and cause it to rise. More recently, the concentration of green house gases in the atmosphere has increased by a significant amount. This increase in concentration of green



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

house gases, in turn, results in increase in the amount of heat trapped within the atmosphere, and eventually contributed to global warming.

The green house effect causes can be broadly cate gorized into natural gases well as anthropogenic causes. While natural causes of green house effect include presence of water vapor, relese of methane from wetlands, volcanic eruptions etc. the anthropogenic causes include human induced, and other activities. The difference between the two, however, is that the green house gases and anthropogenic causes disrupt this balance and cause global warming.

After going through all these intricate details about the two concepts you realize that there is a lot more to know about the cause – effect relationship they share, with the "green house effect" acting as a cause and the phenomenon of "global warming" acting as its effect. All being said, the onus is on us to ensure that we refrain from contributing to the green house effect, either directly or indirectly, and do our bit to tackle global warming, and its repercussions on our planet.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHISPERING HOPE

**S.J.Ketheesh**
**Chavakachcheri**

Out came A/L results
I ran to school to see my performance
"You failed in BIOLOGY" exclaimed the teacher

I confessed the truth to my parents.
Father jumped on me, mother comforted me.
I was hurt by father's long silence.
Two days passed, father kept aloof and silent.

I was at the edge of my patience
In the pathetic end of forbearance
With a sense of disappointment and abandonment
I walked a mile seeking contentment
Till I reached the sand beach of the sea.

I sat down on the white sand watching the sea
Galloping waves one after the other strong and powerful
Calling me to play in the sea
I heard a whisper in my ear
"Why fear when I am here"
To end my troubles and tribulations
At once I got up and was ready to accept the call.

Suddenly my inner voice warned me
"No, you should not" "Falures are pillars of success"
"Life is a challenge, you meet it
Happiness and unhappiness are mingled together
Like day and night or sunshine and shower
Blissful and sorrowful events take turns
You must learn to face any circumstances"
Every dark cloud has a silver lining as a provert
Wait patiently for pleasurable moment
You should never be dejected or disheartened!

So I wended my way home singing
"Whispering Hope. O how welcome thy voice"
I will be a surgeon one day
And serve my nation with dedication.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கமா? நரகமா? சிந்தித்து செயற்படு நேரத்துடன்!



மு. கோகுலராஜ்
கேன்ஸ்மன் ஒழுங்கை,
சாவகச்சேரி

பெற்றோர் சொல்லைத் தட்டாதே
உற்றோர் உறவைத் தடுக்காதே
ஆசானை என்றும் நிந்திக்காதே
ஈசனை என்றும் மறவாதே

கெட்ட வார்த்தைகள் பேசாதே
கீழ்த்தரச் செய்கைகள் செய்யாதே
தீயனவற்றைப் பார்க்காதே
நல்லனவற்றை ஒதுக்காதே

பெற்றோரை முதுமையில் விரட்டாதே
கற்றோரை வல்சொலால் வாட்டாதே
வீண் வம்பு சண்டைக்கு போகாதே
வேதனை தரும் சொல் சொல்லாதே

பாவையரை நக்கல் அடிக்காதே
பாலியல் தொல்லை கொடுக்காதே
பூவையர் கற்பைப் பறிக்காதே
தேவையற்ற பொய் உரைக்காதே

மனிதத் தன்மையை மறக்காதே
மாற்றான் மனைவியை மணக்காதே
மூத்தோர் வார்த்தையைத் தட்டாதே
பெரியோரை ஏளனம் செய்யாதே

வாசல் வரும் வறியோரை விரட்டாதே
மற்றவன் பொருளைச் சுருட்டாதே
இன்னுமோர் உயிரை வதைக்காதே
இனித்திடும் தமிழைச் சிதைக்காதே

இத்தனையும் நீ செய்யாதிருந்தால்
இத்தரையில் நீ சுகம் பெறுவாய்
சிந்தித்துச் செயற்படு நேரத்துடன்
நிச்சயம் சொர்க்கம் கிடைத்திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கை ஒழிக்க ஒன்றாய் இணைவோம்.



பி. தளிர்ராஜ்
பொது சுகாதார பரிசோதகர்
நகரசபை, சாவகச்சேரி

இன்றைய காலகட்டத்தில் யாழ் மாவட்டத்தில் மிகப் பெரும் பிரச்சனையாகக் காணப்படுவது டெங்குக் காய்ச்சல். சிறியோர் முதல் பெரியோர் வரை அனைத்து தரப்பினரையும் மிகவேகமாகத் தாக்கி மரணம்வரை இட்டுச் செல்லக் கூடியது இந்த டெங்கு நோய். ஆனால் இந்த டெங்கு நோயைத் தடுப்பதற்கு மிக இலகுவான வழி டெங்கு நோயைப் பரப்பவல்ல நுளம்புகளை அழித்தல் ஆகும். இதற்காய் நாம் அனைவரும் ஓரணியில் இணைதல் இன்றைய காலத்தின் தேவையாகும்.

## டெங்கு நோயின் அடிப்படைத் தகவல்கள

1827 – 1828ம் ஆண்டளவில் கரீபியன் தீவுகளில் இந்நோயின் தாக்கம் முதன் முதலில் அடையாளம் காணப்பட்டது. அதன் பின்னரே டெங்கு நோயை ஏற்படுத்தவல்ல "டெங்கு வைரசின்" தொற்று, உலகம் முழுதும் உணரப்பட்டது.

## டெங்கு நுளம்பு

அளவில் சிறியதான கறுப்பு நிறத்தில் வெள்ளைப் புள்ளிகளுடன் காணப்படக் கூடியது. அனேகமாகப் பகல் வேளைகளிலேயே அதிலும் காலை 6.00 – 10.00 மணிக்கும், மாலை 3.00 – 6.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே அதிகளவில் இந்நுளம்பின் நடமாட்டம் காணப்படும்.

நோயாளிக்குக் கடித்த ஒரு நுளம்பு சுகதேகி ஒருவரைக் கடித்து ஏறத்தாள 5 – 7 நாட்களுக்குள் அவருக்கும் டெங்கு நோய் ஏற்படும். இந் நுளம்பு சிறய அளவில் நீர் தேங்கக்கூடிய இடங்களிலேயே இனம் பெருக்குகிறது. ஒரு நிறையுடலி நுளம்பானது அதன் வாழ்க்கைக் காலத்தில் ஏறத்தாள 600 – 800 வரையான முட்டைகளை வெளியேற்றி, தனது இனத்தைப் பெருக்கிக் கொள்கிறது. இம்முட்டைகள் நீர் இன்றிய நன்றாகக் காய்ந்த இடங்களில் 6 மாதங்கள் வரை அழிவடையாது காத்திருந்து பின்னர் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்கும் போது அம் முட்டைகள் பொரித்து நுளம்பாக மாறும் ஆற்றல் படைத்தவையாகக் காணப்படுகின்றன.

## டெங்கு நோயின் அறிகுறிகள்

- சடுதியான காய்ச்சல்
- கடுமையான தலையிடி
- தசை, மூட்டு போன்றவற்றில் கடுமையான நோ.
- வயிற்றுப் பகுதியில் கடும் நோ.
- கண்களின் பிற்பகுதியில் நோ.
- ஓங்காளம் வாந்தியெடுத்தல்

இவற்றில் ஒரு சில அறிகுறிகள் கூடக் காணப்படலாம்.

இவ் ஆரம்ப நிலையில் குணப்படுத்தத் தவறினால் அல்லது தவறான மருந்துப் பாவனை மூலமாக இவ் டெங்கு வைரசானது வீரியம் கூடிக் குருதி பெருக்கு டெங்கு எனும் நிலைக்கு கொண்டு செல்லும். இந்நிலையின் போது மேற்குறித்த அறிகுறிகளுடன் மூக்கு, வாய், முரசு, தோலின் அடிப்பகுதியில் குருதி ஒழுக்கு காணப்படும்.

இந்நிலையிலும் குணமாகாவிட்டால் டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படும். இந்நிலையின்போது யாராலும் காப்பாற்ற முடியாத அளவுக்கு நோயாளியின் நிலை காணப்பட்டு மரணம் சம்பவிக்கிறது.

சில சமயங்களில் இவ் டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படாமற் கூட மரணம் நிகழலாம்.

எனவே அனைவரும் ஓரணியாய் இணைந்து டெங்கு நோயைப் பரப்ப வல்ல நுளம்புகளின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தச் செயல்பட வேண்டும்.

ஒவ்வொருவரும் தமது வீடுகள், காணிகளில் காணப்படும் டெங்கு நுளம் புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களை இணங்கண்டு அவற்றை முற்றாக அழிக்கவேண்டும். மேலதிகமானவற்றை வாரத்தில் ஒரு தடவை பரிசோதனை செய்து நீர் தேக்கத்தை இல்லாது செய்யவேண்டும். அல்லது நுளம்புப் பெருக்கம் ஏற்படாதவாறு நீர் நிலைகளைப் பாதுகாக்க வேண்டும்.

டெங்கு வைரசின் பரம்பல் பல நபர்களின் குருதியில் பரவிக்காணப்படும் சூழல் தற்போது காணப்படுகிறது. அத்துடன் டெங்கை பரப்பவல்ல நுளம்பு களின் பெருக்கமும் அதிகளவிலுள்ளது. எனவே டெங்கு நோயின் தாக்கம் நாளை எமக்குக் கூட இருக்கலாம். எனவே விழிப்பாய் இருந்து ஒழிப்போம் டெங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதாவின் வாழ்வில் வசந்தம்

(சிறுகதை)



செல்வி. வை. ரவீந்திரராணி,
ஸ்ரீ பழநி. சி.க.கூ.சங்க அங்கத்தவர்
"ரவீந்திர அகம்",
டச்சு வீதி, சாவகச்சேரி

இன்றைய இளம் பெண்கள் பாடசாலைக்கும் தனியார் கல்லூரிக்கும் கைத்தொலைபேசியுடன் போகிறார்களெனின் அவர்கள் தவறான பாதைக்குச் செல்வதற்கு நுழைவுச் சீட்டு பெற்றுப் போகிறார்கள் என்று தான் அர்த்தம் கொள்ளவேண்டும். இன்று பல பெண்கள் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட தற்கு முக்கிய காரணம் பெற்றோரின் கவனக் குறைவும் பிள்ளைகளின் புத்திக் குறைவுமேயாம் என்பதற்கு இக்கதை சமர்ப்பணம்.

அமுதா பெற்றோருக்கு ஒரே ஒரு மகள். கிராமப் புறம் ஒன்றில் மண் குடிசையில், ஏழ்மையில் அவளின் குடும்பம் வாழ்ந்து வந்தது. அப்பா தினமும் குடிபோதையில் நள்ளிரவில் தள்ளாடி வந்து அம்மாவுக்கு அடி உதையுடன் சட்டி பானையையும் அடித்து நொருக்குவார். அம்மா பாவம் எனக் கிட்டப்போனால் அமுதாவுக்கும் அதே அர்ச்சனை தான். குடிக்கக் காசு கொடுக்காவிட்டால் குடமுழுக்குத் தான்.

நாடகம் முடிந்ததும் அம்மா அமுதாவை "அழாதே, கடவுள் தான் அப்பாவைத் திருத்தவேணும்" என்பார்.

ஒருநாள் அப்பாவுக்கும் மதுக்கடைக்காரனுக்கும் ஏற்பட்ட தகராறில் மாற்றானின் துவக்குச் சூட்டினால் உயிரிழந்தார். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என அம்மா விழுந்து புரண்டழுதார். அமுதாவைக் கட்டியணைத்து "தனித்துப் போனோமே அமுதா" என அழுதார். அப்பாவின் சரித்திரம் முற்றுப் பெற்றது. காலம் புரண்டது. அம்மா நாட்கூலிக்குப் போக அமுதாவும் விடுதலை நாட்களில் அம்மாவுடன் சேர்ந்து உழைத்துப் பாடசாலைக்கும் போய் கொண்டிருந்தாள்.

காலம் ஓடியது, அப்போது அமுதாவுக்கு 16 வயதிருக்கும். O/L பரீட்சையும் கிட்டியது. இராப்பகலாகப் படித்தாள். அவளது வாழ்வில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வீட்டுக் காணிக்காரர் கனடாவுக்கு குடியேறிய காரணத்தால் அவ்வீட்டை ஒரு சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு அமர்த்திவிட்டுப் போயினர். மாணிக்கம், மனைவி மங்களம் ஒரே மகன் ஆனந்த், அவர்களின் சகவாசம் கிடைத்தது. அன்று பரீட்சை நாள் மழையோ கொட்டித் தீர்த்தது. ஆனந்தை, மங்களம் அமுதாவைப் பரீட்சைக்குக் கொண்டு போய் விடும்படி கேட்டிருந்தாள். வேறு வழியில்லாததால் அமுதாவைப் பின்னால் இருத்தி மோட்டார் சைக்களில் கொண்டுபோய் விட்டான் ஆனந்த். மழையும் விட்ட பாடில்லை. பரீட்சையும் முடிந்தது அமுதாவும் தாயும் ஆனந்தின் நட்பை வரவேற்றனர்.

அன்று அவ்வூர்க் கோயில் திருவிழா. அமுதாவின் தாயார் காய்ச்ச லினால் படுத்திருந்தாள். அமுதாவும் திருவிழாவுக்குப் போக ஆசைப்பட்டாள். தனியே எப்படிப் போவது என யோசித்துக் கொண்டிருந்தபோது ஆனந்தும் அங்கே வந்து தான் கோவிலுக்குப் போவதாகச் சொன்னான். தாயும் சம்மதி க்கவே ஆனந்த் அமுதாவை முன்பாரில் இருத்தி சைக்களில் சென்று திரு விழாவை ரசித்துக் கொண்டு இருக்கும் போது இரவு 12 மணி இருக்கும் மழைத்தூறல் ஆரம்பித்தது. இருவரும் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் வழியில் மழை சோவெனப் பெய்தது. சைக்கிள் ஓட்டும் போது அவளது மேனியை உரசி அவளின் உணர்வை ஆனந்த் தூண்டிவிட்டிருந்தான். வழியில் ஆளில்லாத வீடொன்றில் இருவரும் தஞ்சம் புகுந்தனர். ஒத்திகை அரங்கேற்றமாக மாறியது. மழை விட்டது.

அமுதா வீடு சேர்ந்தாள். தவறிழைத்த பயத்தினால் அவளது முகத் தினைப் பார்த்த தாய் “நனைந்து போனியா?” எனக் கேட்டு, உள்ளே போய் மாற்றுடை அணியுமாறு சொன்னாள்.

மாதமொன்று ஓடியது. அமுதா கர்ப்பமானாள். “மாற்றானை உறவெ ன்று நம்பாதே” என்னும் பாடத்தைப் படித்தாள். நடந்ததைத் தாயிடம் ஒப்பு வித்தாள். பதறியடித்த தாய் “ஏனம்மா என்ரை கற்பனை எல்லாம் தவிடு பொடியாக்கிவிட்டியே அம்மா” எனத் தலையில் அடித்தாள். பின் ஒருவாறு தேறி, பக்கத்து மங்களத்திடம் ஓடிப்போய் விடயத்தை எடுத்துரைத்தாள். சிங்கக் கர்ச்சனையாக மங்களத்தின் குரல் ஒலிக்க அயல் வீட்டார் ஓடி வந்தனர். “அடே ஆனந்! இஞ்சை கேளன்ரா இவளின்ரை கதையை. உன்னை மாப்பிள்ளை கேட்க வந்திருக்கினம் பாரன்” என ஆனந்தைக் கேட்க, அவன் “என்னம்மா நடந்தது, உதவப்போய் உபத்திரவத்தைத் தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது தான் மிச்சம்'' என்றான். "நீ பாவம் பார்த்தாய் அவளவை ஓசியிலை மாப்பிள்ளை பிடிக்கப் பார்க்கிறாளவை'' என்றாள் மங்களம்.

காலம் மாறியது. அமுதாவும் தாயும் பக்கத்துக் கிராமத்துக்குக் குடியேறினர். அமுதா கன்னித்தாயானாள். அழகான ஆண் குழந்தையை சிசு பராமரிப்பு நிலையத்துக்குத் தத்துக்கொடுத்து விட்டு O/L இன் பின் A/L ஐ முடித்துச் சிறப்புப் பட்டதாரியானாள். பிரதேச சபையில் திட்டமிடல் அதிகாரியானாள்.

அன்றொருநாள் காரியாலயத்தில் நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்த வலுவிழந்தோர், விதவைகள், பிள்ளைகளை இழந்தோர்களின் வாழ்வாதார நிவாரணமாகக் காசோலைகள் கொடுத்துக்கொண்டிருந்தாள் அமுதா. மாணிக்கம் மங்களத்தின் பெயரைக் கூப்பிட்டவள் அதிர்ந்து போனாள். விபத்தொன்றில் கணவனையும் மகனையும் இழந்த மங்களம் தன் கதையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டாள்.

அமுதாவின் ஆற்றலையும் அயராத உழைப்பையும் மெச்சிய பிரதேசச் செயலர் தனது மகனுக்கு ஏற்ற பெண் என எண்ணித் தன் எண்ணக் கிடக்கையை மகன் பிரதாப்பிடம் வெளியிட்டார். பிரதாப் அமுதாவின் விருப்பத்தையறிய ஒருகடிதம் அனுப்பினான். அமுதா தனது சரித்திரத்தை விபரித்த பின் "அன்பான பிரதாபன் நான் களங்கப்பட்டவள். இப்போது என்னை ஏற்றுக்கொள்வீர்களா? இல்லைத் தானே! என்னில் தாங்கள் ஆசைப்பட்டது குற்றமல்ல. ஆனால் ஆராயாமை, அறியாமை, அளவிடாமை என உங்களை நான் குற்றஞ்சாட்டினால் கோபப்படமாட்டீர்கள்'' எனக் கடிதம் ஒன்று அனுப்பினாள்.

கடிதம் கிடைத்ததும் இரண்டு நாட்களின் பின் பிரதாபன் தன் பெற்றோருடன் அமுதா வீட்டுக்கு வந்து சம்மதம் தெரிவித்தான். கைமாறிய குழந்தையை பிரதாபன் பெருந்தன்மையோடு கையேற்றான்.

அமுதாவின் வாழ்வில் வசந்தம் வீசத் தொடங்கியது. பாலைவனமாக இருந்த அவள் வாழ்வு வசந்த காலத்தின் வாசம் சிந்தும் வண்ணச் சோலையாக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A short story

# PROMPT ACTION

**By. Mrs. K. Jeyaprathagini**
**23, Dutch Road,**
**Chavakachchery.**

Kidnapping children and adults for various purposes has become a day to day news published in daily newspapers. This story is an imagination only to instil an awareness in parents.

## Prompt Action

Raja and Rajani are a happy contented couple with a baby and a toddler daughter of 6 years of age who was admitted to an International College in Jaffna. Priyanka, the toddler was taken to school to and for daily in a three wheeler, while her mother stayed at home with her six months old child, and her father was abroad in Doha to earn more for their children's prosperity.

The mother was eagerly waiting at the gate for Priyanka. When the child did not turn in time, she rang up the Principal and she was informed that Priyanka was taken by a man claiming to be her uncle and that the child's grandfather was seriouslyill in the General Hospital and he was sent by the mother to pick up the child in his three wheeler. In the mean time she got a call from the usual driver that Priyanka was missing.

The mother realised that something was amiss and informed the Police immediately. The kidnapper phoned the mother demanding



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a ransome money of twenty five lakhs if the child was to be released. The Police acted promptly, identified kidnapper's telephone number and told the mother to plead with the kidnapper to reduce the ransome amount. Then the kidnapper reduced the amount asking her to keep a black bag of money at a certain place he mentioned.

In the mean time the Police collected certain facts from the school watcher. Plain clothesmen went with Priyanka's mother and waited at a distance where the kidnapper pointed. Themother kept the black bag and waited to receive her child. A man with his face covered with a black mask produced the crying child and took the bag. The Police managed to catch the culprit and held investigation. The culprit said that he was badly in need of money to give his sister dowry. He was taken for futher inquiries, and he was imprisoned later.

As the mother informed her husband about Priyanka's missing, he got perplexed and he flew back to SriLanka and to his surprise he found Priyanka still cuddling to her mother in fear.

The parents' happiness knew no bounds.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்போம் ... உயர்வோம



லயன். கு. பிரணவராஜா,
உற்பத்தியாளர்,
பிரணவன் இன்டஸ்ரீஸ்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

ஸ்ரீ பழநி சிக்கன கடன் உதவிச் சங்கம் 20 ஆவது வருட நிறைவை எட்டி நிற்பதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நேரத்தில் நானும் இந்த மலரில் ஒரு சிறு விடயத்தை எழுதுவதை நினைத்து மகிழ்ச்சி அடைகின்றேன். அதற்குச் சந்தர்ப்பத்தைத் தந்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

சிக்கன கடன் உதவி பெற்று அனைவரும் தங்களின் முன்னேற்றத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். உங்களின் எதிர்காலத்தை உங்களுக்குத் தகுந்த படி மாற்றிக் கொள்வதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும். நாம் அனைவரும் இப்போது பற்பல சிறிய தொழில்கள் செய்வதற்கான காலம் கனிந்துள்ளது. தவறாது இந்தக்காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். சிறிய தொழில் தானே என்று விட்டுவிடாமல் இன்றைய காலத் தேவையை அறிந்து இப்போது நாம் எதை உற்பத்தி செய்தால் சந்தைப்படுத்தலாம், எமக்கு கிடைக்கும் இலாப வீதம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு ஏதாவதொரு சிறிய தொழிலைச் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். எமது மக்கள் சிறு தொழில் என்றவுடன் இப்போதும் கோழி வளர்ப்பும், தையல் கலையும் தான் சிறு தொழில் என்று நினைக்கிறார்கள். இவை மட்டுமல்ல, உங்கள் காலடியில் ஏராளமான சிறு தொழில்கள் காத்துக் கிடக்கின்றன. புதிதாக ஒவ்வொருவரும் யோசியுங்கள். தேடுங்கள் கிடைக்கும். உதாரணத்திற்கு, ரொபிக் கம்பனி ஒன்று போட நினைத்தால் அதற்கான மெசினரிகள் இந்தியாவில் அல்லது சைனாவில் குறைந்த விலையில் கொள்வனவு செய்யமுடியும். அதற்கான தொகையில் கூடுதலான பகுதியை வங்கியில் கடனாக எடுக்கமுடியும். உற்பத்தியைப் பெரியளவில் சந்தைப்படுத்தலாம். நீங்கள் ஒரு குழுவாக சேர்ந்தும் முயற்சிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான பயிற்சியைச் சில தினங்களில் முடித்துக்கொள்ளலாம். நாம் இன்று பாவிக்கும் ரொபி வகைகள் எல்லாம் இங்கு தான் கூடுதலாக உற்பத்திச் செய்யப்படுகின்றன. ஏன் எம்மால் செய்ய முடியாது. எமது தேசத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டுமானால் எமது வளங்களைப் பயன்படுத்தி எம்மை உயர்த்திக் கொள்ளவேண்டும். இன்றைய காலத்திற்குத் தகுந்த படி, நாம் தெரிந்தெடுக்கும் தொழிலில் தேவைக்கேற்ப உற்பத்திகள், அவற்றைச் சந்தைப்படுத்தல் ஆகியன மிகமுக்கியமானதாகும். தற்போது நான் பிரணவன் இன்டஸ்ரீஸ் எனும் நிறுவனத்தை நடாத்தி வருகின்றேன். இறப்பர்ப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறேன். மோட்டார் சைக்கிள், ஆட்டோ போன்ற வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் சிலவற்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறேன். எமது நாட்டின் உற்பத்தியாகும் இறப்பர் எனது உற்பத்திக்கு மூலப்பொருளாக இருக்கிறது. கடந்த காலங்கள் எமது முயற்சிக்குச் சாதகமாக இருக்கவில்லை. இன்றைய காலம் எம்மை உயர்த்திக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. உங்கள் முயற்சிக்கு எனது ஆலோசனைகள் ஏதேனும் தேவைப்பட்டால் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். மெசினரிகள் பெற்றுத்தருவது, பயிற்சிகள் தொடர்பான சகல விடயமும் என்னால் முடிந்தவரை செய்து தரமுடியும்.

எமது முயற்சிக்குச் சிறு கைத்தொழில் அமைச்சிடம் உதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன் ஸ்கிறீன் பிரிண்ட் என்பது பெரியளவில் சம்பாதிக்கக்கூடிய தொழில் பயிற்சியைச் சரியாக முடித்துக்கொண்டு சரியாக பயன்படுத்தி ஸ்கிறீன் பிரிண்ட் தொழிலைச் செய்து வந்தால் முன்னேற்றம் அடையலாம். ஸ்கிறீன் பிரிண்ட் என்பது துணியில் மட்டும் செய்து கொள்வது என்று நினைக்க வேண்டாம். ஏராளமான பொருட்களில் செய்து கொள்ளலாம். உதாரணமாக அழைப்பிதழ்கள், றிச்கேக் பெட்டிகள், உற்பத்திகளுக்கான அட்டைப் பெட்டிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஸ்கிறீன் பிரிண்ட பழகிக்கொள்ள விரும்புகிறவர்கள் என்னுடன் தொடர்புகொள்ளுங்கள். இன்று உலக நாடுகளில் பெரிய உற்பத்தியாளர்கள் எல்லாம் ஆரம்பத்தில் சிறிய உற்பத்தியாளர்களாகத்தான் இருந்தார்கள். பின்னர் படிப்படியாக வளர்ந்துள்ளார்கள். எனவே நீங்களும் முயற்சி செய்யுங்கள். கடுமையாக உழையுங்கள். உங்களின் இலக்கை அடையும்வரை முயற்சியுங்கள். இந்த உலகம் எங்களுக்காகப் படைக்கப்பட்டுள்ளது. இதில் எமது இடத்தை நாம் பிடிக்கும்வரை முயன்று எமது இலக்கை அடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த அனர்த்தத்தின் பின்னர்.....

ஐ.கிருஸ்ணன்,
தென்மராட்சி,
உதயன் ஊடகவியலாளர்.



தென்மராட்சிப் பிரதேசம் யாழ்ப்பாண நகரின் கிழக்குப் புறத்தில் உள்ளது. நாவற்குழி தொடக்கம் எழுதுமட்டுவாழ் சந்தி வரையான எல்லைப் பரப்பின் பிரதேசம் 232.19 கிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்டதாக அமைந் துள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட இந்தப் பிரதேசம் 1983ம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற யுத்த நிலைமையில் பல்வேறு இடப்பெயர்வுகளையும் பாரிய அழிவுகளையும் சந்தி த்தது. இவற்றில் 2000ம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தவேளையில் பல கிராமங்கள் பாரிய அழிவுகளைச் சந்தித்தன. பிரதேசத்தில் காணப்பட்ட குடியிருப்புக்கள், பாடசாலைகள், அரச கூட்டுறவுத் திணைக்கள அலுவலகங்கள், வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் அனைத்தும் பாரிய அழிவுகளைச் சந்தித்தன.

கடந்த 2002 இல் பிரதேச மக்கள் மீளக்குடியேறிய பின்னர் பிரதேச த்திற்கு விஜயம் செய்த இலங்கை அரசின் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயரதிகாரிகள் மற்றும் வெளிநாடுகளின் பிரதிநிதிகள் போன்றோர் தென்ம ராட்சிப் பிரதேசத்திற்கு ஏற்பட்ட அழிவுகளைப் பார்த்து அதிர்ச்சியடைந்த துடன் அணுகுண்டினால் சேதமடைந்த யப்பான் நாட்டு குரோஷிமா நகருக்கு ஒப்பிட்டதுடன் பிரதேசம் மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்கும் பல ஆண்டுகள் செல்லலாமென்ற கருத்துக்களைத் தெரிவித்துச் சென்றனர். பல வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமது நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி அறிவித்தல்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

இதனைப் பார்த்த பல நாடுகள், இலங்கையிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் பிரதேசத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ள பெரு நிதிகளை வழங்கின ஒரு சில அரசசார்பற்ற நிறுவனங்கள், பாதிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் குடியிருப்புக்களை அமைத்துக் கொடுக்கவும் வேறு சில நிறுவனங்கள் அழிவடைந்த அரச திணைக்கள அலுவலகங்களைப் புனரமைக்கவும் முன்வந்தன.

அபிவிருத்திப் பணிகளால் 2004 ஆம் ஆண்டு தொடங்கி இவ்வருடம் (2012) வரையான காலப்பகுதியில் பிரதேசம் பல்வேறு பௌதீக வளங்களைப் பெற்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள் வசதியற்ற மக்களுக்கு குடியிருப்பு மனைகளைப் புனரமைத்து வருகின்ற காலப்பகுதியில் ஏனைய குடியிருப் பாளர்களும் தமது குடியிருப்புக்களைத் திருத்தியும் புனரமைத்தும் புதிதா கவும் அமைக்கத் தொடங்கினர். இதனால் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு 18 சதவீதிமாகவிருந்த கொட்டில் வீடுகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு 2 சதவீதிமாக் குறைவடைந்தது. அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் கல் வீட்டில் வளமும் வசதிகளும் கிடைத்தன.

உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவை அரச திணைக்கள அலுவலகங்களைப் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைத்து வழங்கின. ஓலையால் வேய்ந்த நிலையில் காணப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் மாடிக் கட்டடங்களாக மாறின. வைத்தியசாலைகள், நீதிமன்றங்கள் போன்றவை நவீன வசதிகளுடன் கூடிய கட்டடங்களாக மாற்றப்பட்டன. குடியிருப்புக்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்களில் நடாத்தப்பட்டு வந்த மங்கல நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்வுகள் போன்றவை நடாத்தக் கூடிய திருமண மண்டபங்களும் பொது நோக்கு மண்டபங்களும் கிராமங்கள் தோறும் அமைக்கும் அளவுக்கு அபிவிருத்தி வேலைகள் பல இடம்பெற்றன.

தனியாருடன் போட்டி போடும் அளவுக்கு அரசாங்கமும் பல திட்டங்களைச் செயற்படுத்தி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இக்காலப்பகுதியில் கட்டட வேலைகள் ஒரு புறம் நடைபெற்று வருகின்ற போதில் யுத்த வேளையிலும் அதற்கு முன்னமும் சேதமடைந்த வீதிகளும் புனரமைப்புப் பணிகளுக்கு உள்ளாகின.

பிரதேசத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 80க்கு மேற்பட்ட வீதிகள் புனரமைக்கப்பட்டன. முதன்முறையாக இரு வீதிகள் சாவகச்சேரி நகர சபையினால் கொங்கீற் வீதிகளாக மாற்றப்பட்டன. பிரதேசத்தின் எல்லைக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தொடக்கம் நாவற்குழி வரையிலான ஏ-9 வீதி, மீசாலை - புத்தூர் வீதி, நாவற்குழி, கேரதீவு வீதி போன்றவை காப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற் வீதிகளாக மாற்றப்பட்டன. அத்துடன் சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட 30க்கு மேற்பட்ட வீதிகளும் காப்பெற் வீதிகளாக மாறின.

மேலும் பல வீதிகள் காப்பெற் வீதிகளாக மாறவுள்ளன. இவற்றினை விட நகரசபையினர் சபை நிதியின் மூலம் சேதமடைந்த பல வீதிகளைத் தார் வீதிகளாக மாற்றி வருகின்றனர்.

2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தென்மராட்சிப் பிரதேசத்தில் பல கிராம ங்கள் மின்சார ஒளியினைப் பெறும் வாய்ப்புக்கள் பெற்றுள்ளன. யுத்த வேளையில் அழிவுகளைச் சந்தித்த தென்மராட்சிப் பிரதேசம் பத்து வருட காலத்தில் புதுப்பொலிவு கொண்ட பிரதேசமாக மாறிவருவதுடன் கட்டடங் களின் வளர்ச்சியின் பயனாக சாவகச்சேரி நகர்ப்பகுதியில் பத்துக்கு மேற் பட்ட வங்கிகள் உட்பட பல்வேறு காப்புறுதி நிறுவனங்களும் நிதி நிறுவனங் களும் தமது செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளதால் சாவகச்சேரி நகர்ப் பகுதி விரைவில் யாழ்ப்பாணத்திற்கு அடுத்த நகரமாக மாறும் காலம் வெகு தூரத்திலில்லை என்பது தெளிவாகின்றது.

அதிக அழிவுகளைச் சந்தித்த தென்மராட்சிப் பிரதேசம் பலரின் முயற்சியினால் குறகிய காலத்தில் புதிய பிரதேசமாக மாறியுள்ளது என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை என்பது திடமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடு வளர்ப்பின் முக்கியத்துவமும் பராமரிப்புத் தேவைகளும்



இ.சசீலன்,
விரிவுரையாளர்,
யாழ் விவசாயக் கல்லூரி,
மருதனார்மடம்.

இலங்கையில் மாடுவளர்ப்பு பிரதானமாக பாலை உற்பத்தி செய்யும் நோக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பசுப்பால் புரதம்மிக்க போசணை உணவாகும். எனவே மாடு வளர்ப்பை ஊக்குவித்து, பால் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மக்களின் புரதத்தேவை உள்ளூரிலேயே நிவர்த்தி செய்யப்படுவதோடு ஆரோக்கியமும் அதிகரித்து மக்களின் பொருளாதார நிலமையும் மேம்படும். இலங்கையின் வடபகுதி மாடு வளர்ப்பை மேற்கொள் வதற்கான இடவசதியையும் சூழலையும் கொண்டுள்ளது.

## உயர் உற்பத்தி கொண்ட மாட்டு வர்க்கங்கள்

பால் மாடு வளர்ப்பில் அதிகளவான செலவீனம் அதன் உணவுத் தேவைக்கு ஏற்படுகிறது. இதனால் மாட்டிலிருந்து அதிகளவான பாலைப்பெற எத்தனித்தல் வேண்டும். எமது உள்நாட்டு மாட்டு வர்க்கங்கள் பால் உற்பத்தி குறைந்தவையாகும். எனவே வெளிநாட்டுக் கலப்பின மாட்டு வர்க்கங்களை விரும்பி வளர்த்தல் சிறந்ததாகும்.

இந்திய மாட்டு வர்க்கங்களான சிந்தி, சகிவால், கீர் போன்ற மாட்டு வர்க்கங்களை நேரடியாகவோ அல்லது எமது உள்ளூர் வர்க்கங்களுடன் இனக்கலப்புச் செய்தோ பாலுக்காக வளர்க்கமுடியும். இக்கலப்பின வர்க்க ங்கள் நாளுக்கு 10 – 15 லீற்றர் பால் தரக்கூடியவை. அத்துடன் காளை மாடுகள் அதிக உடற்பருமனுடன் வளர்வதால் இறைச்சிக்காகவும் பெறுமதி மிக்கவையாகும்.

ஐரோப்பிய மாட்டு வர்க்கங்களாகிய ஜேர்சி, பிறீசியன், அயர்சயர் போன்றவற்றை நேரடியாக எமது வடபகுதி வெப்பக் காலநிலையில் வளர்க்க முடியாது. ஏனெனில் இவற்றிற்கு அதிக குளிர் காலநிலை தேவை. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை இந்திய வர்க்கங்களுடன் அல்லது உள்ளூர் வர்க்கங்களுடன் இனக்கலப்புச் செய்து பிறீசியன் - சகிவால் கலப்பு, ஜேர்சி - உள்ளூர் கலப்பு போன்ற கலப்பின மாடுகளை வளர்த்து அதிகளவு பால் உற்பத் தியைப் பெறலாம்.

## மாட்டுத் தொழுவத்தின் அவசியம்

ஒரு மாட்டின் பால் உற்பத்தி இரு காரணிகளில் தங்கியுள்ளது. ஒன்று அதன் பரம்பரை (வர்க்கம்), மற்றையது அதனைப் பராமரிக்கும் முறை. பராமரிப்பை இலகுவாக்கிச் சுகாதாரமாக வளர்ப்பதற்கு முறையான தொழுவம் இருத்தல் அவசியம். தொழுவத்தைக் கிழக்கு மேற்காக எவ் வடிவத்திலும் அமைக்கலாம். ஆனால் பின்வரும் காரணிகளைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பிற்பகல் வெயில் தொழுவத்தினுள் கிடைக்காது செய்தல், இதமான காற்று கிடைத்தல். நிலம் சாய்வாகக் கொங்கிரீற்றால் அமைத்தல், 24 மணி நேரமும் நீர் கிடைக்கக் கூடியவாறு நீர்த் தொட்டியும் உணவுத் தொட்டியும் அமைத்தல். அத்துடன் தொழுவம் நீர் தேங்காத மேட்டு நிலத்தில் அமைதல் வேண்டும், உடனுக்குடன் கழிவுகளை அகற்றிச் சுகாதாரமாகத் தொற்று நோய்கள் பரவாதும் தடுத்தல் வேண்டும். காலைச் சூரிய ஒளி பால்மாடுகளுக்குக் கிடைக்கச் செய்தல் அவற்றின் ஆரோக்கியத் திற்குச் சிறந்ததாகும்.

## வருடத்திற்கு ஒரு கன்றைப் பெறுதல்.

பால் மாடு வளர்ப்பில் வருடத்திற்கு ஒரு கன்றைப் பெறுதல் அவ சியம் அல்லது எதிர்பார்த்த இலாபத்தைப் பெறுதல் கடினமாகும். மாடு வளர்ப்போர் முறையான பதிவேடுகளை நிர்வகித்து அதனூடு கிரமமான முறையில் பராமரிப்பின் இது இலகுவான காரியமாகும். அதாவது ஒரு கன்னி நாகு 18 மாத வயதை அடையும் போது அதனைச் சினைப்படுத்தலாம். அப்போது அது தாய்மாட்டின் முக்கால்வாசி உடற்பருமனைக் கொண்டு இருத்தல்வேண்டும். சினை அறிகுறி வெளிக்காட்டப்படும் போது சிறந்த காளை மூலமோ அல்லது செயற்கை முறை மூலமோ சினைப்படுத்துதல் வேண்டும்.

கர்ப்பகாலம் 285 நாட்களாகும், எனவே கன்றீனல் நடைபெற்ற பின்னர் மாட்டிலிருந்து 300 நாட்களுக்குப் (10 மாதம்) பால் கறக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்று ஈன்று 40-80 நாட்களுக்குள் பசு மீண்டும் சினைப்படுத்தல் வேண்டும். அண்ணளவாகக் கன்றீன்று 2 மாதத்தில் மீண்டும் சினைப்படுத்தலாம். சினைப்படுத்தி எட்டாம் மாதத்தில் பால் கறத்தல் நிறுத்தப்படும். ஏனெனில் இறுதி இரண்டு மாத கர்ப்பத்தில் கருப்பையில் கன்று அதிகம் வளர்வதால் பசுவிற்கு அதிக போசணைத் தேவை ஏற்படடும்.

இவ்வாறு நிர்வகிப்பின் ஒரு பசுவிலிருந்து வருடத்திற்கு ஒரு கன்றைப் பெறலாம். அத்துடன் ஒரு பசுவிலிருந்து வருடத்தில் 2 மாதம் மட்டும் பால் பெறமுடியாது. மிகுதிக் காலம் பாலைப் பெறமுடியும். மாடு வளர்ப்பில் ஈடுபடும் பலர் இதனைச் சரிவரக் கடைப்பிடிக்காததால் அவர்கள் ஒன்றரை அல்லது இரண்டு வருடத்திற்கு ஒருமுறை கன்றைப் பெறுகிறார்கள். இதனால் ஒரு பசுவிலிருந்து 6 - 8 மாதத்திற்கு மேல் பால் கறக்காமல் உணவை மட்டும் வழங்குகிறார்கள். இது இலாபகரமானதல்ல.

## சினைப்பட்ட பசுவினைப் பராமரித்தல் முறை

கர்ப்பகாலம் 285 நாட்களாகும். முதல் எட்டு மாதங்களும் பசுவினுள் கன்று சிறிதளவு வளர்ச்சியடைவதனால் சுமாரான உணவு வழங்குதல் போதுமானது. இறுதி இரண்டு மாதங்களில் கன்று 70% வளர்ச்சியடைவதனால் இக்காலத்தில் பால் கறத்தலை நிறுத்தி நாளுக்கு 2-4kg அடர்வுத் தீவனங்கள் வழங்குதல் வேண்டும், அடர்வுத் தீவனங்களாக தவிடு, பிண்ணாக்கு, அவரைத் தானியங்கள் வழங்கலாம், பசுவின் உடல் நிறையின் 10 வீதமளவு பசுந்தீவனங்களான புல், இலை குழைகள் வழங்குதல் சிறந்தது. வைக்கோல், உலர்புல் போன்றவற்றை பசுவின் உடல் நிறையின் 3% வழங்குதல் வேண்டும். கல்சியம், பொசுபரசு, இரும்பு போன்ற கனியுப்புக் கலவைகள் நாளுக்கு 50 - 75g அளவு வழங்குதல் வேண்டும்.

கர்ப்பகாலத்தின் இறுதி காலத்தில் பசுவிற்கு அச்சத்தை ஏற்படுத்தக் கூடியவாறான ஆள் நடமாட்டம் மற்றும் நாய் போன்ற விலங்குகளின் நடமாட்டத்தைத் தவிர்த்து சுகமான கன்றீனலைப் பசுவிற்கு ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம். பசு கன்று ஈனும்போது கன்று வெளிவர 5 மணியத்தியாலங்களிற்கு மேல் செல்லுதல் மற்றும் இளங்கொடி வெளிவர 8 மணித்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாலங்களிற்கு மேல் செல்லுதல் போன்ற நிகழ்வுகள் ஏற்படின் உடனடியாக அப்பகுதிக் கால்நடை வைத்தியரின் உதவியை நாடுதல் அவசியமானது.

## கடும்புப்பால் கன்றிற்கு வழங்குதல் அவசியம்

முதல் மூன்று நாளும் சுரக்கும் கடும்புப் பாலில் கன்றிற்கு அவசியமான போசணைகளும், வாழ்நாள் முழுவதும் கன்றிற்குச் சில நோய்கள் ஏற்படாத வகையில் பல பிறபொருள் எதிரிகளும் காணப்படும். எனவே கடும்புப் பாலை கன்றிகுக் கட்டாயமாக ஊட்டுதல் வேண்டும். அத்துடன் கடும்புப்பால் கன்றின் உணவுக்கால்வாய்ப் பகுதியைச் சுத்தப்படுத்தும்.

கன்றிற்கென தனியான கூடு அமைத்து (2 X 4 அடி அளவில்) அதனுள் கன்றை அடைத்துத் தேவையான நேரம் பால் குடிக்க அனுமதித்தால், இதனால் கன்றிற்கு ஏற்படும் அசௌகரியங்கள் தடுக்கப்படும்.

## தரவுகளைப் பதிதல் அவசியம்

மாடு வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் ஒரு மாடு வளர்ப்பதாக இருப்பினும் தரவுகளைப் பதியப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். அதாவது மாட்டைச் சினைப்படுத்திய தரவு, மாட்டில் ஏற்படும் உடல் உளவியல் மாற்றங்கள், கன்றீனல் தரவு, கன்றின் நிறை, தினமும் பால் கறக்கும் அளவு, மாட்டிற்கு வழங்கும் உணவு வகைகள் போன்ற தகவல்களைத் தினமும் பதிந்து வைத்திருப்பதன் மூலம் ஒழுங்கு முறையான பராமரிப்பை மேற்கொள்வதுடன் நோய்நிலைமைகள் ஏற்பட்டு கால்நடை வைத்தியரை நாடும்போது அவருக்கு சரியான காரணத்தைக் கண்டறிய இத்தரவுகள் அடிப்படையாகவும் அமையும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தி, சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் தோற்றம், மற்றும் அதன் செயற்பாடுகள் - ஓர் நோக்கு:



திரு.எஸ்.எஸ்.உதயகுமார்

(B.A(Hons), M.A., M.Phil(Jaffna)

சிரேஸ்ட விரிவுரையாளர்,

பொருளியல்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

கிராம அபிவிருத்தி என்பது அபிவிருத்திச் செய்முறையில் மிகமுக்கியமானதாகக் காணப்படுகின்றது. அத்துடன் அபிவிருத்திக்கான மிகப்பெரிய ஓர் சவாலாகவும் அதேநேரம் அதன் அவசியத்தை மிக மிக வேண்டி நிற்ப தாகவுமுள்ளது. இக்கிராமியத்துறை தொடர்பான அபிவிருத்தியின் விழிப்பு ணர்வு என்பது அனைத்து நாடுகளிலும் மேலோங்கி காணப்படுகின்றது. குறிப் பாகக் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு இக்கிராமியப் பொருளாதாரம் கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றது.

கிராமியம் அல்லது கிராமியத்துறை என்கின்ற போது குறைவான சனத்தொகைச் செறிவினைக் கொண்டதும் குடியான் விவசாயத்தினைக் கொண்ட பொருளாதார அடித்தளமும் நகர மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க் கின்றபோது அதிகளவாக வேறுபட்டுப் பின்தங்கியதுமான வாழ்க்கை நிலை யினைக் கொண்டதுமான மக்களினை உள்ளடக்கியதான பிராந்தியம் எனக் குறிப்பிடலாம். உலகின் மொத்தச் சனத்தொகையில் அரைப்பங்கிற்கு மேற் பட்டதான அதாவது அண்ணளவாக 3.1 பில்லியனுக்கு மேற்பட்ட சனத் தொகையினைக் கொண்டதும் உலகின் மொத்த வறிய மக்களில் 70% க்கு அதிகமானோரைக் கொண்ட வகையிலும் கிராமியத்துறை காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கையில் கூட 72 சதவீதமான மக்கள் கிராமப்புறங்களிலேயே வசிக்கின்றனர். இவ்வகையில் கிராமியத் துறையில் ஏற்படுத்தப்படும் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, நிறுவன ரீதியிலான மாற்றத்தினையே கிராமிய அபிவிருத்தி என்ற பதம் குறித்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது குறைந்த கூலியில் கிராமப்புறத்து ஊழியம் செயற் படுகின்ற நிலையில், தொழிற்துறை அனுபவிக்கும் மிகை காரணமாக ஒரு புறம் மேலும் பல புதிய முதலீடுகள் உருவாக, மறுபுறம் வறிய கிராம வாசிகளின் வாழ்க்கைத் தரத்தினையும், வருமான மட்டத்தனையும், அதிகரிக்கச் செய்வதனையும் இறுதி இலட்சியங்களாகக் கொண்ட கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்குவதனூடாகக் கிராமமட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களையே கிராம அபிவிருத்தி என்ற பதம் குறித்து நிற்கின்றது.

கிராமிய அபிவிருத்தி தொடர்பாக ஆராய்கின்ற போது இரு காரணிகள் கவனத்தில் எடுக்கப்படும்.

கிராமிய சமூகத்தின் யதார்த்தத்தினை புரிந்து கொள்வதுடன் அபிவிருத்தித் தேவைகளிலிருந்து விலகிச் செல்லக்கூடிய ஆரம்ப சமூக அபிவிருத்திக் கருதுகோள்கள் காணப்படுகின்றன. உலகமயமாக்கல் நடவடிக்கைகளின் பரவலின் விளைவாகப் புதிய பொருளாதார அபிவிருத்தித் தேவைகள் தோன்றியுள்ளன.

உலகளாவிய ரீதியில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் விநியோகிப்பதற்கும் அவசியமான ஒரு ஊடகமாக இணையம் (Internet) உருவாகியுள்ளது. அதன் விளைவாகத் தகவல் தொழில் நுட்பத்துறையில் அபரிமிதமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிராமியத் துறையினரின் பிரதான தொழில் முயற்சிகள் விவசாயத் துறை சார்ந்தே இயங்குவதனால் விவசாயத்துறையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் கிராம அபிவிருத்தியிலும் மாற்றத்தினை ஏற்படுத்தும். அதாவது கிராமிய விவசாயிகள் எப்போதும் சுயதேவையை நிறைவு செய்வதனையே நோக்கமாகக் கொண்டிருப்பர். கிராமிய அபிவிருத்தி இன்மைக்கு கிராமிய சமூகத்தவர்களின் குறைபாடுகளன்றி நகரச்சார்பான நடத்தையே காரணமாக அமைகின்றது என்ற வகையிலான மைக்கல் லிப்டன் (Michael Lipton) என்பவரால் முன்வைக்கப்பட்ட நகரச் சார்புக் கோட்பாடு (Ubarn bias theory) முக்கியமானதாகும். கிராமிய மக்கள் வறியவராயினும் திறமையானவர்கள். ஆனால் நகர்ப்புற வர்க்கத்தினரே கிராமியத்துறை சார்பான பல தீர்மானங்களை எடுப்பதனால் நகர்ப்புற சார்பு என்பது ஏற்படுவதுடன் நகர்ப்புற நலன்களே இதன் மூலம் பேணப்படுகின்றன. இதனால் கிராமியத்துறை பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகளில் பாதிக்கப்படுகின்றது. அல்லது கிராமிய அபிவிருத்தி பின் தள்ளப்படுகின்றது.

கிராமியத் துறையானது பெருமளவிலான பிரச்சினைகளை எதிர் கொள்கின்றது.

- குறைந்த வருமானம்
- குறைந்த உற்பத்தி
- வேலையில்லாத் திண்டாட்டம்
- போசாக்கின்மை
- வீட்டு வசதிக் குறைபாடு
- கற்றல் தொடர்பான இடர்பாடுகள்
- சுகாதார மருத்துவ வசதிகளைப் பெறுவதில் சிக்கல்கள்
- ஏனைய பல இடர்பாடுகள்

என்பன போன்ற பல விடயங்கள் கிராமியத்துறை தொடர்ந்து நலிவுற்றிருப்பதற்குப் பெருமளவுக்குப் பங்களிப்பு செய்துவருகின்றன. இந்த நிலைமை இலங்கைக்கும் பொதுவான ஒன்றாகவே உள்ளது.

இந்த வகையில் இலங்கைப் பொருளாதாரத்தில் நலிவுற்ற கிராமியத் துறையை முன்னெடுக்கும் பொருட்டுப் பின்வரும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்த வகையில்

- வறுமை தணிப்புத் திட்டங்கள்
    - உணவு மானியங்கள்
    - பொதுசன உதவித்திட்டம்
- கிராமிய உள்ளமைப்பு வசதிகளின் அபிவிருத்தி
    - பன்முகப்படுத்திய வரவு செலவுத்திட்டம் மூலமான வசதிகள்
    - கிராமிய மின்மயத்திட்டம்
- சேமநல நோக்குள்ள திட்டங்கள்
    - கல்வி ஊட்டும் திட்டங்கள்
    - சுகாதார சேவைகள்
    - கிராமிய வீடமைப்புத் திட்டங்கள்
- விவசாய உற்பத்தியை உயர்த்தும் திட்டங்கள்
    - காணிக்குடியேற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வரண்ட வலயக் குடியேற்றங்கள்
- ஈரவலயக் குடியேற்றங்கள்

➢ குளங்களைப் புனரமைத்தலும் நீர்ப்பாசனத்திட்டங்களும்

➢ விவசாய விஸ்தரிப்புச் சேவை

➢ விவசாயக் கொடுகடன் வசதிகள்
- புதிய விவசாயக் கொடுகடன்
- ஒன்றிணைக்கப்பட்ட கிராமியக் கொடு கடன்
- அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடு கடன்

➢ விவசாயக் காப்புறுதி

➢ நவீன தொழில்நுட்ப முறைகளின் அனுபவம்

➢ விருத்தி செய்யப்பட்ட இயந்திரசாதன உபயோகம்

➢ கால்நடை மீன்பிடித் தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகள்

➢ கிராம சேவை கருத்திட்டங்கள்

❖ கிராமிய மக்களுக்கான கல்வி முன்னேற்றத்திட்டம்

➢ முறைசாராக் கல்வித் திட்டம்

➢ வளர்ந்தோர் கல்வித்திட்டம்

➢ போசாக்கு, குடும்பத்திட்டமிடல் பயிற்சி

➢ விவசாயப் பயிற்சி

➢ சுகாதாரப் பயிற்சி

➢ கிராமிய மட்டப் பயிற்சி

➢ கிராம சமூக இலக்குக் குழுப் பயிற்சி

➢ கிராமத்தலைவர்களின் பயிற்சி

❖ நிறுவக உருவாக்கத் திட்டங்கள்

➢ கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

➢ மரண நன்கொடை தொடர்பான சங்கங்கள்

➢ கூட்டுறவுச் சங்கங்கள்
- உற்பத்தி
- நுகர்வு
- விற்பனை

➢ ஐக்கிய நாணய சங்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢ சமய சார்பான சங்கங்கள்
- ➢ பொழுது போக்குக் கழகங்கள்
- ➢ கமக்கார நிறுவனங்கள்
  - ▪ வெல் விதான
  - ▪ பயிர்ச்செய்கைக் குழுக்கள்
  - ▪ விவசாய விரிவாக்கற் குழுக்கள்
  - ▪ கமநல சேவைக் குழுக்கள்
  - ▪ வாய்க்காற் குழுக்கள்
  - ▪ உப குழுக்கள்
  - ▪ திட்டக் குழுக்கள்

❖ நிதி ஆதார நிறுவன ஏற்பாடுகள்

- ➢ கூட்டுறவுக் கிராமிய வங்கி
- ➢ விவசாய சேவை நிலைய முகவரகங்கள்
- ➢ ஜனசவிய நம்பிக்கை நிதியம்
- ➢ ஓய்வூதியத் திட்டங்கள்
- ➢ காப்புறுதித் திட்டங்கள்

❖ வெளிநாட்டு ஒத்துழைப்பிலான கூட்டுத்திட்டங்கள் என்பன காணப்படுவதுடன்

- ➢ சேமிப்பு நிறுவனங்கள்
- ➢ வங்கி நிறுவனங்கள்
- ➢ காப்புறுதி நிறுவனங்கள்
- ➢ சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவும் கிராம அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றன. இவற்றில் கிராம அபிவிருத்தியில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் பற்றியும் அதன் தோற்றம் மற்றும் செயற்பாடுள் பற்றியும் மிகச்சுருக்கமாக நோக்குவோம்.

## இலங்கைப் பொரளாதாரத்தில் சிக்கன கூட்டுறவுச் சங்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் ஓர் நோக்கு.

கூட்டுறவு என்பது நாட்டுறவாகும். இலங்கைப் பொருளாதாரத்தின் வரலாற்றில் முதலில் தோன்றிய ஓர் அமைப்பாகச் சிக்கன கடனுதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கமே விளங்கியது. இலங்கையில் கூட்டுறவின் அவசியம் உணரப்பட்ட காலத்தில் கிராமியக் கடன் பிரச்சினையே முதன்மையான பிரச்சினையாக உணரப்பட்டது. கி.பி 1505 இலிருந்து 1948 வரையும் போத்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் என, ஐரோப்பியரின் வருகையும் அவர்களது ஆட்சி அதிகாரங்களும் காணப்பட்ட போதிலும் 1815 இல் கண்டி இராச்சியம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து 1828 கோப்பிப் பயிர் அறிமுகத்துடன் ஆரம்பமான பெருந்தோட்டப் பொருளாதார அமைப்பு, ஆங்கிலேய ஆட்சியாளர்களால் நன்கு திட்டமிட்டு வளர்த்தெடுக்கப்பட்ட போது, கவனிக்கப்படாத அதேநேரம் புறந்தள்ளப்பட்ட ஓர் துறையாக உள்நாட்டு (குடியான்) விவசாயம் அதாவது கிராமிய விவசாயத்துறை விளங்கியது. இந்த வகையில் இலங்கை என்ற ஒரு பொருளாதார எல்லைக்குள் ஒன்றுடன் ஒன்று முன்கொழு மற்றும் பின்கொழு தொடர்புகளற்ற ஓர் இரட்டைப் பொருளாதாரத் தன்மை நிலவத் தொடங்கியது.

இங்கு பெருந் தோட்டத் துறையானது ஆங்கிலேய ஆட்சியாளர்களது செல்லப் பிள்ளையாக விளங்கியது. இப் பெருந்தோட்டத்துறையானது, குடியேற்ற ஆதிக்க நாடான பிரித்தானியப் பொருளாதாரத்தின் மேம்பாட்டிற்காகத் திசை திருப்பி விடப்பட்டிருந்தது. இதன் விளைவாகப் பிரித்தானியர் இத் துறையில் அதீத கவனம் செலுத்தி வரலாயினர். ஆனால் மறுபுறம் கிராமிய விவசாயத் துறையானது, கிராமிய மக்களது ஜீவனோபாயத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலையில் இலங்கைப் பொருளாதாரத்துக்குத் தனது பங்களிப்பை நல்கியது. இந்த வகையில் கிராமிய மக்கள் தமது அடிப் படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்யமுடியாத சூழ்நிலையில் பல இன்னல்களை எதிர்நோக்கி வரலாயினர். தமது நாளாந்த மற்றும் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட முடியாத நிலையில் வட்டிக்குக் கடன் வாங்கும் பரிதாப நிலை காணப்பட்டது. அத்துடன் அறவிடப்படுகின்ற வட்டி கூட அதிகமானதாகவும் பெரும் சுமையாகவும் காணப்பட்டதுடன் பல வழிகளில் சுரண்டலுக்கும் வழி வகுத்தது. இத்தகைய சூழ்நிலையில் இவ்வாறாக அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து வறிய மக்களிடமிருந்து பெருமளவில் பணத்தைச் சுரண்டும் அல்லது கொள்ளையிடும் முகவர்களிடமிருந்து பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட ஒரு கடன் வழங்கும் அமைப்பு என்ற வகையில், கூட்டுறவு முறை தோற்றம் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன்படி 1891 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணய சங்கங்களின் சட்டத்தின் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தில் உள்ள வெல்ல பயத்து கிராமச்சங்கம் 1912 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டது. இருப்பினும் கண்டி மாவட்டத்தின் தும்பறை வெளி என்ற இடத்தில் பதிவு செய்யப்படாது 1906 ஆம் ஆண்டு ஒரு கிராமச் சங்கம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியை நான்கு கால கட்டங்களாக நாம் நோக்க முடியும்.

இவ்வகையில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் சிறிய கிராமிய விவசாயிகளுக்குக் கடன் வசதியை ஏற்ப டுத்திக் கொடுக்கும் நோக்கம் கொண்டதாகவே விளங்கியது. 1940 ஆம் ஆண்டு வரையும் 1302 சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. கூட்டுறவு இயக்கம் ஆரம்பமான காலம் தொட்டு கிராமிய அபிவிருத்தி தொடர்பான முக்கிய பணி கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. விவசாயத்தை விருத்தி செய்வதற்காக நிதிநிறுவனங்களின் பொறுப்பை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விவசாய வங்கிக் குழுவானது 1977 ஆம் ஆண்டில் கூட்டு றவுக் கடனுதவுச் சட்டத்தை சிபார்சு செய்தது. சிக்கன கடனுதவு கூட்டு றவுச் சங்கங்களின் முகப்புரையில் அவற்றின் நோக்கங்கள் என்ற வகையில்:

சிக்கனம்,

சுய உபகாரம்,

விவசாயிகள் மற்றும்

சிறு அளவிலான கைத்தொழிலாளர்கள் என்பவர்கள் மத்தியில் கூட்டுறவை விருத்தி செய்தல் ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப காலம் தொட்டு விவசாயம், கிராமிய ஏழை மக்கள், கிராமிய அபிவிருத்திப் பணிகள் என்பவற்றிற்காக வைப்புக்களைத் திரட்டும் போது கூடிய கவனம் செலுத்தப்பட்டதோடு இந்த நிறுவனங்களின் நோக்கங்களிலும் மேற்கூறிய விடயங்களுக்காகக் கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாகத் தெரி கின்றது. இதன் பிரகாரம் இலங்கைப் பொருளாதாரத்தில் உருவாகி சமூகத் தோடு தொடர்புடைய முதலாவது நிதி நிறுவனம் சிக்கன கடனுதவு கூட்டு றவுச் சங்கம் என்பது தெளிவாகின்றது. அரச ஆதரவு பெற்ற விவசாய விரு த்திக்கான கடன் திட்டங்கள் 1947 இல் ஆரம்பிக்கப்படும் வரை கிராமியப் பிரிவில் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் கிராமமட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்ட ஒரேயொரு சிறப்பான நிறுவனமாகச் சிக்கன கடனுதவு கூட்டு றவுச் சங்கம் விளங்கியது. இந்த இயக்கம் ஆரம்ப கட்டத்தில் அரச உதவி யுடன் செயற்பட்டமையாலும் அங்கு கணிசமான அளவு விஸ்தரிப்பு ஏற்ப ட்டுள்ளது.

இந்த அடிப்படையில் இலங்கையில் கிராமங்களில் வசிக்கும் வறிய மக்களிற்குத் தோள்கொடுக்கும் ஒரு நண்பனாக இந்தச் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் தொழிற்பட்டு வந்தன; வருகின்றன. இவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பாரிய நிலப்பரப்பையும் அதேநேரம் வறிய மக்க ளையும் தன்னகத்தே கொண்டுள்ள ஜீவனோபாயப் பொருளாதாரச் செயற் பாடுகளில் பெருமளவில் தங்கி வாழ்கின்ற தென்மராட்சிப் பிரதேசத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற சாவகச்சேரி பிரதேசத்தில் அமைந்துள்ள துடிப்பாகச் செயற்படுகின்ற சாவகச்சேரி ஸ்ரீபழநி சிக்கன கடனுதவு கூட்டு றவுச் சங்கத்தின் கடந்த 20 வருட சேவை மகத்தானது. இச்சங்கத்தினை நெறிப்படுத்தி வந்த, வருகின்ற நிர்வாக சபையினர் மற்றும் அங்கத்தவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். காலத்தின் தேவை கருதி, பல செயற்பாடு களை ஆற்றி வரும் இச்சங்கம் மேலும் பல சேவைகளை ஆற்றி இப்பிரதேச மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதுடன், இப்பிரதேச அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்து ஒட்டு மொத்த பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கும் பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

சீனப்பழமொழி: - ஒரு வறியவனுக்கு மீனைச் சாப்பிடக் கொடுத்து அன்றைய நாள் வறுமையைப் போக்குவதை விட அவனுக்கு மீனைப் பிடிப்பதற்குக் கற்றுக் கொடுப்பதே அவனின் வறுமையை நிரந்தரமாக இல்லாது ஒழிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்



செல்வி. மிதிலா பரமநாதன்
A/L வர்த்தகம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இலாபத்தை உழைக்கும் நோக்கம் கருதாது அங்கத்தவர்களுடைய நலன், சமூக நலன் என்பவற்றினைக் கருத்திற் கொண்டு நிறுவப்படுகின்ற நிறுவனங்களே இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் எனப்படும்.

இவ் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் அங்கத்தவர்களைப் பிரதி நிதிகளாகக் கொண்டு இயங்கச் செய்யப்படும்.

இந்நிறுவனங்கள் சமூகத்திற்குச் சேவை வழங்குகின்ற நிறுவனங் களாகக் காணப்படும். இவை அங்கத்தவரின் நலன் கருதிச் செயற்படும் நிறுவனங்களாகக் கருதப்படும்.

உதாரணம்:- சனசமூக நிலையம்
கூட்டுறவுச் சங்கங்கள்
அபிவிருத்திச் சங்கங்கள்
விளையாட்டுக் கழகங்கள்
ஆலய பரிபாலனசபை அமைப்புக்கள்

## இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் நிதியினைத் திரட்டிக் கொள்ளும் வழிகள்

இலாப நோக்கமுடைய நிறுவனங்கள் தாங்கள் மேற்கொள்ளும் செலவீனங்களுக்கு மேலதிகமாக வருமானத்தை ஈட்டிக்கொள்வதனால் நிதியினை ஸ்திரப்படுத்திக் கொள்ளும்.

ஆனால் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் சேவையினை வழங்கும் பொருட்டு அமைக்கப்பட்டவையாகும். எனவே அந்நிறுவனங்கள் இலாபத் துடன் செயற்பட்டுத் தங்களது நிதியினை ஸ்திரப்படுத்திக் கொள்ளமுடியாது. ஆனால் அத்தகைய நிறுவனங்கள் ஏதோ ஒரு வழியில் நிதியினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டித் தங்களது நிதிநிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வது கட்டாயமானது ஆகும்.

இந் நிதிநிலை ஸ்திரமானதாக அமைந்திருந்தாலே - அங்கத்தவருடைய நலனாக இருந்தாலும் - தங்களது செயற்பாட்டைச் செவ்வனே மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

எனவே இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் தங்களது நிதியனைத் திரட்டும் மார்க்கங்களாவன.

1. அங்கத்தவர் கட்டணம் அல்லது சந்தா
2. நன்கொடைகள்
3. களியாட்ட நிகழ்வுகளுக்காக நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்யும் போது கிடைக்கும் வருமானம்.
4. அங்கத்தவர் நலன் கருதி அமைக்கப்படும் வியாபார நிலையம்
   உதாரணம் :- சிற்றுண்டிச் சாலை
   மதுபான விற்பனை நிலையம்
5. பழைய பத்திரிகை விற்பனை
6. அதிஸ்டலாபச் சீட்டிழுப்புக்கள் மூலம்

## சந்தா / அங்கத்தவர் கட்டணம்
## (Subscription)

இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் தங்களது அங்கத்தவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் நிதியே அங்கத்தவர் கட்டணம் அல்லது சந்தாக் கட்டணம் என அழைக்கப்படுகின்றது.

இவ் அங்கத்தவர்க் கட்டணமானது ஆண்டுச் சந்தா, ஆயுள் சந்தா எனக் காணப்படுகின்றது. இவ் ஆயுள் சந்தா ஒரு தடவையே செலுத்தப்படும். ஆண்டுச் சந்தாவானது மாதாந்தமோ அல்லது காலாண்டு ரீதியாகவோ செலுத்தப்படலாம். இவ்வாறு சந்தாக் கட்டணமானது அங்கத்தவரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் போது குறித்த ஆண்டுக்கான சந்தா வருமானமே வருமானச் செலவுக் கணக்கில் காட்டிக் கொள்ளப்படும்.

## இலாபநோக்கமற்ற நிறுவனம் பேணும் கணக்குகள்
### கொள்ளல் கொடுத்தல் கணக்கு

காசுப் பெறுவனவுகளையும் காசுக்கொடுப்பனவுகளையும் தெளிவாகக் காட்டுகின்ற ஓர் பேரேட்டுக் கணக்கே கொள்ளல் கொடுத்தல் கணக்கு எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கொள்ளல் கொடுத்தல் கணக்கு இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் காசுக் கணக்கினை ஒத்ததாகக் காணப்படும்.

இக்கொள்ளல் கொடுத்தல் கணக்கில் காணப்படும் விடயங்கள்.

ஆரம்பக் காசு மீதி, வங்கி மீதி

காசு, மொத்தப் பெறுவனவுகள்

காசு, மொத்தக் கொடுப்பனவுகள்

காசு, வங்கி இறுதி மீதி

## வருமானச் செலவுக் கணக்கு

இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் தங்களது செயற்பாட்டின் விளைவாக கிடைத்த வருமான மிகை அல்லது குறைவினை அறிந்து கொள்வதற்காகத் தயாரிக்கப்படும் ஒரு கணக்கே வருமானச் செலவுக் கணக்கு ஆகும்.

இவ்வருமானச் செலவுக் கணக்கின் மூலம் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் தங்களது செயற்பாட்டிற்கு மேலாக, வியாபார முயற்சியில் ஈடுபடும் சமயத்தில் கிடைக்கும் இலாப நட்டங்களினை எளிதாக அறியலாம்.

வருமானச் செலவுக் கணக்கானது இலாப நோக்குடன் இயங்குகின்ற நிறுவனங்கள் தயாரிக்கும் வியாபார இலாபநட்டக் கணக்கை ஒத்ததாகக் காணப்படும். இவ்வருமானச் செலவுக்கணக்கானது அட்டுறு எண்ணக்கருவின் அடிப்படையில் தயார் செய்யப்படுகின்றது. இவ்வருமானச் செலவு கணக்கினுள் மூலதனச் செலவுகள் உள்ளடக்கப்படமாட்டாது.

இவ்வருமானச் செலவு கணக்கானது இலாபநோக்கமற்ற நிறுவனங்களின் அக்கறை கொள்ளும் உள்ளூராட்சி அமைப்புக்கள் மற்றும் சங்க அங்கத்தவர்களுக்குத் தேயையான தகவல்களை வழங்குகின்றது.

## ஐந்தொகை

இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் நிதி நிலைமையினை வெளிக்காட்டுகின்ற கூற்றாக ஐந்தொகை காணப்படுகின்றது எனலாம். இவ் ஐந்தொகையானது இலாப நோக்குடைய நிறவனங்கள் தயாரிக்கும் ஐந்தொகையை ஒத்ததாகக் காணப்படும்.

இலாப நோக்கமுடைய நிறுவனங்களின் ஐந்தொகையில் காணப்படும் மூலதனம் இலாபநோக்கமற்ற நிறுவனங்களின் ஐந்தொகையில் திரண்ட நிதி எனக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதமே இந்திய இசையின் நதி மூலம்



செல்வி. கேமினி சுரேந்திரலிங்கம்.
A/L 2012
யா/ டிறிபேக் கலலூரி,
சாவகச்சேரி.

பிரபஞ்சமே ஓம் என்ற ஒலியில் உண்டானது என்றால் இசையும் அப்போதே துவங்கிவிட்டது எனலாம். இசை என்ற வார்த்தைக்கு மனதிற்கு உகந்த ஒலிகளின் சங்கமம் என அர்த்தம் கொள்ளலாம். யாருடைய மனதிற்கு என்ற கேள்வி வரும். எனக்குப் பிடித்த இசை உங்களுக்கு பேரிரைச்சலாக இருக்கலாம்.

அழகு போலத்தான் இது. எது அழகு என்பதில் உங்களுக்கும் எனக்கும் கருத்துக்கள் மாறுபடலாம். ஆனால் இசைக்கு கச்சிதமான கணக்குகள் உண்டு. சரியான அளவுகளில் ஏற்ற இறக்கங்கள் உண்டு. உலகம் முழுவதும் இசைக்குச் சீரான ஒலிகளின் உயர்வு தாழ்வு நேரக் கணக்குகள் உண்டு. இன்றைய அவசரகால இசையைத் தவிர 1960களுக்கு முன் வரை இசை எங்குமே இரைச்சலாக இருந்ததில்லை. இசைக்கு எதிர்ப் பதம் இரைச்சல்தான். இரைச்சலில்லாதவை எல்லாம் இசை என்று எளிதாகப் பொருள் கொள்ளலாம்.

இந்திய இசையின் பரிணாமம், மனிதனை பரவசப்படுத்தக்கூடிய எல்லாவற்றையுமே இறைவனுடன் ஒன்றுபடுத்திப் பார்ப்பதுதான். அதிலும் மனிதனை பரவசத்தின் உச்சிக்கு மெய்மறந்து (போதைப் பொருட்கள் இல்லாமல்) போகக்கூடிய வல்லமை படைத்த இசையை விட்டுவிட முடியுமா? ஆதிகாலத்தில் இசை என்றால் அது இறைவனுக்கு மிக அருகில் மனித னைக் கொண்டு செல்லக் கூடியது. இறைவனுக்கு அர்ப்பணிப்பது என்றறிந்த காலத்திலிருந்து மெல்ல மெல்ல இந்தியாவில் இசையை மனதை மயக்க, கேளிக்கைக்காக எனப் பின்னரே உபயோகித்தனர் என்று கருதப்படுகிறது.

இந்திய இசையின் துவக்கம் வேதத்திலிருக்கிறது. இறைவனே இசை வடிவமாக நாதப் பிரம்மம் எனப் பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகக் கூறப்படுகிறது. இந்திய இசையின் துவக்கம் தெய்வீகமானது. வேதங்களே இசை வடிவமாக முழங்கப்படுபவை தான். வேதங்கள் ஒரேசீராக மூன்று கட்டைகளில் பாடப்படுகின்றன. இன்றைய இந்திய இசையின் வடிவங்கள் 14 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரையான கால கட்டத்தில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றன. இந்தக் காலகட்டத்தில் வட இந்திய இசை, முகலாயர்கள், பதான்கள் மூலமாகப் பாரசீகத்தின் இசையுடன் கலந்து ஹிந்துஸ்தானியாகவும் மற்றொரு வடிவம் கர்நாடக சங்கீதமாகவும் பரிணமித்தது.

அதாவது பண்டைய காலந்தொட்டு கி.பி 13 ஆம் நூற்றாண்டு வரை பாரத நாடெங்கும் கர்நாடக இசை மரபுதான் வழக்கிலிருந்து வந்தது. வட இந்தியாவை முகலாயர்கள் கைப்பற்றிய பின்னர் பாரசீக அரேபிய இசை என்பவற்றின் கலப்பினால் வட இந்தியாவின் ஹிந்துஸ்தானி இசை உருவா கியது. ஆனால் தென்னிந்தியாவின் பிற இசை கலப்பற்ற கர்நாடக இசை வழக்கிலிருந்து வருகின்றது.

இவ்விரு இசைவகைகளும் ஒரே மரத்திலுள்ள இரு கிளைகள் போன்றன. இவற்றுக்கிடையே ஒற்றுமை வேற்றுமைகள் நிறைய உண்டு. கி.பி 1309 ஆம் ஆண்டிற்கும் கி.பி 1312 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஹரிபாலர் என்பவரால் எழுதப்பட்ட "சங்கீத சுதாகரம்" எனும் நூலில்தான் கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை என்ற இரு பிரிவுகள் பற்றி முதன் முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை பின்வருமாறு நோக்கலாம்.

## இராகம் :-

கர்நாடக, ஹிந்துஸ்தானி இசைகளுக்கான அடிப்படைத் தத்துவம் ஒன்றேயானாலும் பாடும் முறையில் அநேக வித்தியாசங்கள் உண்டு. 7 ஸ்வ ரங்கள், 12 ஸ்வரஸ்தானங்கள், 22 சுருதிகள், வாதி, சம்வாதி, விவாதி, அனுவாதி ஆகிய விடயங்கள் இவ்விரு இசை முறைமைக்கும் பொதுவான அம்சங்களாகும். கர்நாடக இசையில் 72 மேளகர்த்தாக்கள் அடிப்படையாக இருப்பது போன்றே ஹிந்துஸ்தானி இசையில் தாட்களும் இவற்றிற்கு இணையான கர்நாடக இசை இராகங்களும் வருமாறு.

பைரவி - ஹனுமதோடி (08)
பைரவ் - மாயாமாளவ கௌளை (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சூசாவி | - | நடபைரவி (22) |
| காபி | - | ஹரஹரப்பிரியா (20) |
| கநாஜ | - | ஹரிகாம்போதி (28) |
| பிலாவல் | - | தீரசங்கராபரணம் (29) |
| தோடி | - | சுப பந்துவராளி (45) |
| பூர்விரு | - | காமவர்த்தனி (51) |
| மார்வா | - | கமன்சரம் (53) |

யமன் அல்லது கல்யாணி – மேச கல்யாணி

கர்நாடக இசையில் ஆரம்ப அப்பியாச வரிசைகள் மாயமாளவ கௌளை இராகத்தில் கற்பிக்கப்படுகின்றது. ஹிந்துஸ்தானி இசையில் முதலாவதாகக் கற்பிக்கப்படும் இராகம் பிலாவலாகும்.

கர்நாடக இசையில் உள்ளது போன்றே ஹிந்துஸ்தானி இசையிலும் இராகங்கள் ஔடவ, ஷாடவ, சம்பூர்ண என்று ஸ்வரங்களின் எண்ணிக்கையைக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ஔடவ இராகம் | - | பூபாலி |
| ஷாடவ இராகம் | - | மார்வா, பாயா |
| ஷம்பூர்ண இராகம் | - | யமன், பிலாவல் |

கானகால முறைக்கேற்பவும், பருவகால முறைக்கேற்பவும், இராகங்களை பாடும் முறைகள் கர்நாடக இசையில் அருகி வருகின்ற போதும் ஹிந்துஸ்தானி இசையில் இம்முறை பெரிதும் பின்பற்றப்படுகின்றது.

| உதாரணம் :-பிரகாரம் | நேரம் | இராகங்கள் |
|---|---|---|
| உஷாக்காலம் | மு.ப 9 | கல்யாணி, பிலாவல |

| பருவகாலம் | இராகம் |
|---|---|
| கோடை | பைரவ் |
| மாரி | மேக் |
| இலையுதிர் | பஞ்சம |
| முன்பனி | நாட்டை, நாராயண |
| கூதிர் | ஸ்ரீ |
| வசந்தம் | வசந்த் |

மேலும் கர்நாடக இசையில் உள்ளது போன்றே ஹிந்துஸ்தானி இசையிலும் 7 ஸ்வரங்களும் கோமள தீவிர பேதத்தினால் 12 ஸ்வர ஸ்தானங்களாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிந்துஸ்தானி இராகங்களும் அவற்றிற்கு ஒப்பான கர்நாடக இராகங்களும் வருமாறு:-

| ஹிந்துஸ்தானி சங்கீதம் | கர்நாடக சங்கீதம் |
|---|---|
| ஸ்ரீ | ராமப்பிரியா |
| மால்கௌஸ் | ஹிந்தோளம் |
| பீம்பலா | கர்நாடக தேவகாந்தாரம் |
| ஜோஇயா | ஸாவேரி |
| பாகேஸ்ரீ | ஸ்ரீரஞ்சனி |
| பூபாலிதோடி | பூபாளம் |
| திலஸ் | நாட |
| தே'ஷ் | கேதாரகௌளை |
| கலாவதி | வல்கி |
| சுத்த கல்யாண் | மோகன கல்யாணி |

மந்தரஸ்தாயி, மத்தியஸ்தாயி, தாரஸ்தாயி ஆகிய மூன்று ஸ்தாயிகளும் ஹிந்துஸ்தானி இசையில் மந்தர ஸப்தக மத்ய ஸ்தக தாரஸ்ப்தக என அழைக்கப்படுகிறது.

## தாளம் :-

கர்நாடக சங்கீதத்தில் கையினால் தாளம் போடுவது போன்று ஹிந்தஸ்தானி இசையில் கையினால் தாளம் போடுவது இல்லை. தபேலா வில் வாசிக்கப்படும். டேக்காலை (ஜதி) தட்டியே பாடுபவர் பாடவேண்டும். வாத்தியம் வாசிப்பவர் வாசிக்க வேண்டும். எனவே ஹிந்துஸ்தானி இசையில் தபேலா வாசிப்பு முறை பற்றி பாடகரும் வாத்தியம் வாசிப்பவரும் அறிந்தி ருக்க வேண்டும். தேகா எனும் தாளம் ஹிந்துஸ்தானி சங்கீதத்திலிருந்து கர்நாடக இசைக்கு வந்த தாளமாகும்.

## உருப்படி வகை :-

ஹிந்துஸ்தானி இசையில் கர்நாடக இசையில் உள்ளது போன்று பெருவாரியான உருப்படி வகைகள் இல்லை. ஹிந்துஸ்தானி இசையில் வழக்கத்திலுள்ள சில உருப்படி வகைகள்.

துருபத்
தமார்
கயால்
இலட்சண கீதம்
இம்கி
தரானா
கஸல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்நாடக இசையில் அப்பியாச வரிசைகள் மாயமாளவகௌளை இராகத்தில் கற்பிக்கப்படுவது போல் ஹிந்தஸ்தானி இசையால் ஒவ்வொரு இராகத்தைக் கற்பிக்க முன்பும் "பலடாஸ்" என அழைக்கப்படும் ஸ்வர அப்பியாச வரிசை கள் கற்பிக்கப்படுகின்றன. கர்நாடக இசையில் சில உருப்படிகளில் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற அங்க வேறுபாடுகள் இருப்பது போன்று ஹிந்துஸ்தானி இசை உருப்படிகளில் ஸ்தாயி, பல்லவி, சுந்தரா, அனு பல்லவி ஆகிய அங்க வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சில உருப்படிகளை கர்நாடக இசையிலுள்ள சில உருப்படிகளுக்கு ஒப்பிட்டுக் கூறலாம்.

| **ஹிந்துஸ்தானி இசை** | **கர்நாடக இசை** |
|---|---|
| கஸல் | ஜாவளி |
| சூம்கி | பதம் |
| தரான | தில்லானா |

பீர்தாஸ், சூர்தாஸ், மீராபாய் ஆகியோரது பாகன்களும் இன்று கர்நாடக இசைக் கச்சேரிகளில் இறுதியில் பாடப்பட்டு வருகின்றன. 12 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட அஷ்டபதிகள் கர்நாடக ஹிந்துஸ்தானி இராகங் களில் தென்னிந்தியா எங்கும் பாடப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் கர்நாடக சங்கீதத்தில் கோமள தீவிர பேதத்துக்கு பெரிய சின்ன என்ற பதங்களே உபயோகத்தில் இருந்தன. பிற்காலத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் செல்வாக்கினால் கோமள தீவிர என்ற பதங்கள் கர்நாடக சங்கீதத்தில் பயன்படுத்தப்பட்டன. கர்நாடக இசையில் ஓர் இராக த்தின் உருப்படியே பாடப்படுவது வழக்கமாகும். ஆனால் ஹிந்துஸ்தானி இசையில் ஓர் இராகத்திலேயே விளம்பலய உருப்படி, துவலய உருப்படி பாடப்பட்டு வருகிறது.

ஹிந்துஸ்தானி சங்கீதத்திலிருந்து கர்நாடக சங்கீதத்தில் வந்த இராகங்கள்.

| | |
|---|---|
| திவிஜாவந்தி | யமுனா கல்யாணி |
| ஹமீர் கல்யாணி | காபி |
| பெஹாக் | தர்பாரி கனடா |
| பாகேஸ்ரீ | பீம்பலாஜி |
| ஜோன்புரி | மாண்ட |
| தேவி | சிந்துபைரவி |

போன்றவையாகும். இவ்வாறு கச்சேரி முறை, செல்வாக்கு வாத்தியக் கருவி என்பனவற்றினால் ஒற்றுமை வேற்றுமையும் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகள்



செல்வி. அனோஜா பரமநாதன்
**A/L 2014**
யா/ இந்துக் கல்லூரி சாவகச்சேரி.

மக்களின் வாழ்க்கையை காக்கவும் வளம்படுத்தவும் எத்தனையோ வாய்ப்புக்கள் இருந்தும் நடைமுறையில் எதனையும் செய்வதற்கு அக்கறை காட்டாத நிலை காணப்படுகிறது. குறிப்பாக பெண்கள் மீதும் சிறுவர் மீதும் தயக்கமின்றி மனித உரிமைகள் மீறப்படுவதை தடுப்பதற்கு எல்லோரும் சிறுவர் உரிமைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

இன்று உலகில் உள்ள சனத்தொயையில் $^1/_3$ பங்கினர் சிறுவர்கள். இவர்கள் தமது உரிமைகள் என்ன என்பதை அறியாதவர்களாக உள்ளனர். இதனால் இவர்களின் உரிமைகள் என்ன என்பதை சிறுவர்கள் மட்டுமன்றி வயது வந்தவர்களும் அறிய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இல்லாது விடில் இவர்களது உரிமைகள் பல தரப்பினாலும் மீறப்பட்டுவிடும். இதனால் சிறவர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு எல்லோருக்கும் உண்டு.

எதிர்கால உலகம் இன்றைய சிறுவர்களில் தங்கியுள்ளதாய் ஒவ்வொருவரும் கூறுவதிலிருந்து சிறுவர்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பது தெளிவாகின்றது. சர்வதேச ரீதியாக 1924 ஆம் ஆண்டு ஜெனிவா சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டபோதும் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை. இதன் பின்னர் 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அனைத்துலக மனித உரிமையைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் போதியனவாக காணப்படாமையினால் 1959 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் உருவாக்கப் பட்டது. இச்சமவாயத்தை 1991 ஆம் ஆண்டு இலங்கை பின்னுறுதிப் படுத்தியதுடன் அதன் ஏற்பாடுகளை இலங்கையில் பயனுறச் செய்வதற்காகச் சிறுவர் உரிமைப் பட்டயம் என்பதனை உருவாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடும்பம் அதன் பிள்ளைகளின் வளர்ச்சியில் தங்கியுள்ளது. இந்தப் பிள்ளைகளை நல்ல நிலையில் வளர்த்தெடுக்கும் பொறுப்பு பெற்றோரைச் சார்ந்துள்ளது. குழந்தை தனது ஆளுமையை முழுமையாகவும், இசைவாகவும், விருத்தி செய்வதற்கு ஒரு குடும்பச்சூழலில் ஆனந்தமும், அன்பும், பற்றுணர்வும் உள்ள சுற்றாடலில் குழந்தை வளர வேண்டும். சிறுவர் சிறுமியரின் வளர்ச்சி சமுதாயத்தில் அது தனக்குரிய முழுப்பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வதற்கு அவசியமான பாதுகாப்பையும் ஒத்தாசையையும் அளித்தல் வேண்டும். அனேகமாக எல்லாச் சமூகங்களிலும் வறியவர்கள் ஆயினும், செல்வந்தர்களாயினும் பெண் பிள்ளைகளைப் பார்க்கிலும் ஆண் பிள்ளைகளின் ஆரோக்கியமான மேம்பாட்டினை விரும்புகின்றனர். இதனால் பெண் பிள்ளைகளின் அனேக உரிமைகள் மீறப்படுகின்றன. பெண் பிள்ளைகள் எல்லாத்துறையிலும் கல்வி கற்க முடியாத நிலை, பெண்ணும் ஆணும் ஒரே வேலையைச் செய்தாலும் பெண்ணிற்குக் குறைந்த கூலி, பாலியல் துஷ்பிரயோகம், பெண்ணின் சுதந்திரத்தை விரும்பாமை போன்றன பெண்களை இன்றும் துஷ்பிரயோகிக்கும் செயல்களாகக் காணப்படுகின்றன.

பெண்கள் விரும்பிய தொழிலைச் செய்ய மறுத்தல், பெண்களின் மொழி, இனம், பண்பாட்டை மதிக்காமை போன்றனவும் மீறப்படுகின்ற செயல்களாகும். இன்றைய சூழ்நிலையில் சிறுவர் உரிமைகள் பல மீறப்படுகின்றன. சிறுவர்களிற்கு வேண்டிய கல்வி, சுகாதாரம், பொழுது போக்கு வசதி, போன்ற உரிமைகளை அனுபவிக்க விடாது அவர்களைத் தொழிலில் ஈடுபடுத்தி அவர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன. சிறுவர்களைக் கடத்தி விற்று, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கி பெற்றோரிடம் இருந்து பிரித்து பெற்றோருடன் சேர்ந்து வாழ்வதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. சிறுவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்கவும், சுதந்திரமான முடிவை எடுக்கவும் முடியாமல் தடுத்து வருகிறார்கள். வேலைத்தளத்தில் சிறுவர்களை அடிமையாக்கி உணவு, உடை, சுகாதாரம், கல்வி வசதி, பொழுது போக்கு வசதி, ஓய்வு போன்ற ஒரு உரிமையையும் அனுபவிக்கவிடாமல் தடை செய்கிறார்கள். அத்தோடு சிறுவர் உரிமைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காத நிலையும் காணப்படுகிறது. பல சிறுவர்கள் போரினால் உயிர் துறந்தும், ஊனமுற்றும், பெற்றோரை இழந்தும், வீடுகளை இழந்தும் உளரீதியாகப் பாதிப்படைந்து அகதிகளாக உள்ளார்கள். சிறுவர்களுக்கு நடத்தப்படும் அக்கிரமங்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் வெளியே தெரியாதநிலை காணப்படுகிறது. விபச்சாரம், ஆபாசப்படத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பு, என்பவற்றில் சிறுவர், சிறுமியர்களை ஈடுபடுத்தலும், உலகளாவிய ரீதியில் வளர்ச்சி அடைந்து வரும் தொழிற்துறைகளும், வறுமை, பணம் போதாமை, மலிவான பாலியல் சார்ந்த நடவடிக்கைகளிற்கான கீழ்த்தரமான தொழில் செழித் தோங்குவதற்கு ஏதவாக உள்ளது.

எனவே சிறுவர் உரிமைகள் மறுக்கப்படுவதைத் தடுப்பதற்குப் பிள்ளைகளைப் பாலியலில் ஈடுபடுத்தப்படுகிறவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளைப் படிப்பித்து அர்த்தமுள்ள தொழில் முயற்சியில் ஈடுபடுத்தவேண்டும். சிறுவர் உரிமைச்சட்டம் ஒன்று உள்ளது என்பதையும் அச்சட்டத்தில் சிறுவர்களிற்கு என்ன உரிமைகள் உள்ளது என்பதையும் பரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும். தொடர்பு சாதன ங்களான தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை மூலம் சிறுவர்கள் உரி மைகள் பற்றிய பிரச்சாரங்களை மேற்கொள்ளவேண்டும்.

## தாய்

உயிரொன்று துயில் கொள்ள உதிரத்தைப் பாலாக்கி
உலகில் முதல் வெளிச்சம் காட்டி நின்றவள் தாய்

தொட்டிலில் பாட்டிசைத்து கட்டிலில் உறங்கவைத்து
மட்டிலா மகிழ்ச்சியில் திளைத்தவள் தாய்

வலிகளால் வீங்கும் விழிகளைத் துடைத்து
வீரத்தை விதைத்து வியர்வை சிந்தியவள் தாய்

குறைகளை நிறைவாக்கி கல்வியை முறையாக்கி
நெறிகளைப் பின்பற்ற வழிசமைத்தவள் தாய்

தன்னலமற்ற சேவைகள் செய்து நித்தமும் உழைத்து
நானிலம் போற்றும் நன்மக்களாக்க வியூகம் அமைத்தவள்
தாய.

சி.பிரவீன்,
கண்டி ஒழுங்கை, சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியும், அண்மைக்காலத்தில் சுற்றுலாப் பயணத்துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்களும்.



செல்வி. சோபனா இராசரத்தினம்
கல்ரெக்ஸ் ஒழுங்கை,
சாவகச்சேரி.

இலங்கை என்னும் நாடானது இந்தியாவுக்கு அருகே வெப்பவலய த்தை சேர்ந்த தீவாக இருந்து வருவதுடன் பல எண்ணற்ற அழகியல் அம்ச ங்களை தன்னத்தே கொண்ட நாடாக இருந்து வருகின்றது இலங்கை நாடு. இயற்கை எழில்கொஞ்சும் தீவாக காணப்படுவதால் அதிகளவு சுற்றுலாப் பய ணிகள் வருகை தருவதற்கான காரணமாக அமைகின்றது.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பு 65,610 சதுர கிலோ மீற்றராகும். இலங்கை கண்ணைக் கவரும் கடற்கரைகள் பல்வேறு புராதன சின்னங்கள், மற்றும் வழிபாட்டுத்தலங்கள், பசும் புற்தாவரங்கள், மலைகள், இயற்கைத் துறைமுகங்கள் எனப் பல கவர்ச்சிகரமான பகுதிகளைக் கொண்ட நாடாக இருந்துவருகின்றது. இதனை விட இலங்கை மக்கள் இயல்பாகவே விருந் தோம்பல் பண்பினையும் கவர்ச்சிகரமான புன்னகையினையும் தன்னகத்தே கொண்டுள்ளனர். இவ்வாறான பல்வேறு காரணங்களால் சுற்றுலாப் பயணத் துறையும் இணைந்து வளர்ந்து வந்துள்ளது.

இலங்கையினைப் பொறுத்தவரையில் சுற்றுலாக் கைத்தொழில் புதிய கருதுகோளாக இருந்து வரவில்லை. வரலாற்றுக் காலம் முதல் இலங்கை யானது கிழக்கு மேற்கு வர்த்தகப் பாதையில் அமைந்திருந்ததுடன் பெருந் தொயைான வெளிநாட்டு வணிகர்களையும் கவர்ந்திருந்தது. மேலும் இல ங்கையூடாக சர்வதேச வர்த்தக இணைப்புக்கள் இடம்பெற்றுவந்துள்ளன என்பதற்கான ஆதாரங்கள் காணப்பட்டு வருகின்றன. எவ்வாறு இருப்பினும் 1930 களிலே சர்வதேச ரீதியாக சுற்றுலாத்துறை உரிய அங்கிகாரத்தினைப் பெற்றுக்கொண்டது. இலங்கையில் சுற்றுலாப் பணியகம் 1936 இல் ஸ்தாபிக் கப்பட்ட போதிலும் இலங்கையில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் சம்பந்தப்பட்ட அதன் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டவையாகவே இருந்து வந்தன. 1960 களின் பின்னர் உலகெங்கும் சுற்றுலாக் கைத்தொழிலில் ஓர் எழுச்சி ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் சுற்றுலாத்துறையின் முக்கியத்துவத்தையும் குறிப்பாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அது வழங்கக்கூடிய பங்களிப்பையும் உணரத்தொடங்கியது.

1965 அளவில் சுற்றுலாத் துறையானது இலங்கைக்கு வருமானம் ஈட்டித்தரும் முக்கியமான மூலமாக உருவாகியிருந்தது. பொதுவாக 1966 ஆம் வருடம் இலங்கையில் நவீன சுற்றுலா தோன்றிய வருடமாக கருதப்பட்டு வருகின்றது. இவ் ஆண்டிலேயே சுற்றுலாத்துறையை மேம்படுத்தி அபிவிருத்தி செய்யும் குறிக்கோளாக இலங்கைச் சுற்றுலாச்சபை ஆரம்பிக்கப்பட்டது.

இதன்பின்னர் இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரத்துறையாக சுற்றுலாத்துறை எழுச்சி கண்டது. இலங்கைச் சுற்றுலாச்சபை தயாரித்த சுற்றுலாப் பயணத்துறை தொடர்பான பத்தாண்டுத்திட்டம் (1992-2001) பல்வேறு குறிக்கோள்களைச் சாதிப்பதனை நோக்கமாகக் கொண்டது. அவையாவன.

சுற்றுலாப் பயணிகளுக்கான சராசரிச் செலவினை அதிகரிக்கச் செய்தல்

சுற்றுலாத்துறையின் தேறிய சம்பாத்தியத்தை அதிகாரிக்கச்செய்தல்.

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கான வசதி வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்தல்

அரச வரவு செலவுத்திட்டத்தினை பயன்படுத்தி சுற்றுலாத்துறையை விருத்தி செய்தல்

என்பவற்றை நோக்கமாகக் கொண்டு சுற்றுலாப் பயணத்துறையின் பத்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் அண்மைக் காலங்களில் முடிவடைந்ததன் காரணமாக இத்துறை அபரிமிதமான வளர்ச்சி கண்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். குறிப்பாக சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது எதிர்கால சுற்றுலாப் பயணத்துறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் என பல்வேறு பொருளியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## எதிர்நோக்கும் சவால்கள்.

இலங்கையில் குடித்தொகைப் பெருக்கத்துடன் இணைந்த விதத்தில் இயற்கை வளங்களின் நுகர்வு தீவிரம் அடைவதுடன் அதன் விளைவாகக் கேள்விக்கு ஏற்ற விதத்தில் நிரம்பல் இல்லாத ஒரு நிலை தோன்றியது. இப்பிரச்சினையில் வளங்கள் பெருமளவுக்கு நுகரப்படுவதுடன் உயிர் பன் முகத்தன்மையின் மீதும் பாரிய தாக்கம் ஏற்பட்டது. இது தவிரச் சுற்றுலாக் கைத்தொழில் அந்தந்த சூழலில் தங்கியிருக்கும் உயிர் பன்முகத் தன்மையின் சீரழிவின் மீது பெருமளவு தாக்கத்தினை எடுத்து வந்திருப் பதனை அவதானிக்கமுடியும்.

**இவ்வகையில்**

கடலரிப்பும் கரையோரப் பிரதேசத்தின் உயிர் பன்முகத்தன்மை சீரழிவும், மணல் நிறைந்த நீண்ட கடற்கரைகளும் பிரகாசமான சூரியஒளி யுடன் கூடிய சுவாத்திய வரலாற்று ரீதியாக இலங்கையின் முதன்மையான சுற்றுலாக் கவர்ச்சிக் கூறுகளாக இருந்து வந்துள்ளன. சுற்றுலாத்துறை அபி விருத்தியின் ஆரம்ப கட்டத்தின் போது சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டி வந்த தனியார் துறைத் தொழில் முயற்சியாளர்கள் கரையோரம் நெடுகிலும் நவீன ஹோட்டல்களும் நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபட்டனர். கரையோரப்பிரதேசம் நெடுகிலும் ஒன்றன்பின் ஒன்றாக அவ்விதம் பெருந் தொகையான ஹோட்டல்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக இத்தொழில் துறையில் நிலையான வளர்ச்சியின் மீது மோசமான தாக்கங்களை எடுத்து வரக்கூடிய பல பிரச்சனைகள் தோன்றியுள்ளன. கடலரிப்பு இயற்கையில் இடம்பெற்றுவரும் ஒன்றாக இருந்த வந்த போதிலும் ஒரு சில கரையோரப் பிரதேசங்களில் இது ஒரு தீவிர பிரச்சினையாக உருவாவதற்கு கடலுக்கு அருகில் பாரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டமையே காரணமாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் கடற்கரையோரங் களில் பெருமளவுக்கு நடமாடுவதால் கரையோரம் நெடுகிலும் கடற்கரைகள் பரவலாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதனை அவதானிக்க முடியும். முறை யான ஒரு ஒழுங்கில் குப்பைகளை அப்புறப்படுத்தும் விடயத்தில் உள் ளூராட்சி நிறுவனங்கள் போதிய அளவில் அக்கறை காட்டாதிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் இந்நிலமை மோசமாக காணப்படுகின்றது. இதேபோன்று ஓரளவு முறையான மத்திய திட்டமிடல் செயன்முறையொன்று இல்லாதிருந்து வருவதன் காரணமாகக் குப்பைகளைக் கொட்டும் நடவடிக்கை சுற்றுச் சூழலின் மீதும் இறுதியில் சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சியின் மீதும் மிகமோசமான தாக்கத்தை எடுத்துவரக்கூடிய ஒரு பிரச்சினையாக உள்ளது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இன்னமும் 500000 மட்டத்தை எட்டவில்லை. ஆனால் ஒருசில தொல்லியல் நினைவுச் சின்னங்கள், இயற்கைக் காட்சிகள், சமய புனித தலங்கள் போன்ற இடங்களில் மிதமிஞ்சிய அளவில் பயணிகளின் நடமாட்டமிருந்து வருகின்றது. உரியவிதத்தில் சிறந்த திட்டமிடல்கள் இல்லாமை காரணமாக கரையோர நகர் மையங்கள் மீதான நெருக்குதல் இப்பொழுது அவற்றின் தாங்கும் திறனையும் தாண்டிச்சென்றுள்ளது. சுற்றுலாக் கைத் தொழில் துரித வளர்ச்சி கண்டுவரும் பிரதேசங்களைச் சேர்ந்த காணிகளில் பெரும்பகுதி, சுற்றுலாச்சபைக்கு சொந்தமாக இருந்து வரும் பிரதேசங்களில் அத்தகைய இடங்களைத் தேசிய விடுமுறைத் தலங்களாக பிரகடனம் செய்யும் அதிகாரத்தை இச்சட்ட மூலம் சுற்றுலாத்துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கியுள்ளது.

குறிப்பாக உள்ளக பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக அல்லது உலக அளவிலான பொருளாதார மந்தம் காரணமாக காலத்துக்குக்காலம் சுற்றுலாக் கைத்தொழில் பின்னடைவுகளை எதிர்கொண்டு வந்துள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இந்நாட்டு அரசாங்கங்கள் பின்பற்றிய ஒழுங்கு படுத்தல் பொறிமுறையில் சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்கள் முதன்மையான கூறாக இருந்து வந்துள்ளன. இலங்கையை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் விரும்பி தெரிவு செய்யும் ஓர் இடமாக வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களும் ஆற்றலும் இருந்து வருகின்றது என்பதனை 1967 அளவிலேயே நாடு முதன் முதலாக உணரத்தொடங்கியது.

1999 இல் சுற்றுலாக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சிக்கான சுற்றுலாக் கொள்கையொன்று பிரகடனம் செய்யப்பட்டது. கட்டுப்பாடற்ற ஏறுமாறான விதத்திலான சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் தோன்றக்கூடிய மிக மோசமான சமூகத்தாக்கங்கள், சுற்றாடல் தாக்கங்கள் என்பவற்றை அரசாங்கம் நன்கு கவனத்தில் எடுத்துள்ளதென அதில் கூறப் பட்டுள்ளது. சுற்றுலாத்துறை அபிவிருத்தி திட்டமிட்ட ஒரு நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான ஓர் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தையும் இக்கொள்கைப் பிரகடனம் வலியுறுத்தியது. இந்தப் பாதகமான அம்சங்களுக்கு மத்தியில் சுற்றுலாத் துறை தொடர்பான பல வெற்றிக் கதைகளும் உள்ளன. சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கு சட்ட அமுலாக்கல் செயன்முறையில் காணப்படும் வெளி அழுத்தங்கள் களையப்படுதல் வேண்டும். மேலும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் திட்ட அமுலாக்கல் என்பன தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் முனைப்பான பங்கேற்பினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

## The Role of a woman

It's a great blessing to be a woman. She takes the role of daughter, and a mother giving lot of love, affection, selfless service with dedication and sacrifice.

Shi is no more a doll in the hands of man. She has roles of executives, planning officers, engineers, lawyers, judges, doctors and beads of states

The concept of widowhood too is completely eradicated, and the old superstitions and old customs disappeared. She is no longer confined to household chores. She competes the man in every field, and claims equal status to day, in this computer era.

**T. Mayooran**
**Avarangal East,**
**Puttur.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீல் ஆம்ஸ்ரோங்
## (நிலவில் கால் பதித்த முதல் மனிதர்)



**"வேரற்கேணியன்"**
**ஏஸ்.பி.கிருஷ்ணன்.**
**244.˙.4, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஆம்ஸ்ரோங் 1930 ஆம் ஆண்டு ஒஹியோவில் பிறந்தார். இளம் வயதிலேயே அவருக்கு வானில் பறக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. மாதிரி விமானங்களை ஓட்டிப்பழகினார். பதினாறு வயதில் விமானி அனுமதி பத்திரம் பெறுவதற்கு முன்பே, மாணவர் விமானி என்ற அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டார்.

1947 இல் விண்வெளித் துறையில் பொறியியல் பட்டம் பெறுவத ற்காகப் பேர்டோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். 1949 இல் கொரிய யுத்தத் தின் போது சண்டை விமானம் ஓட்டுவதற்காக ஆம்ஸ்ரோமுக்கு அழைப்பு வந்தது. அங்கே பணியாற்றிய பின் 1952 இல் திரும்பிச் சென்று பேர் டோவில் B.Sc பட்டத்தைப் பெற்று தொடர்ந்து அதே துறையில் M.sc பட்டத்தையும் பெற்றார்.

1955 இல் விண்வெளி விஞ்ஞானிகளுக்கான தேசிய குழவின் மையத்தில் ஆராய்ச்சி விமானியாக நியமிக்கப்பட்டார். அங்கே X-15 உட்பட பல அதிவேக விமானங்களைக் கையாண்டார்.

1962 இல் நாசாவில் (NASA) இடம்பிடித்தார். தெரிவு செய்யப்பட்ட ஒன்பது விஞ்ஞானிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். விண்வெளிப் பயணி என்ற பட்டத்துடன் 1966 இல் ஜெமினி-8 இன் கமாண்டராக நியமிக்கப்பட்டார். சக விஞ்ஞானியான டேவிட் ஸ்கொட் என்பவருடன் ஒரு பயிற்சிப் பறத்தலில் சென்ற வேளை ஏற்படவிருந்த திடீர் திருப்பம் ஒன்று கட்டுப்பாட்டாளர் அறையிலிருந்து பிறந்த "உடன்திரும்பு" என்ற அறிவிப்பால் தவிர்க்கப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாண்டுகள் கடந்தன. ஆம்ஸ்ரோங், நாசாவின் நிலவுக்குச் செல்லும் விஞ்ஞானிகள் தேர்வில் முதலாவதாக இருந்தார்.

**1966 யூலை 16.**

ஆச்சரியம்! அதிசயம்! விஞ்ஞான வளர்ச்சி உச்சம் பெற்ற நாள். அப்பொலோ 11 விண்ணில் பறந்தது. காற்று மண்டலத்தைக் கிழித்துக் கொண்டு மண்ணிலிருந்து மறைந்தது. நான்கு நாள்களின் பின், அமெரிக்கக் கிழக்குப் பிராந்திய பகல் நேரம் - பிற்பகல் 4.18 ஈகிள் லூனா ஓடம் சந்திரனில் ஒரு பள்ளத்தாக்கின் அருகில் இறங்க இலக்கு வைத்தது. தரையிறங்குவதற்கு அது தகுந்த இடம் அல்ல. அது 100-150 மீற்றர் விட்டமுடைய ஒரு பள்ளம் என்று கம்யூட்டர் காட்டிற்று.

ஆம்ஸ்ரோங் ஓடத்தை மெல்லத்திருப்பி ஒரு கெலிகப்ரரைப் போல, ஒரு மென்மையான தரையில் இறக்கினார். ஈகிள் சந்திரனில் இறங்கியதும் ஆம்ஸ்ரோங் கொடுத்த ரேடியோத் தகவல் - பிற்பகல் 10.56 இற்கு ஆம்ஸ்ரோமின் கால் சந்திரனில் பதித்தது.

ஆம்ஸ்ரோங் லூனர் ரதத்தின் ஏணியை விட்டிறங்கினார். சந்திரனில் கால் பதித்த முதல் மனிதர் என்ற வரலாற்று வரியை எழுதினார். சக பயணி அல்ட்றின் இருபது நிமிடங்களின் பின் இறங்கி ஆம்ஸ்ரோங் அருகில் வந்தார். இரண்டு மணி நேரம் வரை அவர்கள் சந்திரனின் நடந்தனர். ஒரு கொடியையும் நினைவுக்கல்லையும் நாட்டினர். சந்திரனிலிருந்து இருபத் திரண்டு கிலோ நிறையுடைய ஒரு கல்லையும் தரை மண்ணையும் எடுத்துக் கொண்டனர். ரேடியோ தொடர்பில் ஜனாதிபதி றிச்சார்ட் நிக்சனுடன் கதைத்தனர். "என்றுமே பார்த்திராத, பிரமிக்க வைத்த காட்சி" என்றார் ஆம்ஸ்ரோங் பிறிதொரு வேளை.

அதேநேரம், மைக்கல் கொலின்ஸ், கொலம்பியா விஞ்ஞான கூடத்தில் உருவான ஒரு ஓடத்தில் தனியாக வெண்ணிலவைச் சுற்றி வந்தார்.

உண்மையில் சந்திரனில் ஈகிள் இருந்தது 21 மணித்தியாலமும் 36 நிமிடங்களுமாகும். யூலை 21 பி.ப 1.54 அவர்கள் சந்திரனை விட்டுத் தாயகம் புறப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969 யூலை 24 இன்னொரு உலகத்தை வெற்றிகொண்ட இரு விஞ்ஞானிகள் சென்ற விண்கலம் பசுபிக்கடலில் விழுந்து எழுந்தது.

அந்த வரலாற்று முதல்படி பற்றி ஆம்ஸ்ரோங் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அவர் விளம்பரத்தை விரும்பவில்லை. "மனித இனத்தின் சமாதானத்துக்காக பூமிப் பந்திலிருந்து வந்து சந்திரனில் முதல் அடி வைத்துள்ளோம்" என்று பொறிக்கப்பட்ட நடுகல்லை அங்கே ஓரிடத்தில் இன்றும் காணலாம்.

சமீபத்தில் தனது 82 வயதில் காலமான நீல் ஆம்ஸ்ரோங் நிலவின் கால் பதித்த முதல் மனிதர் என இம்மண் உள்ளவரை அறியப்படும். "ஒரு மனிதனுக்கு அது ஒரு சிறு சுவடு". மனித இனத்துக்கும் அது ஒரு சாதனை" ஆம்ஸ்ரோமின் புகழ்பெற்ற வார்த்தை இது.

## வாழிவில் ஒளி பெற......

வறுமை நீங்கி வாழ்வில் ஒளி பெற
நாளும் சுழன்று உழைத்திடுவீர்
உயர்வை அடைய வியர்வை சிந்தி
விடா முயற்சியால் உயர்ந்திடுவீர்

அரனைப்பாடி ஆசானைத் தேடி
அறிவைத் தேடிக் கற்றிடுவீர்
படிப்பைத் தேடித் பண்பை வளர்த்து
பட்டம் பதவியைப் பெற்றிடுவீர்

இன்பத்திலும் துள்ளாமல் துன்பத்திலும் துவளாமல்
தன்னலமில்லா சேவைகள் பல செய்து
சோனைகள் வேதனைகளை சாதனைகளாக்கி
உலகம் போற்றும் உத்தமனாய் வளமுடன் வாழ்வீர்

**சி.பிரசாந்தன்**
**கண்டுவில் ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணத்தின் பெருமை



A.K.தர்மராஜா **SLTES III**
**SP.TRD. Tamil, B.A, PGDE.MED.MA**
விரிவுரையாளர்
(தேசிய கல்வியற் கல்லூரி,
கோப்பாய்.)

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி 9ஆம் நூற்றாண்டின் பிற் பகுதிக்கும் 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் (கி.பி 882-1325) இடை ப்பட்ட ஏறத்தாழ 450 ஆண்டுகள் சோழர் காலம் ஆகும். இக் காலத்தில் நிலவிய அரசியல் பொருளாதார சமூக சமய நிலைக் காரணமாகத் தமிழ் இலக்கியமானது காவியம், பேரிலக்கியம், சிற்றிலக்கியம், சித்தாந்த சாத்திரம், இலக்கணம், நிகண்டு, உரைநூல்கள், மெய்க்கீர்த்திகள், தொகுப்பு நூல்கள் என பன்முகப்பட்ட வளர்ச்சியடைந்தது. இவ் வளர்ச்சிப்படிகளுள் பேரிலக்கியம் ஒன்றாகும். காவியம் போன்று மன்னர் புகழ்பாடும் பிறிதோர் இலக்கிய வடிவம் பேரிலக்கியமாகும். காவியங்கள் மானுடம் தழுவியதாக அமைய பேரிலக்கியங்கள் ஏதோ ஒரு வகையில் தெய்வீகம் தழுவியதாக அமைந்த சிறப்பைக் காணலாம். இக்காலந்தன்னில் தோன்றிய பேரிலக் கியங்கள் வரிசையில் கம்பராமாயாணம், கந்தபுராணம், வரிசையில் பெரிய புராணமும் சிறப்புப் பெறுகின்றது.

சமய குரவரில் ஒருவரான சுந்தரர், திருவாரூரில் அவதரித்த பெருமையு டையவர். இறைவனுடன் தோழமை உறவு பூண்டவர். இறைவனால் திருமணப் பந்தத்தில் தடுத்தாட் கொள்ளப் பெற்ற பெருமைக்கு உரியவர். இறைவனைப் பித்தர் என்று ஏசி, பின்னர் "பித்தா பிறை சூடி" என்னும் பதிகத்தால் இறைவனைப் போற்றியவர். பெருமைக்குரிய சுந்த ரரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஏனைய தனியார் 62 பேரையும் தில்லை வாழ் முதலான 9 தொகையடியாரையும் இணைத்து 72 அடியார் வரலாறு பேசுவதாக பெரிய புராணம் அமைந்துள்ளது.

சோழ மன்னனுக்கு மணநூல் என்று சிறப்பிக்கப்படும். சீவக சிந்தா மணியில் அதிக நாட்டம். இக்காவியம் சமணமதம் தழுவியது. இதனால் மன்னன் சமணசமயத்துக்கு மாறிவிடுவானோ? ஏன்ற ஐயம் முதலமைச்சரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழாருக்கு ஏற்பட்டது. மன்னன் மனதைச் சைவ மதத்தில் நிலை நிறுத்த விரும்பிய சேக்கிழார் பல்லவர் காலத்திலும் சற்று முன்னரும் பின்னரும் வாழ்ந்த அடியார் வரலாறுகளைச் சிறந்த காவியமாகப் படைக் கலாம் என்று கூற அவ்வாறாயின் அப்பணியை நீரே செய்க, என்று மன்னன் கூற, சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையையும் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் மூல நூலாகக் கொண்டு சேக்கிழார் பெரியபுராணம் பாடினார்.

பெரியபுராணத்துக்கு இறைவன் "உலகெலாம்" என அடியொடுத்துக் கொடுக்க அத்தொடரைக் காப்புச் செய்யுளின் முதல் அடியாகக் கொண்டு காப்புச் செய்யுள் அமைத்து அத்தோடு 4252 விருத்தப்பாக்களையும் சேர்த்து பெரிய புராணம் பாடினார் சேக்கிழார்.

பெரிய புராணத்தின் காப்புச் செய்யுளே பெரிய புராணத்தின் மகிமையை எடுத்து இயம்புகின்றது. அக் காப்புச் செய்யுள் வருமாறு

**உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகு இல் சோதியன் அம்பலத்து ஆடுவான்**
**மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்.**

இக் காப்புச் செய்யுளில் 72 எழுத்துக்கள் உள்ளன. இவை 72 அடியார்களைக் குறிப்பது போல் உள்ளன. இக்காப்புச் செய்யுளில் உலகு, உணர்ந்து, ஓதற்கு, அலகு, அம்பலத்து, ஆடு, சிலம்பு, வாழ்த்து, வணங்கு ஆகிய 9 குற்றியலுகரச் சொற்கள் உள்ளன. இவை தொகையடியார் ஒன்பது பேரையும் குறிப்பன போல் உள்ளன. ஒரு காப்புச் செய்யுளானது வாழ்த்து, வணக்கம், வருபொருள் ஆகியவற்றுள் ஒன்றைக் குறிப்பதாக இருக்கும். பெரியபுராணக் காப்புச் செய்யுளின் இறுதியடியில் "அடி வாழ்த்தி வணங்குவோம்" என்ற தொடர் இடம் பெறுகின்றது. இதில் இடம் பெறும் "வாழ்த்தி" என்பது வாழ்த்துக் கூறுவதாகவும் வணங்குவோம் என்பது வணக்கம் தெரிவிப்பதாகவும் "அடி" என்பது அடியார் வரலாறு ஆகிய வருபொருள் கூறுவதாகவும் அமைந்திருக்கும் சிறப்பினைக் காணலாம்.

இறைவனால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்ட "உலகு எலாம்" என்ற தொடர் பெரிய புராணம் முழுவதிலும் 14 இடங்களில் இடம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகங்கள் ஈரேழு பதினான்கு என்பதைச் சுட்டுவது போல இத் தொடர் 14 இடங்களில் இடம் பெற்றிருக்கும் சிறப்பையும் காணாலம்.

பெரிய புராணத்தின் அமைப்பு அந்தாதித் தொடையில் அமைக்கப்பட்டது போல் உள்ளது. ஒரு பாடலில் ஈற்றடிச் சொல் அடுத்த பாடலில் தொடக்கச் சொல்லாக அமைத்துப் பாடப்படுவது அந்தாதியாகும். அது போல பெரிய புராணத்தில் இடம் பெறும் அடியார் வரலாறு கூறும் பாடலின் இறுதிப் பாடலின் ஊடாக அடுத்த அடியார் யார் என்பதை அறியக் கூடியதாக உள்ளது. உதாரணமாக 27 பாடல்களைப் கொண்ட இளையான் குடிமாற நாணனார் புராணத்தின் இறுதிப் பாடல்

**இப்பரி சிவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி**
**முப்புரஞ் செற்றார் அன்பர் முன்பெழுந் தருளிப் போனார்**
**அப்பெரி யவர்தந் தூய அடியிணை தலைமேற் கொண்டு**
**மெய்ப்பொருட் சோதி வேந்தன் செயலினை விளம்பலுற்றேன்**

என அமைத்து இது வரை இளையான் குடிமாற நாயனார் வரலாறு கூறியயான் இனி சேதி நாட்டையாண்ட மெய்ப் பொருள் நாயனார் வரலாறு கூறுவேன் என்று கூறுவதாகக் காணலாம். இதே போல் 66 பாடல்களைக் கொண்ட காரைக்காலம்மையார் புராணத்தில் 65 பாடல்களில் அம்மையார் வரலாறு கூறி இறுதிப்பாடலை

**ஆதியுமந்தமுமிலான் அருள் நடமாடும் போது**
**கீதமுன் பாடுமம்மை கிளரொளி மலர்த்தாள் போற்றி**
**சீதநீர் வயல் சூழ் திங்களூரின் அப்பூதியாராம்**
**போதமாமுனிவர் செய்த திருத்தொண்டு புகலலுற்றேன்**

என்று அமைத்து இதுவரை காரைக்காலம்மையார் வரலாறு கூறியயான் இனி, திங்களூரில் வாழும் அப்பூதி அடிகள் வரலாறு கூறுவேன் என்று கூறுவதைக் காணலாம். இவ்வாறு அந்தாதித் தொடையில் அமைந்த சிறப்பைக் காணலாம்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக நூலின் பெயர்ப் பொருத்தத்தை நோக்கும் போது பாடல்களின் தொகையளவு கருதி பேர் ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் சமகாலத்தில் தோன்றிய கந்த புராணம் 10346 பாடல்கள் கொண்டது. கம்பராமாயானம் 10343 விருத்தப்பாக்களாலானது. இவற்றோடு ஒப்பிடுகையில் 4252 செய்யுள்கள் கொண்ட பெரிய புராணத்துக்கு இப் பெயர் ஏற்பட வாய்ப்பில்லை. உலகில் பெரியவற்றுள் பெரியதாகவும் சிறிய வற்றுள் சிறியதாகவும் அரியவற்றுள் அரிதாகவும் விளங்குபவன் இறைவன். அவ்விறைவன் தனை நினைக்கும் அடியார் மனக்குகையில் உறைபவன். அத்தகைய பெருமைபொருந்திய அடியாரைப் பாடுபொருளாகக் கொண்டதால் பெரிய புராணம் எனப் பெயர் பெற்றது.

பெரியபுராணம் போற்றும் அடியார்களை நோக்குகையில் சம்பந்தர், அந்தணர், குலத்தவர், சுந்தரர், அந்தனர் குலத்தில் உதித்து அரச மரபில் வளர்ந்தவர். சேரமான் பெருமாள் நாயனார், மெய்ப்பொருள் நாயனார் போன் றோர் அரச குலத்தவர். காரைக்காலம்மையார் வணிக குலத்தவர், திரு நாவுக்கரசு நாயனார் சைவவேளாள குலத்தவர், எறிபத்தர் மீனவர், கண்ண ப்பர் வேட்டுவ குலத்தவர், திருநாளைப் போவார் என்று சிறப்பிக்கப்படும் நந்தனார் புலையர் குலத்தவர், திருக் குறிப்புத் தொண்டர் சலவைத் தொழிலாளி. இவ்வாறு பல்வேறு குலங்களையும் சேர்ந்த அடியார்களைப் பாடு பொருளாகக் கொண்டு சாதிபேதமற்ற சமுதாய சமத்துவம் காணச் சேக்கிழார் விழைவதைப் பெரிய புராணத்தில் காணலாம்.

பல்லவர் காலத்திலும் சற்று முன்னரும் பின்னரும் வாழ்ந்த நாயன்மார்கள் அருளிச் செய்த தேவார திருவாசகங்கள் நம்பியாண்டார் நம்பியால் பதினொரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டது. அதன் பின் தோன்றிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகத் தொகுக்கப் பெறும் பேறு பெற்றதென்றால் பெரிய புராணத்தின் பெருமையைப் பேசவும் வேண்டுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு பல்லாண்டு நீடு வாழ்க.



கவிமாமணி கலா பூஷணம்
கல்வயல் வே. குமாரசாமி.

ஆண்டு இருபது ஆக அரிய பணி ஆற்றி
தூண்டு சுடராய்த் துணை நிற்கும்
மாண்பு மிகு ஸ்ரீ பழநி
சிக்கன கூட்டுறவுச் சங்கம்
பெறுக இறைவனருள் பேறு.

சேவை ஒன்றே சிந்தனையாய்
செயலில் சுயநல மேயின்றி
ஓயாது உதவிக்கரம் நீட்டும்
உண்மைத் தொண்டர் ஊக்கத்தால்
தாயாய் தயைசெய் ஸ்ரீ பழநி
சிக்கனக் கடன் உதவும்
சேயாம் அங்கத் தவர்களது
செம்மை நலம் சீர் வாழியவே.

சேர்ந்து இயங்கு சிக்கன உறவு வாழ்க
ஸ்ரீ பழநி சிக்கனச் சங்கம் வாழ்க
சார்ந்தோர்க்குத் தயை நல்கு தகைமை வாழ்க
தனியாற்றல் சேவைமனப் பான்மை வாழ்க
ஊர்ச்செழுமை பேணும் உயர் எண்ணம் வாழ்க
உத்தமர்கள் கூட்டுறவும் உழைப்பும் வாழ்க
பார்த்தோர்க்கு வியப்பளிக்கும் பணிவு வாழ்க
பல்லாண்டு பல்லாண்டு நீடு வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் நெடுங்காலம்.



வதிரி
சி.ரவீந்திரன்.

ஆண்டு இருபது
வெறும் இருபதல்ல
சேவையின் நிறைவுக்கு
இருபது.
இருபத்தொன்றின்
ஆரம்பம்.
எம்மவன்
ஸ்ரீ பழனி ஆண்டவன்
நாமம் பெற்று
சிக்கனக் கடன் தன்னை
கூட்டுறவால் மேம்படுத்தி
கூடி வாழும் மக்களுக்கு
நாடி வந்த பயனிது.

விருட்சங்கள்
பூத்துக்குலுங்கும்
நிறைவுடன் பயனும் தரும்
ஆரம்பத்தின்
அர்ப்பணிப்பை
எண்ணிப் பார்ப்போம்
அது 'மானா' வின்
அறிவின் ஆனந்தமாய்
உதித்தது.
அவரோடிணைந்தவர்களையும்
பாராட்டவேண்டும்.

செயல்பாடு என்பது
சொல்லித்தெரிவதில்லை
செயலால்
நிர்மானிக்கப்படவேண்டியது.

போர் எல்லோரையுமு
வாட்டியது
இதற்குள்தான்
சிக்கன கடனுமு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பான சேவையாற்ற
உருவானது.
வாழ்க்கைமுறைக்கும்'
சுயதொழிலுக்கும்
கல்வி வளர்ச்சிக்கும்

எத்தனையோ
நற்காரியங்களுக்கும்
எக்காலமும் கைகொடுத்தது

சிக்கனக் கடன் வாய்ப்பு

சிறந்த செல்வமாய் திகழ்ந்தது.
சாவகச்சேரியில்
டச் வீதியில
யாவரும் பாராட்டும்
சங்கமாய் திகழ்கிறது
சங்க வளர்ச்சி என்பது
ஒற்றுமையின் நற்குறி
மக்கள் ஒற்றுமையை
இச் சங்கத்தில் காண்கிறேன்.
இருபது ஆண்டு நிறைவா?

**இச் சங்கம் இன்னும் நெடுங்காலம் இப்பணி தொடரவேண்டும்
ஸ்ரீ பழனி ஆண்டவன் என்றும் துணை நிற்பான். நன்றே வளர்க
மக்கள் நலனே பெறுக!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவில் கோடி நன்மை



கலைஞர், கவிஞர்,.
கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

கூட்டுறவில் கோடிநன்மை
குதூகலிக்கும் வேளையிது
நாட்டுயர்வில் நம்மவர்கள்
நனிசிறக்கும் காலமிது.

வாட்டமுறாது மாந்தர்
வாழவழி சமைக்கும்
தேட்டம் தெருட்டவல்ல
தெப்பமிதே இப்புவியில்.

வாழ்வின் அடித்தளத்தில்
வாதைப் படுபவர்கள்
தாழ்வின்றி வாழ்வமைக்க (த்)
தாரணியே தலைநிமிரும்.

மானா எனும்தகையோன்
மனதில் துளிர்விட்ட
தேனாய் இனித்திடும்நல்
தெளிந்தநீ ரோடையிதே!

மக்களின் சேவையே நல்
மகேஸ்வரன் சேவையாக
சிக்கனக் கடன்வழங்கும்
சீரியகூட்டு றவேயாகும்.

பொருளாதா ரத்துடனே
பொற்பும் பொலிந்தொளிர
அருமருந்தாய் அவனிதனில்
ஆட்சியது மாட்சிபெறும்.

வாழ்வு வளம்பெறவே
வனிதையரின் துயர்துடைத்து
தாழ்வின்றித் தரமுயர (த்)
தாங்கும் தகவொளிரும்

கல்விக் கடல்நீந்தும்
கண்மணிகள் உயர்வுக்கு
எல்லையில் லாதுதவும்
ஏற்றம் எழிலீயும்.

எழில்கொஞ்சும் சமுதாயம்
ஏற்றம் பெற்றுப்பூம்
பொழிலாகப் பொலிந்திடவே
பொன்னகராய் நின்றிலங்கும்.

தன்னலமற்ற சேவை
தாரணி பெற்றுயர (க்)
கன்னலாய் சங்கமீயும்
கருத்தது நிலைத்துவாழும்!

மக்களின் உயர்வுக் காக
மகிழ்வுடன் சேவை செய்யும்
சிக்கனகூட் டுறவுச்சங்கம்
சிறப்புடன் ஆற்றும்சேவை
விக்கினம் இல்லா வாழ்வை
விரும்பிய வண்ண மீய
தக்கநல் வாழ்வு தந்து
தாரணி தனிலே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமே வாழீ.



வி.சிவசரணநாதன்.
ஜே-300 சாவ. நகர்.
கிராம அலுவலர்.

1992ல் சாவகச்சேரி நகர்ப்பகுயில் - டச் வீதியிலே
சேவைகள் செய்திட வந்துதித்த சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமே
அனைவரும் போற்றிடவே 'ஸ்ரீ பழனி' எனும் பெயரினிலே
குடும்பத்தில் இழப்புக்கள் வந்துவிட்டால் பிள்ளைகளுக்கு உதவிகள் பல செய்து
கல்வி கற்க உறுதுணையாய் முன்னேற்றும் சங்கமே
மக்களின் சேவையை முன்னேற்றமாக்கக் கருதி மனங்கோணாது செய்திடுவாய்!

நேரம் தவறாது கூட்டங்களை ஒழுங்காக நடாத்தி
நேர்மையுடன் மக்களுக்கு சேவைசெய்து முன்னேற்றுவதுடன்
மாணாக்கர் பெற்றோர் விதவைகள் முதியோர்கள் எனப் பற்பல
மக்களையும் அரவணைத்து வழிகள் பலவற்றை செய்த சங்கமே!

ஆண்டுகள் பற்பல செல்லச்செல்ல வளர்ச்சிகளோ எண்ணில் அடங்காதவை
ஆன்மிக சிந்தனையோடு அனைவரையும் ஒன்றிணைத்து
தேவைகளை இனங்கண்டு ஏணியாக நின்று உதவிகள் புரியும் சங்கமே
உனைவாழ்த்த எமக்கோ பக்கங்கள் போதாது நீ என்றும்
செந்நியிலே சீர் சிறப்பாய் வாழ பல்லாண்டு வாழி வாழி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைமரமாய் நின்று வளவாழ்வளிப்பாய் வாழ்க!



பொ.தெய்வேந்திரன்.
ஓய்வுநிலை தபாலதிபர்.
மட்டுவில்.

சிறி பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் வாழ்க!
சிறப்பான சேவையாற்றிச் சீர்மை பெற்று வாழ்க!
அறிவாளன் விவேகாவின் அவாவால் எழுந்தாய் வாழ்க!
வறிய மக்கள் வாழ்வுயர வந்துதித்தாய் வாழ்க!

அறநெறி பிறழாது அனைவருக்கும் சமநீதி தருவாய் வாழ்க!
குறிக்கோள் கூட்டுறவு! கொள்கையோ நாட்டுயர்வு! கருவதுவானாய்
வாழ்க நெறியமைத்து இலக்கெய்த நேர்மையோடியங்குவாய் வாழ்க!
சிறி பழநி ஆண்டவரின் சிறப்பாசி பெற்றினிதே வாழ்க!

தையல்மெசின் கடன் தாராளமாய்த் தந்தாய் வாழ்க!
தையலர் வாழ்வில் தைரியமூட்டினாய்! வாழ்க!
மெய்யான கல்வி மேம்படவே உதவி நின்றாய்! வாழ்க!
வையகத்தில் வாழ்வொளிர வழிவகுத்தாய்! வாழ்க!

சிக்கனக் கடன் தந்தே சுயதொழில் விருத்திசெய்தாய்! வாழ்க!
சைக்கிள் கடன் தந்தே சௌகரிய வாழ்வு தந்தாய்! வாழ்க!
பக்குவமாய் பிள்ளைகள் படித்திடப் பரிசில் பல தந்தாய்! வாழ்க!
ஊக்கமாய்ச் சேமிக்க உறுதுணையாய் நின்றாய்! வாழ்க!

அன்ரனாக்கடன் அடுப்புக்கடன் அலுமாரிக்கடன்
மின்சாரப்பொருட்கடன் மிருதுவான கதிரைக்கடன்
என்றே எண்ணற்ற கடனுதவி ஏந்திழையர் தோழனாய்
இன்றுனக்கு வயது இருபதன்றோ இன்னும் பல்லாண்டு வாழ்க!

ஏழைமக்கள் வாழ்வில் எழுகதிராய் உதித்தாய்! வாழ்க!
உழைக்கும் மக்கள் வாழ்வினை உயர்த்தினாய்! வாழ்க!
மழைபோல வந்து மாந்தர் துயர் தீர்த்தாய்! வாழ்க!
வாழைமரமாய் நின்றே வளவாழ்வளிப்பாய் வாழ்க! வாழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரமளிக்கும் நடமாடும் தெய்வம்.



செல்வி.ராஜினி துரைராஜசிங்கம்.
உயர் தொழில்நுட்பக் கல்லூரி.
யாழ்ப்பாணம்.

பெண்களை
நிமிர்ந்த நடையோடும்
நேர் கொண்ட பார்வையோடும்
தன்னம்பிக்கையோடும்
வேறொருவரிடம்
கை நீட்டி நிற்காமல்
சொந்தக்காலில்
சுயமாய் வாழ வைக்கும்
சிக்கன கடன் உதவியே!
எம்மை ஊக்குவிக்க
பரிசில்களும்
எமது பிள்ளைகள்
உயர்தரக் கல்வியில்
சித்தியெய்தினால்
அவர்களை ஊக்குவிக்க
அவர்களுக்கு
ஊக்குவிப்புக்களும்
ஆதரவற்றோர்
அநாதைகள்
விதவைகளின்
வாழ்வாதார
நடவடிக்கைக்கு
தையல் இயந்திரங்களையும்
அவசர தேவைக்கு
குறைந்த வட்டியில்
கடன்களையும்
வழங்கும்
சிக்கன கடனுதவி
பெண்களுக்கு
வரமளிக்கும்
கண்முன்னே
இருக்கும்
நடமாடும்
தெய்வம்...

இன்றைக்கு
மட்டுமல்ல
என்றைக்கும்
பெண்களை
வாழவைத்துக்
கொண்டிருக்கும்
சிக்கன கடனுதவ
தனது நூல்
வெளியீடு
மட்டுமன்றி
பல நிகழ்வுகளை
செய்ய வேண்டும்
என்றும்
அதன் பணிகள்
செவ்வனே நடைபெற
வேண்டும் என்றும்
வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனத்தின் மைந்தர்கள்.



இ. முரளி.
ஆண்டு 11
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தென்மராட்சி மண்தனிலே கல்லாய்க் கிடந்து
கலையாய் வெளிவந்து காண்பவர் தம்
எல்லாப் புலனும் ஒடுங்கி உன்னகத்தே சேர
பல்லாயிரம் பணி செயத சிக்கன கூட்டுறவே!

வானிலே உலாவரும் வெண்ணிலா போன்று
ஆழ் கடலில் மிதக்கின்ற ஆகாயத் தாமரை போன்று
தாயவளின் கருவறைக்குள் சிசு வாழ்வது போல்
என் சிக்கன கூட்டுறவு மடியிலே உறுப்பினர்கள்!

ஏழையின் துன்பங்கள் சொல்லிட முடியாச் சோகங்கள்
இருந்தும் உன் மடியிலே எம்மை
சந்தோஷத்தில் ஆழ்த்துவதும் - இக்
கூட்டுறவே சிக்கன கூட்டுறவே!

அன்று மகாலிங்கம் விவேகானந்தன் என்பவரால்
உருவான சங்கம் இன்று ஒரு பூவானது
எப்படி வண்டுகளை வரவேற்பது போல வண்டுகளுக்கு
தெவிட்டாது தேனை வழங்குகின்றது!

பத்து மாதம் சுமந்த அன்னையர்க்கு பணிவிடை செய்வது
பலனுண்டு அதே போல் இருபது ஆண்டுகளாக - எமக்கு
எவ்வளவோ உதவிகளைச் செய்து வருகின்ற கூட்டுறவுக்கு
நாம் என் செய்வோம் நூறு கண்டு வாழ வாழ்த்துகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி எம் வாழ்வின் வசந்தங்கள்.



செல்வி. தர்சிகா சத்தியசீலன்
உயர்தரம்,
மகளிர் கல்லூரி சாவகச்சேரி.

இங்கிதமாய் வாழ்ந்தும் எமக்கில்லை இன்பங்கள்
டெங்கு எனும் நோயாலே அளப்பரிய துன்பங்கள்
எங்கெல்லாம் கேட்கிறதே மரண ஓலங்கள்
உங்களுக்கும் வந்திடாமல் காத்துக்கொள்ளுங்கள்.

அங்கங்கே பள்ளங்களில் நீரைப்பாருங்கள்
அங்கெல்லாம் நுளம்புகளும் தெரிந்துகொள்ளுங்கள்
தேங்கி நிற்கும் நீரை எல்லாம் தடவிடுங்கள்
உங்களுக்கும் பாதுகாப்பு உணர்ந்துகொள்ளுங்கள்.

ஓங்கிநிற்கும் பொந்தினிலே நீரைப்பாருங்கள்
அருகில் உள்ள மண்ணை அள்ளிப் பொந்தினில் நிரப்புங்கள்
ஆங்காங்கே கிடக்கிறதே குப்பைக் கூழங்கள்
அதைஎல்லாம் புதைதோண்டிப் புதைத்துவிடுங்கள்.

தேவையற்ற பாத்திரத்தில் நுளம்புக்கூட்டங்கள்
கோம்பையிலும் சிரட்டையிலும் நுளம்புக் குடும்பிகள்
அனைத்தையும் அழித்திடவே உறுதிகொள்ளுங்கள்
அடியோடு அழிந்திடும் நுளம்புப்பெருக்கங்கள்.

ஈயினாலே வந்திடும் பெரியதாக்கங்கள்
நோய்தனையே உண்டாக்கும் தீயகிருமிகள்
வாய்வழியே சென்றிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்
நோய் எம்மை அணுகாது காத்துக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுதன்னை எப்போதும் மூடிவையுங்கள்
உண்ணுமுன் கைதனையே கழுவிக்கொள்ளுங்கள்
கொதிநீரை ஆறவைத்து தினமும் குடியுங்கள்
ஆரோக்கியமாய் வாழ்ந்திடப் பழகிக்கொள்ளுங்கள்.

வீதியோரம் விற்கப்படும் உணவுப்பண்டங்கள்
வியாதிகளை கொண்டுவரும் தவிர்த்துக்கொள்ளுங்கள்
வாந்திபேதி வந்திடாது காத்துக்கொள்ளுங்கள்
வருமுன் காக்கவேண்டும் புரிந்துகொள்ளுங்கள்.

நாளை நாளை என்றிராமல் செய்துமுடியுங்கள்
நாளைவரும் மரணத்தை விரட்டியடியுங்கள்
இன்னொருவர் தயவினிலே குளிர்காயாதீர்கள்
இப்பொழுதே செயலாற்றத்தொடங்கிவிடுங்கள்.

அயலவரை உதவிக்கு அணைத்துக்கொள்ளுங்கள்
அக்கம்பக்கம் துப்பரவாய் வைத்துக்கொள்ளுங்கள்
அழிக்கவரும் நோய்தனையே அடித்துவிரட்டுங்கள்
ஆனந்தமாய் வாழ்ந்திடலாம் நினைத்துப்பாருங்கள்.

சுகாதாரப்பகுதியினரின் சொல்லைக் கேளுங்கள்
சொன்னவற்றை செயலில் ஆற்றி இன்றே காட்டுங்கள்
நோய் எதுவும் வந்திடாமல் காத்துக்கொள்ளுங்கள்
இங்கிதமாய் வாழ்ந்திடலாம் அறிந்துகொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுணாவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி.



திருமதி .சாந்தமலர்.செல்வராஜா.
தலைவர்

ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றி இரண்டிலே
சாவகச்சேரி நகரின் டச் வீதியிலே
ஏழைகளின் உன்னத தோழனாய் வந்துதித்த
ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமே.

ஊரான் மகாலிங்கம் விவேகானந்தனின் முயற்சியின் பயனாக
கிராம அலுவலர் இராசரத்தினம் தலைமையிலே
அகிலாண்டம் சன சமூக நிலையத்திலே
கூட்டுறவுச் சங்கமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டாயே.

உன் சேவைகள் அளப்பரியது கடனுதவி மட்டுமல்லாது
மக்களின் அத்தியாவசிய தேவைகளையும் பூர்த்தி செய்து
மாணவர்களின் கல்வியின் உயர்ச்சியிலே அக்கறை கொண்டவனாய்
கௌரவ நிகழ்வுகளையும் நீ செய்து வந்தாய்.

கவர்ச்சிமிக்க சங்கமாய் மக்களை கவர்ந்திழுத்தாய்
உன் சேவை அளப்பரியது கடனோடும் கௌரவிப்போடும்
மட்டுமல்ல சிறார்களின் விளையாட்டிலும் அக்கறைகொண்டு
அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்தது அளப்பரியது.

உன் சேவை என்றென்றும் பாராட்டத்தக்கது
உதவும் கரத்தினை நீ நீட்டி உதவிகள் செய்தவனே
இருபதாண்டுகளைக் கண்ட எழில் மிகு சங்கமாய்
நற் பொலிவுடன் என்றென்றும் வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலநூறு ஆண்டுகள் வாழ்க என வாழ்த்திசைப்போம்!



செல்வன்.சி.யசோக்குமார்.
க.பொ.த. உயர்தரம்.
சாவ- இந்து கல்லூரி

மாம்பழம் கேட்டு அன்று
மனமுடைந்து பழநி அமர்
மாமுருகன் பெயரில் ஒருசங்கம்
சிக்கன கடனுதவுச் சங்கம்
அங்கத்தவர் நலன் கருதி
அவர் குடும்ப நலன் எண்ணி
நல்லவர்கள் இதனை இங்கு
அமைத்தனரே
சிலபேரோடு தொடங்கி
இன்று விரிவடைந்து-
நாடறிந்த சங்கமென மிளிரும்.
எல்லோரும் எல்லாமும்
எய்தவும்
தன் பணியை இச் சங்கம்
தொடர்ந்தேவரும்!
அரச பதிவு பெற்று
ஆல மரமாய்த் தழைத்து
விழுதோக்கி நிற்கும் இவ்
வமைப்பை
ஆண்டு தோறும் புதிய
நிர்வாகம் பொறுப் பேற்று
அரிய பல பணி செய்து
உயர்த்தும்!
அங்கத்துவ அன்பர்களின்
குடும்பங்கள் முன்னேற –
இல்லாமை இல்லாமல் நீங்கி
எல்லோர் தேவைகளும்
நிறைவேற
சுய தொழில்கள் பெருக
சுதந்திரமாய் வாழ
கை கொடுக்கும் தெய்வமென
நிற்கும்
"ஸ்ரீ பழநி" –
சிக்கன கடனுதவு கூட்டுறவுச்
சங்கமது காணீரோ!
பல நூறு ஆண்டுகள்
வாழ்க என வாழ்த்திசைப்போம்!

கல்விச் சேவை கடவுளின்
சேவை
அதை உயர்த்தவும்
எங்கள் சங்கம் உறுதி ஏற்றது
தரம் ஐந்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப் பரிசில் தடை
வெல்லும்
மாணவர்க்கு
விழாவெடுத்துக் கௌரவித்தும்
பரிசில் வழங்கி
ஊக்குவித்தும்-
ஓஎல் ஏஎல் லில
உயரடைவை அடைகின்ற
மாணவரின்
உயர்கல்வி உருத்தெழவே
ஆனபல உதவிகளை
அன்னை போல் வழங்கி நின்று
அரவணைக்கும் சங்கமிது
வாழியவே!

" ஸ்ரீ பழநி"
சிக்கன கடனுதவு சங்கமது
ஆல் போல் தழைத்து
அறுகு போல் வேரூன்றி
அன்னைத் தமிழ் போல்
அருளோடு வாழியவே!
வாழ்க! வாழ்கவென
வாழ்த்திசைத்து எம் சங்கம்
ஊக்கமுற நாமும்
உழைப்போமே!
ஊக்கமுற நாமும்
உழைப்போமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நின் பணியாலே நன்மைகள் தொடரும்.



வை.நாகநாதன் (அதிபர்)
யா/ குடமியன் அ.த.க.பாடசாலை,
வரணி.

சிக்கன கடனுதவு
    கூட்டுறவுச் சங்கத்தின்
சிக்கனச் செயற்பாட்டில்
    நன்மையுண்டு தீமையில்லை
என்றுணர்ந்த விவேகானந்தன் - உனையாக்க
    பக்க பலத்திற்காய்ப் பலபேரை அணுகி நின்றார்.
தக்க தருணத்தில் திரு வை இராச
    இரத்தினம் கைகொடுத்தார்
பக்க பலமாய் பல பேர் திரண்டிருக்க
    ஸ்ரீ பழநி ஆண்டவரின் அருளும் சேர்ந்திருக்க
உற்ற நேரத்தில் உதித்ததுவே
    ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

சிக்கனத்தின் சிறப்புதனை
    எக்கணமும் மறவாதே
தக்க தருணங்களைப்
    பக்குவமாய்ப் பயன்படுத்தி
ஊக்கமுடன் உழைத்ததிலே
    தேக்கி வைத்த சிறு தொகையை
சிறுகச் சேமித்து
    பெருவாழ்வைப் பெற்றிடணும்
ஏக்கப் பெருமூச்சும்
    சிக்கலான எம்வாழ்வும்
பக்க பலமிருந்தால்
    சுக்குநூறாய் ஆகிவிடும்- என்ற
கூட்டுறவுக் கொள்கையதை
    நாடுயரப் பயன்படுத்தும்
ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கமே நீ வாழி வாழி.

நல்ல தலைமைகளால்
செல்லமாய் வளர்ந்துவரும்
வல்ல நிறுவனம் நீ
பல்லுதவி செய்து நின்றாய்
ஒரு இலட்சம் ரூபாவரை
கடனுதவி வழங்கி நின்று
பேருதவி புரிகின்றாய்-அங்கத்தவர்
இடர் களைந்து செல்கின்றாய்
அங்கத்தவர் வருகையை
அவையிலே அதிகரிக்க
ஊக்கப் பரிசில்களை
நல்லூரமாய் வழங்கி நின்றாய்
சங்க உறுப்பினர் தம்
குடும்ப வாழ்விற்கு
உரிய சில பொருட்களை
கடன் மூலம் பெறவைத்தாய்
கல்வி வளர்ச்சிக்காய்
ஊக்கப் பரிசில்கழளை வழங்கி வரும்
ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவிக்
கூட்டுறவுச் சங்கமே

அநாதைகட்கும் ஊனமுற்றோருக்கும்
பணவுதவி செய்வதோடு
சுயதொழில் கடமைக்கும்
சிபார்சுகள் செய்கின்றாய்
சங்க உறுப்பினரின்
நன்மைக்காய் உழைத்துவரும்- நீ
மங்காப் புகழ் படைத்த
சிறந்த நல் வழிகாட்டி
ஆல் போல் நீ வளர்ந்து
அறுகு போல் வேரூன்றி
சீலமுடன் நீ வளர
வாழ்த்துகிறேன் வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையுயர் பணியொடு... நீடூழி வாழ்கவே...!



கவிஞர் த.நாகேஸ்வரன்
கச்சாய் வீதி
சாவகச்சேரி.

"பழநி" அமர் முருகனின் நாமத்தோடு
பாங்குறவே நற்பணிகள் ஆற்றும் மன்றம்
இளநிலையாய் என்றைக்கும் எங்கள் மண்ணில்
இனியநறுஞ் சேவைகளால் இதமே வாழ்க!

தன்னினிய உறுப்பினர்கள் தரமாய் வாழ
தயவுடனே கடனுதவி கல்விச்சேவை
பன்னரிய பரீட்சைப் பேறுபெற்றோர்க்கு
பரிசில்கள் வாழ்த்துக்கள் பலவும் ஈவாய்!

சுயமுயற்சி செய்வோர்க்கு சுவைகள் சேர
சுந்தரமாம் நல்லுதவிக் கரங்கள் நீட்டி
தயவுடனே தரமுயர்ந்து அவர்கள் வாழ
தகைமைபல ஈந்திடுவாய்! தாயே வாழ்க!

கடமையொடு கண்ணியம் நற் கட்டுப்பாடு
கலக்கமிலா உறுதியொடு கலையும் ஈந்து
திடம்பெற்று எல்லோரும் திகழச் செய்வாய்
திருவுயரத் திசைபுகழ வாழ்க! வாழ்க!

பழனியாண் டவருன்னை பரிந்தே வாழ்த்த
பண்புடைநல் லுறுப்பினர்கள் பணிந்தே போற்ற
இளமையொடு இனியபல நூறாம் ஆண்டு
இருநிலமும் போற்றிடவே இனிது வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்

செல்வி. சௌக்கியா திருநாவுக்கரசு
முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேச செயலகம் முல்லைத்தீவு.

## கருத்துக்களும் கூறியவர்களும்

1. உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள் - கார்ல் மாஸ்க்
2. செய் அல்லது செத்து மடி - மகாத்மா காந்தி
3. மக்களாட்சி என்பது மக்களால் நடத்தப்படும் ஆட்சி - ஆபிரகாம் லிங்கன்
4. ஒன்றே குலம் ஒருவனே தேவன் - திருமூலர்
5. புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் - பாரதிதாசன்
6. சுயராஜ்யம் என்பது பிறப்புரிமை - பாலகங்காதர திலகர்
7. தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் - முத்துராமலிங்க தேரர்
8. துப்பாக்கிக் குண்டைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது வாக்குச் சீட்டு - ஆபிரகாம் லிங்கன்
9. கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய் - அம்பேத்கார்
10. இந்தியா இந்தியர்களுக்கே - தயானந்த சரஸ்வதி
11. சுதந்திரம் என் பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் - திலகர்
12. டெல்லி சலோ - நேதாஜி
13. இன்குலாப் ஜிந்தாபாத் - பகவத் சிங்
14. இரத்தத்தை கொடுங்கள் சுதந்திரம் தருகிறேன் - நேதாஜி
15. மழையிலிருந்து வரும் ஒவ்வொரு துளி நீரையும் கடலுக்குள் வீண்விரயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாமல் பயன்படுத்தல் - பராக்கிரமபாகு

# இலங்கையின் புள்ளி விபரத் தகவல்கள் சில...!

## அமைவிடம்

1. வட அகலக்கோடு 5° 55' இற்கும் 9° 50' இற்கும் இடையில்
2. கிழக்கு நெடுங்கோடு 79° 42' இற்கும் 81° 53' இற்கும் இடையில்
3. வடக்கு தெற்காக 432 km (270 மைல்கள்) (பேதுறு முனையில் இருந்து தேவேந்திர முனைவரை)
4. மேற்குக் கிழக்காக 224 km (140 மைல்கள்)
5. ஆகக்கூடிய உயரம் 2525 m (8281 அடி)

## பரப்பு

1. மொத்தப் பரப்பு - 65610 $km^2$ / 65525$km^2$
2. நிலப்பரப்பு - 62705$km^2$
3. உள்நாட்டு நீர்ப்பரப்பு - 2905$km^2$
4. இலங்கையைச் சூழவுள்ள கடல் எல்லை - 12 கடல் மைல்

## நிர்வாகக் கட்டமைப்பு

1. மாகாணங்கள் - 9
2. மாகாண சபைகள் - 9
3. நிர்வாக மாவட்டங்கள் - 25
4. தேர்தல் மாவட்டங்கள் - 22
5. கல்வி மாவட்டங்கள் - 31
6. உள்ளூராட்சிச் சபைகள் - 335
7. பிரதேச செயலர் பிரிவுகள் - 332
8. மாநகர சபைகள் - 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பிரதேச சபைகள் - 271

10. கிராம சேவகர் பிரிவுகள் - 15000 (ஏறத்தாழ)

## குடித்தொகையின் அமைப்பு (1981 தொகை மதிப்புப்படி)

| இனரீதியில் % | | மதரீதியில் % | |
|---|---|---|---|
| 1. சிங்களவர் | - 73.9 | 1. பௌத்தர் | - 69.3 |
| 2. இலங்கைத் தமிழர் | - 12.7 | 2. இந்துக்கள் | - 15.5 |
| 3. இந்தியத் தமிழர் | - 5.5 | 3. இஸ்லாமியர் | - 7.6 |
| 4. முஸ்லிம் | - 7.1 | 4. ரோமன் கத்தோலிக்கம் | - 7.6 |
| 5. ஏனையோர் | - 0.8 | 5. ஏனையோர் | - 0.1 |

**துறை ரீதியாக**

1. நகரம் - 21.7
2. கிராமியம் - 72.2
3. பெருந் தோட்டம் - 6.3

## பொது அறிவு

1. உயரமான நீர் வீழ்ச்சி எங்கே உள்ளது?
   வெனிசுலாவில்

2. இலங்கையில் முதன் முதலில் சிங்களத்தில் வெளி வந்த செய்தித்தாள் எது?
   சிங்களகட

3. சமாதானத்திற்கு வெண்புறாவை பயன்படுத்திய ஓவியர் யார்?
   கன்னங்கரா

4. இலங்கையின் முதல் சபாநாயகர் யார்?
   சீதா மொலமுரே

5. உலகில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதல் நாடு எது?
   நியூசிலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறியீடுகள்

பெற்றோலிய கூட்டுத்தாபனம்

இலங்கை மின்சார சபை

Telecom

எரிபொருள் நிரப்பு நிலையம்

இலங்கை வங்கி

இலங்கை மத்திய வங்கி

மக்கள் வங்கி

மின் தாக்குதல் ஏற்படக்கூடிய இடம்

இலங்கை தர நிர்ணய டீ இலட்சினை

உணவகம்

தொலைபேசி வசதி

விமான நிலையம்

ஈரலிப்பிலிருந்து பாதுகாக்கவும்

ஏப்போதும் மேல் நோக்கி வைக்கவும்

உடையக் கூடியது

நச்சுத் தன்மையானது

ஆண்களுக்கான மலசல கூடம்

பெண்களுக்கான மலசல கூடம்

ஊனமுற்றோர்

சிற்றுண்டிச்சாலை

கவனமாக பாதுகாக்கவும்

கவனமாக கையாளுங்கள்

Bar Code

மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 20வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலய ஆதரவுடன் சென்ற 10ம் 11ம் திகதிகளில் யா/ டிறீபேக் கல்லூரியில் 15 வயதிற்குட்பட்ட 19 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகளுக்காக நடாத்தப்பட்ட

# சதுரங்கப் போட்டிகளின் பெறுபேறுகள் 2012.

## 15 வயதிற்குட்பட்ட ஆண்கள்,பெண்கள்.

1) 1ம் இடம்:-

தர்மலிங்கம் பாசுபதன். (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.)

2ம் இடம்:-

சிறிதரன் பிருந்தயன். (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.)

3ம் இடம்:-

சிறிராஜசிங்கம் பிரதீப். (சாவகச்சேரி டிறீபேக் கல்லூரி.)

2) 1ம் இடம்:-

கோபிகா கந்தவனம். (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.)

2ம் இடம்:-

பிரதீபா புனிதராசா. (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.)

3ம் இடம்:-

ஜெயதாரணி ஜெயகணேசன். (சாவகச்சேரி டிறீபேக் கல்லூரி)
http://www.crownawards.com/StoreFront/CRM11-F.Cricket.Cup_Trophies.Manifest_METAL_Cups_With_Figurine.prod.

3ம் இடம்:-

பிரியங்கா குமாரசிங்கம் (யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 வயதிற்குட்பட்ட ஆண்கள்.பெண்கள்.

1) 1ம் இடம்:-

சிவப்பிரகாசம் வினுஷன்.

யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

2ம் இடம்:-

மகேஸ்வரன் சர்வேசன்.

யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கலலூரி.

3ம் இடம்:-

பாலச்சந்திரன்.

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2) 1ம் இடம்:-

சயந்தி சர்வானந்தன்.

யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

2ம் இடம்:-

மிதுனா அருந்தவராசா.

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

3ம் இடம்:-

நிலக்சி விநாயகம்பிள்ளை.

யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைவாசி உயர்வு.



.க.வைகுந்தன்.
கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி

நீ ஏறிக்கொண்டே – போனால்
நாளை ஏழையின்
உணவு எட்டாக்கனியோ?

உன் ஏற்றம்
ஏழைக்கோ தாக்கம்
இதுவே இலங்கை
நாட்டின் வழக்கம்.

பசியறியாதவனுக்கு
உன் ஏற்றம் தூசு
பசியறிந்தவனுக்கு
உன் ஏற்றம் பெரிசு.

ஒரு வேளை உணவே
ஆகாரம்
ஊன் ஏற்றத்தால் என்ன
ஏழையின் ஆகாரம்.

ஏறத் தெரிந்த உன்னால்
இறங்கத் தெரியாதா
நீ இறங்கியதாய்
சொன்னாலும் உன்னை இறக்க
வர்த்தகர்கள் தயாரில்லை.

## எக்காலம்?

மாடிமனை வீடிழந்து
மாண்பு மிகு நாடிழந்து

கூடுவிட்டுப் பறந்தவர்கள்
கூடுவது எக் காலம்?
தேடிவைத்த செல்வ மெலாம்
தேய்ந்தழிந்து போன பின்னர்
வாடிவதங்கி நிற்போர்
வளம் காண்ப தெக்காலம்?

வாய்மூடி மௌனிகளாய்
வளம் சேர்க்க மறுத்திடுவோர்
தாய்நாட்டின் மகத்துவத்தை
தாங்கிடுதல் எக் காலம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 20 வருடங்கள் சங்கத்தை வழிநடாத்திய நிர்வாக சபைகளின் விபரங்கள்

| 24.10.1992 ல் ஆரம்பம் | தலைவர் | செயலாளர் | பொருளாளர் | உப.தலைவர் | 1<br>2<br>3 |
|---|---|---|---|---|---|
| 24.10.1992 -31.10.1993 | இ.இராஜகுலசிங்கம் | ம.விவேகானந்தன் | சி.ரவீந்திரநாதன் | க.இரத்தினசோதி | பா.சரஸ்வதி, நா.மாலாவதி<br>வி.அனுரூயா |
| 01.01.1994 -31.12.1994 | இ.இராஜகுலசிங்கம் | ம.விவேகானந்தன் | சி.ரவீந்திரநாதன் | க.இரத்தினசோதி | சி.மகாலிங்கம், பா.கோமதி<br>வி.அனுரூயா |
| 01.01.1995 -31.12.1995 | இ.இராஜகுலசிங்கம் | ம.விவேகானந்தன் | சி.ரவீந்திரநாதன் | க.இரத்தினசோதி | சி.மகாலிங்கம், பா.கோமதி<br>வி.அனுரூயா |
| 01.01.1996 -31.12.1996 | இ.இராஜகுலசிங்கம் | ம.விவேகானந்தன் | சி.ரவீந்திரநாதன் | க.இரத்தினசோதி | சி.மகாலிங்கம், பா.கோமதி<br>வி.அனுரூயா |
| 01.01.1997 -31.12.1997 | சி.ரவீந்திரநாதன் | ம.விவேகானந்தன் | க.இரத்தினசோதி | க.நடராசா | த.குமாரதேவி, மு.தவமணி<br>வை.ரவீந்திரராணி |
| 01.01.1998 -31.12.1998 | சி.ரவீந்திரநாதன் | ம.விவேகானந்தன் | க.இரத்தினசோதி | க.நடராசா | த.குமாரதேவி, மு.தவமணி<br>வை.ரவீந்திரராணி |
| 01.01.1999 -31.12.1999 | சி.ரவீந்திரநாதன் | ம.விவேகானந்தன் | க.இரத்தினசோதி | ச.உருத்திராதேவி | ஆ.சிவபாலச்சந்திரன், த.குமாரதேவி<br>வை.பரிமளம் |
| 01.01.2000 -31.12.2000 | சி.ரவீந்திரநாதன் | வை.பரிமளம் | க.இரத்தினசோதி | ச.உருத்திராதேவி | ஆ.சிவபாலச்சந்திரன், த.குமாரதேவி<br>கீ.மகேஸ்வரியம்மா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.01.2001 -31.12.2001 | ச.உ_ருத்திராதேவி | ம.விவேகானந்தன் | கீ.மகேஸ்வரியம்மா | ஆ.சிவபாலச்சந்திரன் | வி.அன்னபூரணிதேவி, வை.பரிமளம் சி.இராசையா |
| 01.01.2002 -31.12.2002 | ச.உ_ருத்திராதேவி | ம.விவேகானந்தன் | கீ.மகேஸ்வரியம்மா | ஆ.சிவபாலச்சந்திரன் | வி.அன்னபூரணிதேவி, சி.இராசையா இ.அனுஷா |
| 01.01.2003 -31.12.2003 | பெ.சண்முகநாதன் | ம.விவேகானந்தன் | கீ.மகேஸ்வரியம்மா | ஆ.சிவபாலச்சந்திரன் | நி.நளாயினி, கி.மனுநீதி வை.பரிமளம் |
| 01.01.2004 -31.12.2004 | ச.உ_ருத்திராதேவி | வை.பரிமளம் | வி.விமலாம்பிகை | கி.மனுநீதி | கி.கேமமாலினி, மு.கயலினி ச.கனகரத்தினம் |
| 01.01.2005 -31.12.2005 | பெ.சண்முகநாதன் | வை.பரிமளம் | வி.விமலாம்பிகை | கி.மனுநீதி | இ.அனுஷா, மு.கயலினி கு.சரஸ்வதி |
| 01.01.2006 -31.12.2006 | வை.பரிமளம் | மு.கயலினி | வி.விமலாம்பிகை | ச.உ_ருத்திராதேவி | ச.கீர்த்திகா, நி.நளாயினி, த.பரமேஸ்வரி |
| 01.01.2007 -31.12.2007 | வை.பரிமளம் | மு.கயலினி | வி.விமலாம்பிகை | இ.அனுஷா | நி.நளாயினி, ச.கீர்த்திகா கு.சரஸ்வதி |
| 01.01.2008 -31.12.2008 | வை.பரிமளம் | மு.கயலினி | வி.விமலாம்பிகை | இ.அனுஷா | கோ.அருள்தேவி, ப.ஸ்ரீகாந்தரூபி கு.சரஸ்வதி |
| 01.01.2009 -31.12.2009 | சூ.நந்தாயினி | அ.ஸ்ரீதுஷாந்தி | ம.விவேகானந்தன் | வை.பரிமளம் | மு.வதனாதேஸ்வரி, நி.நளாயினி கு.சரஸ்வதி |
| 01.01.2010 -31.12.2010 | ச.உ_ருத்திராதேவி | அ.ஸ்ரீதுஷாந்தி | ம.விவேகானந்தன் | வை.பரிமளம் | நி.நளாயினி, கு.சரஸ்வதி ப.ஸ்ரீகாந்தரூபி |
| 01.01.2011 -31.12.2011 | ம.விவேகானந்தன் | அ.ஸ்ரீதுஷாந்தி | ப.ஸ்ரீகாந்தரூபி | சூ.நந்தாயினி | சி.நந்தினி, இ.தர்சினி வை.பரிமளம் |
| 01.01.2012 -31.12.2012 | ம.விவேகானந்தன் | து.சுஜீதா | ப. ஸ்ரீகாந்தரூபி | வை.பரிமளம் | உ_மகிந்தா, அ.ஸ்ரீதுஷாந்தி சூ.நந்தாயினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமுருகா

# ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
## டச் வீதி – சாவகச்சேரி
## கடந்த 20 வருடகால கணக்காய்வு விபரங்கள்

| கணக்காய்வுக் காலம் | கணக்காய்வாளர் | இலாபம் | நட்டம் |
|---|---|---|---|
| 24.10.1992 - 31.12.1993 | திருமதி. பி. சண்முகம் | 728.30 | |
| 01.01.1994 - 31.12.1994 | திருமதி. பி. சண்முகம் | 6770.17 | |
| 01.01.1995 - 31.12.1995 | திருமதி. பி. சண்முகம் | 7079.15 | |
| 01.01.1996 - 31.12.1996 | திருமதி. பி. சண்முகம் | 9912.80 | |
| 01.01.1997 - 31.12.1997 | திரு. மா. தயாகுமாரன் | 6554.89 | |
| 01.01.1998 - 31.12.1998 | திரு. மா. தயாகுமாரன் | 18941.91 | |
| 01.01.1999 - 31.12.1999 | திரு. மா. தயாகுமாரன் | 6986.01 | |
| 01.01.2000 - 31.12.2000 | திருமதி. சி. சிவயோகினி | | 9375.18 |
| 01.01.2001 - 31.12.2001 | திரு. மா. தயாகுமாரன் | | 7199.16 |
| 01.01.2002 - 31.12.2002 | திரு. மா. தயாகுமாரன் | 26093.31 | |
| 01.01.2003 - 31.12.2003 | செல்வி. த. மாலினி,<br>திரு. வி. சிவமாலன் | 15143.89 | |
| 01.01.2004 - 31.12.2004 | திரு. க. விஸ்ணுகரன் | 3694.49 | |
| 01.01.2005 - 31.12.2005 | செல்வி. ஜெ. குமுதாஜினி | 14324.42 | |
| 01.01.2006 - 31.12.2006 | திரு. சீ. சபேசன் | 23376.64 | |
| 01.01.2007 - 31.12.2007 | திரு. வி. சிவபாலன் | | 39223.89 |
| 01.01.2008 - 31.12.2008 | திருமதி. மு. ஷர்மிளா | 55.06 | |
| 01.01.2009 - 31.12.2009 | திருமதி. மு. ஷர்மிளா | 6102.64 | |
| 01.01.2010 - 31.12.2010 | திரு. பா.மு.முகமட் நஸ்ரின் | 6971.34 | |
| 01.01.2011 - 31.12.2011 | திரு. ஐ. மயூரன் | | 828.46 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2012ம் ஆண்டு சதுரங்கப் போட்டியின்போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2012 கூட்டத்தின் போது!




ஆன்மீகத்தில்!



ஊக்குவிப்பு வழங்கிய போது!



மக்கள் வங்கி கடன் வழங்கல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**கடன் மூலம் பொருட்கள் வழங்கிய போது!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# 2011 பொதுக்கூட்ட நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊக்குவிப்புத் தொகை வழங்கிய போது!









## 2008 பொதுக்கூட்டத்தின் போது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு மலர் சிறக்க வாழ்த்துகிறோம்...

சகல விதமான
ஆடைத் தெரிவுகளுக்கு

# குமரன் சில்க்ஸ்



நவீன சந்தை, சாவகச்சேரி.

---

மலர் சிறப்புடன் நிகழ வாழ்த்துகிறோம்.....

# சீதா ஜுவல்லறி



தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

01, நவீன சந்தை, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes from...

# ABI PHONE SHOP



Phone Sales
Repairing
Unlocking
Sim Cards

03, Kandy Road, Chavakachcheri.

Best wishes for prosperity from...

# UTHAYAA SILK PARK



Retail Dealers in Textile Specialist Sarees,
Shalwars & Jeans, Shirts

14, New Market Inside Chavakachcheri.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்...

# பூரணா மல்ரி சொப்



இலத்திரனியல் பொருட்கள்

பாடசாலை உபகரணப் பொருட்கள்

தொலைபேசி உபகரணங்கள்

202, கண்டி வீதி, சாவகச்சேரி.

வெளிவரும் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்...

# கதிரவன் இரும்பகம்



**சகல விதமான கட்டிட, இரும்புப் பொருட்களும்**

**இங்கே பெற்றுக்கொள்ளலாம்**

22, டச் வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறப்புடன் திகழ வாழ்த்துகிறோம்.....



# உதயன்

விவசாய உள்ளீடு, கால்நடை மருந்துகள்,
தீவனங்கள் விற்பனை நிலையம்

டச் வீதி, சாவகச்சேரி.

---

மலர் சிறக்க எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.......

# ஜெகா எலக்ரிக்கல்ஸ



சகல விதமான மின் உபகரணங்களை
பெற்றுக்கொள்ளலாம்



11, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishse from........

# FASHION INDIA

Ladies & Kids Wear
Sarees, Skirts & Tops
Chudithar Readymade
&Materials
All cream items
& Covering






No, 06,New Market, Chavakachcheri 077 8588886

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்..........

# அபிஷன் ஒட்டுத்தொழிலகம்

சகல விதமான
ஒட்டுவேலைகளும்
செய்து கொடுக்கப்படும்



டச் வீதி,
சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு:
077 9492238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறப்புடன் வெளிவர வாழத்துகிறோம்............

MANA TYPING & PHOTO COPY

மானா தட்டச்சு & போட்டோ பிரதி

ஆங்கிலத்திலும் தமிழிலும் தட்டச்சு செய்திடவும்

போட்டோ பிரதி செய்திடவும்

நாடவேண்டிய ஒரே இடம்







இல.39, டச் வீதி,
சாவகச்சேரி.

T. P. No: 0777033433

ஆண்டு மலர் சிறக்க வாழ்த்தும்..........

ராஜ்வேல்ஸ்

RASVELS

நவநாகரீக உடைகளுக்கு நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்







இல.24, நவீனசந்தை உட்புறம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறப்புடன் வெளிவர வாழத்துகிறோம்...........

# குகன் ஸ்ரூடியோ

தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, வாகன அனுமதிப்பத்திரம்
ஆகியவற்றுக்கான நிழற்படங்களை டிஜிற்றல் முறையில் படம் பிடிப்பதற்கு
அரசாங்க உத்தரவாதம் பெற்ற புகைப்படக் கலையகம்




**கண்டி வீதி,**

**சாவகச்சேரி.**

வெளியிடவிருக்கும் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்........

# விமலா இரும்பகம்

# VIMALA HARDWARE

**சகல விதமான இரும்பு வகைகளும்**

**பெற்றுக்கொள்ளலாம்**

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு:-
077 5562569
021 3007268


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு மலர் சிறக்க வாழ்த்துகிறோம்.......

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதிவு இல:J/1594-11.3.1972

இங்கே தரமான வெல்லம்
உற்பத்தி செய்யப்படுகிறது

டச் வீதி.
சாவகச்சேரி.

தொலைபேசி இல:
021 2270086
021 2313572

# சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

பதிவு இல:J/1551-14.2.1971

**எமது சங்கத்தின் பன்முகப்பட்ட சேவைகளாக!**

நுகர்ச்சிச் சேவை
கிராமிய வங்கிச்சேவை
எரிபொருள் நிலைய சேவை
அங்கத்தவர் கடன் சேவை

கண்டி வீதி,
சாவகச்சேரி.

தொலைபேசி இல:
021 3213282



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு மலர் சிறக்க வாழ்த்துகிறோம்...

# ஸ்ரீராம் ஆடையகம்

# SRIRAAM TEX

நவீன வடிவிலான
ஆண், பெண் இருபாலருக்குமான
ஆடைத் தெரிவுகளுக்கு
இன்றே நாடுங்கள்



இல.17, நவீன சந்தை,
சாவகச்சேரி
T.P.No: 0777069078

20 வது ஆண்டு மலர் சிறக்க வாழ்த்துகிறோம்.....

# முத்துக்குமரன் இரும்பகம்

# முத்துக்குமரன் அரிவு ஆலை

இங்கே,

கட்டிடப் பொருட்கள்,
தீந்தைகள், மரப்பலகைகள்,
தீராந்திகள், சிலாகைகள்,
ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.





இல.258, 260, கண்டி வீதி,
சாவகச்சேரி.


வெளிவரவிருக்கும் 20ம் ஆண்டு மலர் சிறக்க வாழ்த்துகிறோம்.....

# சிங்கம்ஸ்

இங்கே சகலவிதமான தையல் இயந்திரங்களும்
திருத்திக் கொடுக்கப்படும்.







டச் வீதி,
சாவகச்சேரி.

T.P.No: 0776686775


Dutch Road,
Chavakachcheri.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறப்புடன் நிகழ வாழ்த்துகிறோம்.....

# நியூ மல்ரி சென்ரர்



- Phone Item
- Photo copy
- Colour printing
- Books



05,டச் வீதி, சாவகச்சேரி.


*மலர் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகிறோம்.....*

# விஜேந்திரா ஸ்ரூடியோ

*மங்களகரமான நிகழ்வுகளுக்கான*

*வீடியோ, போட்டோ பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்*



அல்பம் டிசைனிங்
செய்து கொடுக்கப்படும்

10, சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

தொடர்புகளுக்கு:
077 6102603

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு விழா சிறக்க
வாழ்த்துகிறோம்



**கதிர்**

**வெல்டிங் வேக்ஸ்**

சகல விதமான இரும்பு
வேலைகளும் செய்து
கொடுக்கப்படும்

டச் வீதி, சாவகச்சேரி

மலர்
சிறக்க வாழ்த்துகிறோம்



# சிற்றி சலூன்

டச் வீதி, சாவகச்சேரி

மலர்
சிறப்புற மலர எமது
வாழ்த்துக்கள்

**சகல விதமான**

**அச்சக வேலைகளுக்கும்**

**திருக்கணித பதிப்பகம்**

டச் வீதி, சாவகச்சேரி

மலர் மணங்கமழ
மனமார வாழ்த்துகிறோம்

**சுடர் மல்ரி சென்ரர்**

**அன்**

**நெற்கபே**



டச் வீதி, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes from.....

Ultra Speed

Netcafe & Service point



23A,DUTCH ROAD, CHAVAKACHCHERI

Best wishes for

prosperity from...



Theva English Academy

Tutors in English & Sinhala
from the basic level

M.P.Shanmuganathan. J.P
& Sworn Translator.

Mrs.U.Shanmuganathan. J.P

Miss.V.Raveendrarani.

23,Dutch Road, Chavakachcheri

With the best compliments from....

KALAYAN MEDICAL CENTER

கலாயன் மெடிக்கல் சென்ரர்



பார்வையிடும் நேரம்:- தினமும் காலை

7.00-8.00 வரை.

39,டச் வீதி, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஐங்கரன் பேக்கரி சிவகாமி நெற்கபே
ஐங்கரன் மணிமண்டபம்



Wedding





SRI INKARAN BAKERY
SRI INKARAN WEDDING HALL
SIVAGAMY NETCAFE
T.P:-0212270241

டச் வீதி, சாவகச்சேரி
Dutch Road, Chavakachcheri

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org